
கவியின்
கனவு
கலைமாமணி, கவிஞர்
எஸ்.டி.சுந்தரம்

# கவியின் கனவு

*கலைமாமணி, கவிஞர்*
**எஸ்.டி. சுந்தரம்**

விற்பனை உரிமை:
**வேமன் பதிப்பகம்**
19, நியூ காலனி, ஜோசியர் தெரு
நுங்கம்பாக்கம், சென்னை-600 034
போன்: 28211134

**விக்னேஷ் வெளியீடு**
19, நியூ காலனி - சோசியர் தெரு,
(இரண்டாவது தளம்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

# நூல் விளக்கம்

நூல் பெயர் : கவியின் கனவு

ஆசிரியர் : **எஸ்.டி. சுந்தரம்**

பதிப்பு : 2005

மொழி : தமிழ்

பொருள் : நாடகம்

அளவு : 1 X 8 தெம்மி

எழுத்து : 11 புள்ளி

கட்டமைப்பு : வல்லட்டை

விலை : ரூ 75/-

பக்கங்கள் : 192

வெளியீடு : **விக்னேஷ் வெளியீடு**
19, நியூ காலனி,
சோசியர் தெரு
சென்னை - 34
தொலைபேசி : 28211134

ஒளியச்சு : **சகுராம் கிராபிக்ஸ்**
சென்னை - 24

மறுதோன்றி : **ரவிராஜா ஆப்செட்**
சென்னை - 14

## கவிஞர் எஸ்.டி. சுந்தரம் அவர்களின்

## வாழ்க்கை குறிப்பு

பிறப்பு : 22.07.1921

ஊர் : சேலம் மாவட்டம் ஆத்தூர்.

தந்தை : துரைசாமி அய்யா.

தாய் : பூங்கோதை அம்மாள்.

படிப்பு : 1933-இல் நவாப் இராஜமாணிக்கம் நாடகக் குழுவில் சேர்ந்தார். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், பட்டினத்தார் பாடல்கள், வள்ளலாரின் திருவருட்பா மனப்பாடம். இவரது தமிழ் புலமையைக் கண்ட நவாப் இராஜமாணிக்கம் அவர்கள் 1934-ஆம் வருடம் திருவையாறு அரசுக்கலைக் கல்லூரியில் சேர்த்தார். தமிழ் வித்வான் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ந்தார்.

குடும்பம் : 1948-இல் திருமணம். மனைவி எஸ்.டி.எஸ். ஜெய லட்சுமி அம்மாள். திரு. டாக்டர் மு. வரதராஜன் அவர்களின் தலைமையில் திருமணம் நடைப்பெற்றது. (ஒரு மகளும் மூன்று மகன்களும் வாரிசாக உள்ளனர்)

1942 : போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக தஞ்சையில் 9 மாதம் சிறைச் சென்றார்.

1943 : மீண்டும் நவாப் இராஜமாணிக்கம் நாடக கம்பெனியில் சேர்ந்தார்.

1945 : சக்தி கிருஷ்ணசாமியும், கவிஞரும் சேர்ந்து குருநாதர் ஆசியுடன் ''சக்தி நாடக சபா''வில் சிறையிலிருந்த போது எழுதிய ''கவியின் கனவு'' என்ற நாடகத்தை அரங்கேற்றி புகழின் உச்சிக்கு சென்றார். இதில் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன், திரு. எம்.என். நம்பியார், திரு. எஸ்.வி. சுப்பையா போன்றோர்கள் முக்கிய பாத்திரங்களில் அறிமுகமாகி புகழ் பெற்றனர். சுமார் 1500-க்கும் மேல் நாடகம் நடத்தப்பட்டது.

"கவியின் கனவு ஸ்பெஷல்" என்று திருச்சியிலிருந்து நாகப்பட்டினம் வரை தனியாக இரயில் பெட்டி விடப்பட்டது.

1946 : திருமதி. வி.என். ஜானகி அம்மாளின் முதல் திரைப்படமான 'மோகினி' திரைப்படத்திற்கு வசனம், பாடல்கள் எழுதினார்.

1947 : "நம் தாய்" நாடகம் அரங்கேறியது. புத்தக வடிவிலும் வெளியீடு செய்தார்.

1948 : "லைலா மஜ்னு" திரைப்படத்திற்கு வசனம் எழுதினார்.

1949 : அமரர் கல்கியின் "கள்வனின் காதலி" என்ற திரைப் படத்திற்கு வசனம் பாடல்கள் எழுதினார். இதில் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன், திருமதி. பி. பானுமதி நடித்தனர்.

1950 : பி. பானுமதி தயாரிப்பில் வெளிவந்த 'விப்ரநாராயண' திரைப்படத்திற்கு பாடல்கள் எழுதி புகழ் பெற்றார்.

1953 : 'மனிதனும் மிருகமும்' என்ற திரைப்படத்தை சொந்த மாக இயக்கினார். இதில் நடிகர் திலகம், மாதுரிதேவி, திரு. கே. சாரங்கபாணி, திரு. டி.ஆர். ராமச்சந்திரன் நடித்தனர்.

1954 : 'மகா புத்திசாலி', 'இன்பம் எங்கே?' போன்ற நாடகங்கள் நடத்தப்பட்டது.

1955 : "சாரங்க தாரா" திரைப்படத்திற்கு வசனம் எழுதினார்.

1956 : 'ஆகஸ்ட் புரட்சி' இந்திய விடுதலை போரில் கலந்து கொண்டார்.

1957 : 'அரவிந்தர்' மேடை நாடகம் நடத்தப்பட்டது.

1960 : காங்கிரஸ் கட்சிக்கு மும்முரமாக பாடுபட்டார். பெருந் தலைவர் கு. காமராஜ் தலைமையில் வழிநடந்தார்.

`62 : இந்தியா - சீனா யுத்தத்தின் போது 'சிங்கநாத கேட்குது சீன நாகம் ஓடுது" என்ற டாக்குமெண்டிரி படத்தை சொந்த செலவில் தயாரித்து தமிழ்நாட்டின்

பட்டிதொட்டிகளிளெல்லாம் திரையிடப்பட்டது. இதில் நடிகர் திலகம் மற்றும் புகழ்பெற்ற நடிகர்கள் அனைவரும் நடித்தனர்.

1963 : 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்திற்கு வசனம் எழுதி புகழ் பெற்றார். மா.பொ.சி. கதை இந்த படத்தை பி.ஆர். பந்துலு இயக்கிய இந்த படத்தில் நடிகர் திலகம் வ.ஊ.சி வேடமேற்று புகழ் பெற்றார்.

1964 : 'வானமுதம்' என்ற கவிதை தொகுப்பு புத்தகத்தை பெருந்தலைவர் காமராஜர் தலைமையில் கவிஞர் கண்ணதாசன் முன்னிலையில் வெளியிடு செய்தார்.

1964 **முதல்** 1968 **வரை** : தமிழ்நாடு சட்டசபையில் மேலவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

1965 : சிறந்த வசனகர்த்தாவுக்கான தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் விருது வழங்கப்பட்டது. (தற்போதைய கலை மாமணி விருது)

1966 : 'காந்தியுகம்' கவிதை தொகுப்பு வெளியீடு.

1968 **முதல்** 1976 **வரை** : இயல் இசை நாடக மன்ற செயலாளராக பணியாற்றினார்.

1972 : மகள் திருமணம் பெருந்தலைவர் காமராஜர் சீரிய தலைமையில் புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் திருமணம் நடைப்பெற்றது. மணமகன் தமிழ் பேராசிரியர் கோ. கண்ணர் ஆவார்.

1973 : தேச விடுதலை 25-ஆம் ஆண்டு நிறைவை போற்றும் வகையில் பாரத பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தாமிர பத்திர விருது வழங்கப்பட்டது. 'வீரசுதந்திரம்' நாடகம் நடத்தினார். (தேசத்திற்காக பாடுபட்ட தியாகிகளின் வரலாறு)

1974 : "கவியின் குரல்", 'சிரிப்பதிகாரம்', 'கவியின் கனவு' (4வது பதிப்பு) போன்ற நூல்களை வெளியிட்டார்.

1975 : சிறந்த கதை வசனகர்த்தாவுக்கான டெல்லி சங்கீத நாடக சங்கத்தின் ஜனாதிபதி விருது பெற்றார்.

1976 : "மகாபுத்திசாலிகள்', 'இந்தியா எங்கே?' புத்தகங்கள் வெளியீடு செய்தார்.

1977 : 'உலக நாடகம்' (World Stage) மாத இதழ் வெளியீடு செய்தார்.

1979 : கடைசி நிகழ்ச்சி 08.08.1979-இல் சென்னை வானொலி நிலையம் வழங்கிய விவ்தபாரதியின் சிறப்பு தேன்கிண்ண நிகழ்ச்சிக்காக ஒலிப்பதிவில் கலந்து கொண்டது. (அவர் இறந்த நாள் அன்று ஒலிபரப்பப் பட்டது)

10.03.1979 : மார்ச் 10.03.1079 அன்று மாரடைப்பால் காலமானார்.

10.05.1979 : சிறந்த எழுத்தாளருக்கான 1979-ஆம் ஆண்டு 'பாரதிதாசன் விருது' தமிழக அரசால் வழங்கப் பட்டது.

*

*1957-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு வெளியீட்டின் போது*
*மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்*
*அமரர் டாக்டர் திரு. மு. வரதராசன் அவர்கள் வழங்கிய*

## பாராட்டுரை

'கவியின் கனவு' நாடகத்தைச் சில முறை கண்டு மகிழும் பேறு பெற்றவன் யான். ஒவ்வொரு முறையிலும் 'இது சிறந்த நாடகம்' என்று உணர்ந்து நிறைந்த உள்ளத்தோடு வீடு திரும்பினேன்.

நாடகத்தின் ஆசிரியர் நல்ல கவிஞர்; உயர்ந்த குறிக் கோள்கள் உடையவர். அவருடைய கனவு இதில் கலைத் திறனோடு அமைந்துள்ளது. நண்பர்; திருவாளர் எஸ்.டி. சுந்தரம் அவர்களின் வாழ்க்கைக் கனவே இந்த நாடகத்தின் அடிப் படையாக அமைந்துள்ளது என்று அறிந்தபோது என் உள்ளம் உருகிற்று.

சர்வாதிகாரியும் ஊர்வசியும் நம்முடைய வெறுப்புணர்ச்சிக் கெல்லாம் இலக்கு ஆகிறார்கள். கவிஞர் ஆனந்தர் நம்முடைய மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய உயரிய மனிதர். மணி வண்ணனும் சாந்தியும் சுகதேவனும் கனிமொழியும் நம் அன்பைக் கொள்ளை கொள்கிறார்கள்.

நாடகத்தின் இடையே அமைந்துள்ள பாட்டுக்கள் "விதியை வெல்வோம்", "காலமெனும் காட்டாறு" முதலிய பாட்டுக்கள் - சிறந்த நல்லுணர்ச்சியின் வடிவங்கள்! உயர்ந்த உள்ளத்துப் பேச்சுக்களாக உள்ள உரையாடல் சில இடங்களில் கவிதை போலவே அமைந்துள்ளன. சுகதேவன் குடிமக்களிடம் நீண்ட பெரும் பேச்சுப் பேசினும், அந்தப் பேச்சுக்கள் பயனுள்ள பகுதிகளாக - நாடகப் போக்கிற்கு இயைந்த சுவையான பகுதி களாக - உள்ளன. மன்னனின் கலைப்பேரவையில் வீரசிம்மனின் வினாக்களும், ஊர்வசியின் வினாக்களும், அவற்றிற்கு மணி வண்ணன் சுடச்சுட அளித்த விடைகளான தெளிவுரைகளும்

அறிவுக் களஞ்சியமாக இருப்பினும் நாடகக் கலைச்சுவையைச் சிறிதும் குன்றச் செய்யாமல் மேன்மேலும் பெருகச் செய்யும் சிறப்பு இங்குக் குறிக்கத் தக்கதாகும்.

"நான் இருக்கப் பயம் ஏன்?", "நானே கடவுளின் தூதன்" என்று சொல்லி, மனிதரை மந்தையாக ஆட்டி வைக்கும் சர்வாதி காரிகள் தொலைய வேண்டும். தம் அழகையும் அறிவையும் கொண்டு உலகை ஏய்த்துத் துன்புறுத்தும் ஊர்வசிகளும் தொலைய வேண்டும்; நல்லவர்களின் நல்லுணர்வும் ஆற்றலும் அவர்களைத் தொலைப்பதற்குப் பயன்பட வேண்டும். அதன் பிறகுதான் உண்மைகள் - கலைகள் செழித்து விளங்கி நாடெங்கும் அமைதி நிலவ முடியும். இதுவே இந் நாடகத்தின் கருத்து. இந்தக் குறிக்கோளின் பொருட்டு நல்லவர் பலர் துன்புற்றுத் தியாகம் செய்ய வேண்டியது கடமையாகிறது. இந்தத் தியாக உணர்ச்சியே நாடகத்தின் உயிராக உள்ளது.

கலையின் வாயிலாக ஒரு நாட்டின் எழுச்சிக்கும் ஆக்கத்திற்கும் தொண்டு செய்ய முடியும். நாடகம் ஆற்றல் மிகுந்த கலை; கண்ணின் வாயிலாகவும், செவியின் வாயிலாகவும் உள்ளத்தைத் தொட்டு எண்ணத்தைச் செயற்படுத்தும் ஆற்றல் வாய்ந்த கலை. இந்த நாடகத்தில் கவிஞர் தம் மாணவர்களுக்குக் கூறுவதாக அமைந்துள்ள கருத்து - "அந் நாடகத்தை இன்று தான் முடிக்கப் போகிறேன். அது ஒன்றே போதும் நமது நாட்டு மக்களின் உறக்கத்தை மாற்ற" என்பது முற்றிலும் உண்மை.

"கவியின் கனவு" என்னும் இந்நாடகம் இவ்வகையில் ஆற்றிய தொண்டு பெரிது; இன்னும் ஆற்ற இருக்கும் தொண்டும் போற்றத் தக்கதாகும்.

மு. வரதராசன்

## 'கனவு நிறைவேறியது'

**(பேராசிரியர் அமரர் கல்கி அவர்களின் விமர்சனம்)**

...கவிகள் என்பவர்கள் உலகத்தில் எதற்காகத்தான் பிறக்கிறார்களே, தெரியவில்லை. பிறந்தவர்கள் சும்மா இருக்கிறார்களா? பட்டப்பகலில் ஏதாவது கனவு காண்கிறார்கள். பகற்கனவு காண்பதே அவர்களுடைய வேலை என்றுகூடச் சொல்லலாம். அப்படித்தான் கனவு காண்கிறார்களே, அதை வெளியில் சொல்லாமல் தங்கள் மனத்திற்குள்ளே மூடி மறைத்து வைத்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. அந்தக் கனவுகளை வைத்துக் கவிபாடுகிறார்கள். பிறகு, அக்கவிகளை ஊரெல்லாம் பரவச் செய்கிறார்கள். தங்களை இல்லாத கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிக் கொள்கிறார்கள். பிறரையும் கஷ்டப்படுத்துகிறார்கள். கடைசியில் என்ன ஆகிறது? நம்முடைய தலையில் எப்போது எந்த பாறாங்கல் விழப் போகிறதோ என்று நாம் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டி வருகிறது.

ஒரு நாடகத்தில் தலைமை வகிப்பதென்றால் ஏதோ எளிதான காரியம் என்றும், உல்லாசமாக முதல் வரிசையில் உட்கார்ந்து நாடகத்தைப் பார்த்துக் களித்துவிட்டு வரலாம் என்றும் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அது வீண் கனவுதான் என்று, 'கவியின் கனவு' என்னும் நாடகத்தைச் சென்ற வாரத்தில் பார்த்தபோது நான் உணர வேண்டியதாயிற்று. அந்தப் பொல்லாத ராஜகுரு அவ்வளவு பெரிய பாறாங்கல்லைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வருகிறானே, அவன் அதைத் தலைமை வகிக்கும் நமது தலையில் போட்டு வைக்கப் போகிறானோ என்று எனக்குப் பெருங்கவலையாகி விட்டது. தலைப்போனால் பாதகமில்லை! ஆனால், நாடகத்தை முழுவதும் பார்த்து முடிவு தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடுமே! இதுதானே அதிகமாகக் கவலையை அளித்தது.

கவிஞர் ஒருவர், விதியை வெல்ல வேண்டும் என்றும், உலகத்தில் வறுமையே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றும்,

உயர்வு தாழ்வுகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்றும் - இப்படியெல்லாம் கனவு காண்கிறார்! இந்த இலட்சியங்களை யெல்லாம் எதுகை மோனையுடன் பாடல்களாகப் பாடுவதினா லேயே சாதித்துவிடலாம் என்றும் அக்கனவில் கருதுகிறார். ஆனால், உண்மையில் இதெல்லாம் லேசில் நடக்கிற காரியமா? அந்தத் தேசத்து அரண்மனை ராஜகுரு வந்து குறுக்கிடுகிறான். கனவு காண்கிற கவியைச் சிறையிலே பிடித்து அடைக்கிறான். கவிஞர் சித்த சுவாதீனத்தை இழந்து பித்தராகிறார். பிதற்றிக் கொண்டே சிறையில் வசிக்கிறார். அவருடைய மகனும், மகளும் வயதாகி வளர்ந்து, நாடகக் கலைஞர்கள் ஆகிறார்கள்.

ராஜகுரு என்னும் வேஷதாரியோ, ருஷியா தேசத்து ஸார் சக்கரவர்த்தியையும் சக்கரவர்த்தினியையும், இளவரசன், இளவரசி முதலியோரையும் தன்னுடைய கண்களின் காந்த சக்தியினாலும், மனோவசிய மாய சக்தியினாலும் இஷ்டம் போல் பல காலம் ஆட்டிவைத்து வந்த ரஸ்புடீன் என்பவனை ஒத்தவன். அந்தத் தேசத்து அசட்டு ராஜா, அகம்பாவம் பிடித்த ராணி, அவர்களுடைய செல்வ குமாரி ஆகியவர்களை அந்த ராஜகுரு ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் மீது தனக்குள்ள ஆதிபத்தியத்தின் மூலம் நாட்டின் பல அக்கிரமங்களைச் செய்து வருகிறான். ஆனால், சேனாதிபதி சுகதேவனும், அவனுடைய சகோதரி கனிமொழியும் மட்டும் ராஜகுருவின் மாயவலையில் சிக்கவில்லை. அதற்கு மாறாக, சேனாதிபதியின் சகோதரி, கவியின் குமாரன் மணிவண்ணனுடைய அன்பின் வசமாகி, அவனை மணக்க விரும்புகிறாள்.

ராஜகுரு இளவரசியின் கற்பைக் கெடுத்து, பிறகு அவளை நாடகக் கலைஞன் மணிவண்ணனுக்கு மணஞ்செய்து வைக்கச் சூழ்ச்சி புரிகிறான். அந்தச் சூழ்ச்சியைக் கெடுக்கத் தீர்மானித்த சேனாதிபதியின் சகோதரி கல்யாணப் பந்தலில் திடீரென்று தோன்றி, மணமகன் கழுத்தில் மாலையைப் போட்டு விடுகிறாள்.

ராஜகுருவின் மோசச் சூழ்ச்சிகள் எல்லாம் வெளிப்படப் பார்க்கின்றன. அவன் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிக்கொண்டு யார் தலையிலோ போடுவதற்கு ஓடுகிறான். பிறகு, சேனாதிபதி யுடன் கத்திச் சண்டையிட்டுத் தோல்வியடைகிறான். முடிவில், ஒரு

பெரிய வீராவேசப் பிரசங்கம் செய்துவிட்டுத் தன்னைத்தானே குத்திக்கொண்டு சாகிறான். அவன் உண்மையில் பகை நாட்டைச் சேர்ந்த ஐந்தாம் படைக்காரன் என்று வெளியாகிறது. அதோடு, கவியின் குமாரன் திடீரென்று அரசகுமாரனாக மாறுகிறான். இரண்டு ஜதை இனிய திருமணங்கள் நடைபெறுகின்றன. கவிஞர் தமது கனவு நிறைவேறிவிட்டதாக ஆனந்தப்படுகிறார். பேஷாக ஆனந்தப்படட்டும்! முப்பது வருஷம் கஷ்டப்பட்டவர் கொஞ்சம் சந்தோஷப்பட்டுவிட்டுப் போகட்டுமே!

'கவியின் கனவு' என்னும் இந்த நாடகம், முன்னொரு சமயம் சக்தி நாடக சபையினரால் சேர்ந்தாற்போல் 150 நாட்கள் நடிக்கப்பட்டுத் தமிழ்நாட்டில் மிகப் பிரசித்தி அடைந்தது.

ஒரு நாடகத்தில் - இருக்க வேண்டிய உணர்ச்சி வேகங்கள், வெவ்வேறு குண சித்திரங்களையுடைய பாத்திரங்கள், கவர்ச்சி கரமான நிகழ்ச்சிகள், விறுவிறுப்பான சம்பாஷணைகள் ஆகிய எல்லா அம்சங்களையும் வைத்து இந்த நாடகத்தை இயற்றிய ஆசிரியர் திரு. எஸ்.டி. சுந்தரம் அவர்கள், 1942-இல் விடுதலைப் போராட்டத்தில் சிறைப்பட்டிருந்த தேச பக்தரும் தேசிய வீரருமாகிய திரு. எஸ்.டி. சுந்தரம் பல உயர்ந்த இலட்சியங்களையும் புரட்சிகரமான கருத்துகளையும் புகுத்தி இந்த நாடகத்தை அமைத்திருக்கிறார்.

தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ள தலைசிறந்த நாடக ஆசிரியர்களில் திரு. எஸ்.டி. சுந்தரம் ஒருவர்; நாடகத்தைப் புத்தக வடிவில் படித்ததிலிருந்தே இந்த அபிப்பிராயம் என் மனத்தில் தோன்றியது.

சென்ற வாரத்தில் சென்னை அமெச்சூர் ஆர்ட்ஸ் என்ற பொழுதுபோக்கு நாடகக் கோஷ்டியார் இந்த நாடகத்தை நடத்தியபோது பார்க்கும்படியான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கவியின் கனவு நாடகத்தை அரங்க மேடையில் நடித்துப் பார்க்க வேண்டும் என்ற என் நெடுநாளைய கனவும் நிறைவேறியது.

நன்றி
கல்கியின் 'கலைச்செல்வம்'

## ‘கவியின் கனவு’

### கதையின் வடிவம்

***கலைமாமணி எஸ்.டி. சுந்தரம்***

மா பெரும் இலட்சியத்தின் மானிட வடிவம் மகாகவி ஆனந்தன். மாந்தருக்குள் ஒரு தேவனாய் வாழ்ந்து வந்தவன். காலஞ்சென்ற அரசர் ஆத்மநாதரின் அருமை நண்பன். நாட்டு மக்கள் அன்புடன் போற்றிய கலை மன்னன். மகா கவிஞன். தத்துவ ஞானி.

தற்போது நாட்டின் அரசியல் நிர்வாகம், காலஞ்சென்ற மன்னன் ஆத்மநாதனது தம்பி வீரசிம்மனிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தது.

மன்னன் வீரசிம்மனும், மகாராணி ஊர்வசியும் தன்னலக் காரர்கள். இந்த ஊர்வசி சாமான்யமானவள் அல்ல. ஒரு காலத்தில் உலகம் போற்றிய கலையரசி! விலையரசியாகவும் இருந்த எழிற் சிலை! அவள் மகாகவி ஆனந்தனிடமும் சில நாட்கள் கலைப் பயிற்சி பெற்றவள்!

ஒரு காலத்தில் கவிஞன் மேல் ஆசைப்பட்டு, அந்த ஆசை நிறைவேறாமல் தோல்வி கண்டவள்! அந்தத் தோல்வியில் விளைந்த வெறுப்பால், கவிஞனின் உயிர்க்குயிராக விளங்கிய அவனது துணைவி வாணியை வாணியாற்றிலே தனது சூழ்ச்சித் திறனால் மடியச் செய்தவள். உலகமுள்ள நாள் வரைக்கும் மெய்ப்பிக்க முடியாத அளவு சூழ்ச்சித் திறம் படைத்த ஊர்வசி செய்த அந்தப் படுகொலையை, கடைசிக் காலத்தில் அவளது உள் மனத்தின் ஆழத்திலே ஒண்டி உறங்கிய, ஒளியின் நிழலே காட்டிக் கொடுத்து விடுகின்றது!

தனது மன வேட்கையைப் பதவி வெறியாக மாற்றிக் கொண்டு, நாட்டின் அரசன் வீரசிம்மனைத் தன் கைப்பாவையாக்கி, தற்போது நாட்டின் மகாராணியாக விளங்கும் சாமர்த்தியக்காரி! அரசனும் அரசியும் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை சர்வாதிகாரி

யான ராஜகுருவிடம் ஒப்படைத்துவிட்டு, அரண்மனைத் திருவிழாக் களிலும், சுற்றுலா இன்பங்களிலும் மலை முகடுகளிலும், சாரல் மாளிகைகளிலும் தங்கள் நேரத்தைக் கழித்து வருகின்றனர்.

மகாகவி ஆனந்தன், முன்பு ஊர்வசியின் வஞ்சனையால் கொல்லப்பட்ட தனது அருமை மனைவி வாணியின் ஒரே செல்வமான சாந்தி என்ற ஆறு வயது பெண் குழந்தையையும் வளர்ப்பு மைந்தன் மணிவண்ணனையும் கண்ணின் கருமணி போல் காப்பாற்றி வளர்த்து வருகிறான்.

அத்துடன் அவன் நிற்கவில்லை. மக்களை நல்லவர்க ளாக்கும் பெரும் பொறுப்பிலும் ஈடுபடுகிறான். ஊர் ஊராக, கிராமம் கிராமமாகச் சுற்றித் திரிந்து அறிவொளியைப் பரப்பி வருகிறான்! வீழ்ந்த மக்களை வீரர்களாக்குகிறான். பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலிக்கச் செய்கிறான். ஒருபெரும் சத்திய சோதனை யில் இறங்குகிறான். வாய்மையின் வெற்றிக்கு மெய்மையின் வலிவை நம்புகிறான். தூய்மைப் போரில் தன்னுயிரைப் பணயம் வைக்கிறான்!

இந்தச் செய்தி மன்னன் காதில் விழுகிறது. ஆனந்தனைத் தனது ஆலோசகனாக இருக்கும்படி கேட்டுப் பார்க்கிறான். ஆனந்தன் மறுத்துவிடுகிறான். இராணி ஊர்வசியும் தனித்து அவனைச் சந்தித்துத் தனது இளம்பருவக் கனவுகளை இன்ப ஓவியங்களாகத் தீட்டிக் காட்டுகிறாள். தனது இதயக் காணிக்கையை ஏற்றுக்கொண்டு நிம்மதியாக வாழ்ந்து, இன்பக் கலைகளை வளர்க்க வேண்டுகிறாள்.

இலட்சியக் கவிஞனின் சத்திய இதயம் சத்தற்ற சொத்தைக் கும்பலின் போலிப் பதவிகளை ஏற்க மறுக்கிறது. சர்வாதிகாரிக்குச் சினம் வருகிறது. ஆனந்தனது நல்ல முயற்சிக்கு முடிவுகட்ட விரும்புகிறான். இச்சகம் பாடிப் பிழைக்கும் தன்னலக் கூட்டத்திற் குத் தலைமை தாங்கச் சொல்லுகிறான். கவிஞன் மறுக்கிறான். தனது இலட்சியத்தின் கருவூலமாகக் 'கனவு' என்னும் நாடகத்தை எழுதுகிறான். அது அவனது ஆத்மாவின் துடிப்பாக அமைகிறது. உலகுக்கு ஒரு உயிருள்ள நாடக இலக்கியம் கிடைக்கிறது.

ஒருநாள் ஆனந்தன், ஆறு வயது அருமைப்பெண் குழந்தை சாந்தி, ஏழு வயது இளம்பாலகனான தன் வளர்ப்பு மகன் மணிவண்ணன் - இவர்களுடன் விளையாடுகிறான். குழந்தைகளும் ஏதேதோ விளையாட்டுகளைச் சொல்லி, தங்கள் மழலையின்பத்தை அள்ளி வீசுகின்றன. மக்களின் மழலைத் தேனையுண்டு தன்னை மறந்த பரவச நிலையில் இருக்கிறான், கவிஞன்.

சர்வாதிகாரியின் புயற்படையினர் வந்து, ஆனந்தனை நாட்டின் விரோதி - ராஜத்துரோகி என்று காரணம் காட்டி, கைது செய்து கொண்டு போகிறார்கள். தந்தையிடம் பாசத்துடன் ஓடிவந்த அன்புக் குழந்தைகளை அடித்துத் துரத்தி ஆசிரமத்திற்குத் தீ வைக்கின்றனர். கவிஞனது கனவுக் கோயில் ஆயிரம் தூளாகத் தகர்க்கப்படுகிறது! தலையில் பலமாக அடிபட்டதாலும், குழந்தை களைப் பிரிந்த அதிர்ச்சியாலும், நிலைகுலைந்த கலையுள்ளம் அலைபட்ட துரும்பாகிறது. கவிஞன் அறிவு சிந்திக்கும் திறனை இழந்து விடுகிறது.

காலஞ்சென்ற மன்னர் ஆத்மநாதர் ஏதோ ஒரு அரிய செல்வத்தை ஆனந்தனிடம் ஒப்படைத்துப் போனதாயும் அந்தச் செல்வம் எங்கே இருக்கிறது என்பதைத் தன்னிடம் நாளது வரை சொல்லாமல் மறைத்து வைத்திருந்தான் என்றும், இந்த இரகசியம் கவிஞன் ஒருவனுக்குத் தான் தெரியும். ஆதலால், அவனை உயிரோடு வைத்துப் பித்தந் தெளிவித்து விசாரிக்க வேண்டும் என்றும் ஒரு ஆதாரமில்லாத குற்றத்தைச் சாட்டுகிறான் சர்வாதிகாரி.

இதைக் கேள்வியுற்ற ராணி ஊர்வசி தேவி, ஆனந்தனிட மிருந்து உண்மையை அறியும் சக்தி தனக்கிருக்கிறதென்று கூறி, கைதி ஆனந்தனைச் சிறையில் தனிப்பட்ட முறையில் பல தடவை சந்திக்கிறாள். பாவம்! அந்தக் கவிதைப் பைத்தியத்திடம் பழைய காதல் பைத்தியம் தன் கனவைச் சொல்லுகிறது. பாவம்! பருவம் கடந்தபோதிலும் அதன் பச்சை நினைவுகள் மறையாமல் அவ்வப்போது படமாடுகின்றன.

ஏற்கெனவே தான் கொண்ட காதல் நினைவுகளை ஞாபக மூட்டுகிறாள். தனக்கு இசைந்தால், சகல சுகபோகங்களோடும்

வாழலாம் என்ற தனது ஆசைச்சாம்பலால் புதிய கனலை மூட்ட முயல்கிறாள்.

தேசாதிபதிகள் எல்லாம் தன் காலில் விழும் அழகு படைத்த அவள், ஒரு ஏழைக் கவியான காவற்கைதியின் காலில் விழுந்து கெஞ்சுகிறாள்! அவனிடம் கற்ற கலைகளை யெல்லாம் நினைவுபடுத்துகிறாள்.

கடைசியாக, அவன் மீளவே முடியாத ஒரு பைத்தியம் என்று அறிந்து மிகவும் கவலைப்படுகிறாள்.

காலம் சுழல்கிறது! பதினைந்து ஆண்டுகள் பறக்கின்றன! எங்கோ ஒரு சிற்றூர். அனாதைகளான குழந்தைகள் தெருப் பாடகர்களாய் வளர்க்கப்படுகின்றனர். தெருக்கூத்துக் கிழவன் ஒருவன், அந்தக் குழந்தைகளின் கலை ஞானத்தையறிந்து, அவர்களுக்கு நடனம், பாடல், நாடகம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறான்.

ஊர் ஊராக நாடோடிகளாக அலைந்து வந்த அவர்களுக்குக் ‘கனவு’ என்ற தலைப்பிட்ட ஒரு பழைய நாடகச் சுவடி கிடைக்கிறது. அதை நாடகமாக நடத்தும் முயற்சியில் ஈடு படுகிறார்கள். நாடு போற்றும் நாடகக் கலைஞர்களாக விளங்கு கிறார்கள், சாந்தியும் அவள் சகோதரன் மணிவண்ணனும்.

தலைநகர்! அரண்மனையில் இளவரசி மேனகையின் பிறந்த தின விழா. எழிலரசி ராணி ஊர்வசி நாட்டியமாடுகிறாள். அவள் நடன விழாவைக் கண்டு அவையே மெய்ம்மறந்திருக்கிறது. எல்லோரும் மகாராணியின் கலைத் திறமையைப் புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால், நாட்டின் இளம் சேனாதிபதி சுகதேவன் மட்டும், தான் இதைவிட ஒரு உயர்ந்த கலையின்பத்தைத் தலைநகரில் வந்திருக்கும் ஏழைக் கலைஞரிடம் கண்டதாகக் கூறுகிறான்.

மகாராணியின் மனம் வேதனைப்படுகிறது. தன்னைவிட உயர்ந்த கலைஞர்கள் எந்த நாட்டிலும் இருக்க முடியாதென்ற அகந்தையால் தலை கனத்திருந்த மகாராணிக்குச் சுகதேவனின்

இந்தச் சொல் இடி விழுந்தது போன்ற அதிர்ச்சியைக் கொடுக்கிறது. அந்த நாட்டியத்தையும், நாடகக் கலைஞர்களையும் காணத் துடிப்பாகக் கூறுகிறாள், மன்னன் அதற்கு வேண்டியவற்றைச் செய்கிறான், ஏழைகளின் கலை மன்றத்தில் எழில் கொண்டு ஆடுகிறது கலையின்பம். அதைக் கண்டு அரண்மனையின் அகந்தை ஆவேசப்படுகிறது.

அவர்கள் நடித்த நாடகத்தின் உட்பொருள். ராணி ஊர்வசி யைத் திகைக்க வைக்கிறது! இது நாள்வரை உறங்கிக் கிடந்த அவளது மான உலக வாழ்வு இன்பமாக முன்னேறும், என்று கூறுகிறார். உன் மனத்தில் ஒளி நிழல்கள் உயிர் கொண்டு விளையாடி அவளுக்கு எதிராகவே எதிர்க்கொடி காட்டுகின்றன. திகைக்க வைக்கிறது! ராஜாவின் உள்ளத்தைத் திணற வைக்கிறது. கலைமணிகள் நடத்தும் புரட்சி நாடகம். மக்கள் மனத்தை மாற்றி விடும் என்று அஞ்சுகிறது. ராஜதந்திரம்! அந்தக் கலைஞர்களை அரண்மனைச் சோம்பேறிகளாக்கி, அதன் மூலம் கலையைச் சிறையிட ராஜாவும், சர்வாதிகாரியும் சதி செய்கின்றனர்.

இளம் சேனாதிபதி சுகதேவனும், அவன் தங்கை கனி மொழியும் கலைஞர்களைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து உபசரிக்கின்றனர். நெருங்கிய நண்பர்களாகின்றனர். உயிர்த் தோழர்களாவதோடு உள்ளங்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். இந்நிலையில் அரசனது அழைப்பு வருகிறது, சர்வாதிகாரியின் நச்சுப் பார்வை சாந்தியின்மீது விழுகிறது.

அதனால் அவன் சுகதேவைத் தலைநகரில் இருந்து எல்லைப்புரத்திற்கு அனுப்பும் படியான சதியைச் செய்கிறான். எல்லையில் வேண்டுமென்றே தனது கொள்ளைக் கூட்டத்தை ஏவி, தொல்லைப் போர்களை விளைவிக்கிறான் சர்வாதிகாரி! நாட்டின் எல்லையைக் காப்பதற்காகச் சுகதேவன் தலைநகரைவிட்டுப் போர்க்களத்திற்குச் செல்கிறான். போகும் போது, தனது நிர்வாகத்தில் இருந்த பாதாளச் சிறையில் அவதிப்படும் கைதிகளை அதிகம் துன்புறுத்தாமல் பார்த்துக் கொள்ளும்படி தன் துணைத் தலைவரிடம் சொல்லி விட்டு, சுகதேவ் எல்லைப்புறத்தில்

ஐந்தாம் படைகளால் ஏவப்பட்ட படையெடுப்பை எதிர்க்கப் புறப்படுகிறான்.

அரண்மனையில் உருவாகிய நாகரிகமான சதித்திட்டத்தை அறியாமல் மணிவண்ணனும், சாந்தியும் அரச மாளிகையில் வசிக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. இளவரசி மேனகா அடிக்கடி மணிவண்ணனை வட்டமிடுகிறாள்.

சர்வாதிகாரி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளு வதற்காக, இளவரசி மேனகைக்கும் பெருங்கலைஞன் மணி வண்ணனுக்கும் தொடர்புண்டு என்ற கதையை அரசன் மனத்தில் ஏற்றி, அதன் மூலம் அரசனை அவர்கள் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளும்படி செய்கிறான்.

அண்ணன் சுகதேவன் எல்லைப்புறத்தில் எதிரிகளால் காயமுண்ட செய்தி கேட்ட கனிமொழி, தலைநகரை விட்டு எல்லைப்புறப் போர்க்களத்துக்குச் செல்கிறாள்.

இந்த நெருக்கடியான குழப்பச் சூழ்நிலையில் இளவரசி மேனகைக்கும் கலைஞன் மணிவண்ணனுக்கும் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது! ஆனால், கலைமணி இதற்கு உடன்படவில்லை. சர்வாதிகாரி எப்படியும் இந்தத் திருமணத்தை அவசரமாக நடத்திவிட்டுத் தான் சாந்தியை அடையத் திட்டமிட்டு வேலை செய்கிறான்.

அழைப்பிதழ்கள் அனுப்பப்படுகின்றன. எல்லைப்புறப் படை வீட்டிலிருக்கும் சேனாதிபதி சுகதேவுக்கும், இளவரசியின் திருமண அழைப்பு வருகிறது.

பாசமற்ற! சுகதேவ் மிகவும் வருந்துகிறான். கனிமொழி, "இதெல்லாம் சர்வாதிகாரியின் சூழ்ச்சியாயிருக்கும். மணிவண்ணன் ஒருக்காலும் இளவரசியைக் கல்யாணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்" என்று அண்ணனுக்குச் சமாதானம் சொல்லுகிறாள்.

தலைநகர்! அரண்மனையில் அடைபட்ட மணிவண்ணனும், சாந்தியும் அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்ல முயலுகின்றனர்!

ஆனால், அவர்கள் முயற்சி தோல்வியுறச் செய்கிறான் சர்வாதிகாரி.

கடைசியாக, கார்மேகன் என்ற அரண்மனை ஒற்றன் மூலமாக மணிவண்ணன், சுகதேவுக்குத் தனது தர்மசங்கடமான நிலையைப் பற்றிச் செய்தி அனுப்புகிறான்.

## எல்லைப்புறப் போர்க்களம்! பாசறை!

கார்மேகன் மணிவண்ணனிடமிருந்து செய்தி கொண்டு வருகிறான். கனிமொழி உடனே அரண்மனைச் சதியிலிருந்து கலைஞர்களை மீட்கவேண்டும் என்று அண்ணனைக் கெஞ்சு கிறாள். ஆனால், சுகதேவ் தன்னால் தற்பொழுது எல்லையை விட்டுப்போக முடியாது என்று கூறுகிறான். அப்படியானால் தானே போய் வருவதாக அண்ணனிடம் வாழத்திதழைப் பெற்றுக் கொண்டு தகுந்த பாதுகாப்புடன் கனிமொழி தலைநகருக்குப் போகிறாள்.

திருமணம் நடைபெற, கொஞ்ச நேரம் இருக்கிறது. மணமகன் கலங்கி நிற்கிறான். மணமகள் குழப்பத்தோடு நிற்கிறாள். சர்வாதிகாரி தன் சதி எண்ணம் நிறைவேறி விடும் என்ற அற்பச் சிரிப்புடன் மகிழ்கிறான்.

அந்த நேரத்தில் சேனாதிபதியின் தங்கை கனிமொழி வருகிறாள். வந்ததும் அவள் கையிலிருந்த மாலையை மணமகள் கழுத்தில் போட்டு, சேனாதிபதியின் வாழ்த்தைப் படிக்கிறாள். மணமகனும் தன் கையிலிருந்த மாலையை அவள் கழுத்தில் போட்டு விடுகிறான்.

இப்படி ஒரு எதிர்பாராத ஒரு குழப்பத்துக்குக் காரணமான கனிமொழியை மகாராணி ஊர்வசி குற்றவாளி ஆக்குகிறாள். சர்வாதிகாரி கனிமொழியைப் பாதாளச் சிறைக்கூடத்துக்கு அனுப்புகிறான்.

கலைஞன் மணிவண்ணன் சர்வாதிகாரி மீது பாய்கிறான். மணிவண்ணனது மணப்பேச்சைப் பொறுக்க முடியாமல் அவனை யும் சிறைக்கு அனுப்பி விடுகிறான்.

சிறையில் உள்ள அதிகாரிகளில் பலர் சுகதேவனின் நண்பர்கள். ஆகையால், இவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் பார்த்துக்கொள்கின்றனர். தனது செல்வத்தங்கை சிறைப்பட்ட செய்தி வெற்றிவாகை சூடிய சுகதேவனுக்கு எட்டுகிறது. புதுவெற்றியைக் காணத் தலைநகருக்கு வருகிறான்.

சேனாதிபதி சுகதேவன் சாந்தியைச் சர்வாதிகாரியிடமிருந்து மீட்கிறான். கயவன் ஓடிவிடுகிறான். அவனைத் துரத்துகிறார்கள் வீரர்கள்.

சிறையில் மணிவண்ணனும் கனிமொழியும், அவர்களை ஒன்றுகூட்டிய 'கனவு' என்னும் நாடகத்திலிருந்து ஒரு அமுதப் பாடலைப் பாடிக்கொண்டிருக்கையில், நீண்ட காலத்து இருளுக்குப் பின் காலைக் கதிரொளியைக் கண்டது போல் குழந்தைகளைக் கூர்ந்து பார்க்கிறார் கவிஞர். அவர் தம் இன்பக் குரலை இதயக் குயிலின் ஓசைபோல் அனுபவிக்கிறார்.

அந்தக் கைதியின் சோகமான நிலைக்கும் அந்தப் பாடலுக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருப்பதை யறிந்து மேலும் பாடுகிறார்கள்.

பல ஆண்டுகளுக்குமுன் காணாமல் போய் மீண்டும் கிடைத்துவிட்ட குழந்தைகளைப் பார்ப்பது போல் திகைப்புடனும் குழப்பத்துடனும் கொந்தளிப்புடனும் வாடும் கனிமொழியையும் மணிவண்ணனையும் மாறி மாறிப் பார்க்கிறார். நீண்ட நெடுங் காலமாக மௌன உறக்கம் கொண்டிருந்த மனப்பறவைக்கு, புதிய சிந்தனைச் சிறகுகள் முளைத்தது போன்ற மறுமலர்ச்சியை அடைகிறார் கவிஞர்.

அந்தக் கைதியின் அறிவுக் கலக்கம் சிறிது சிறிதாகத் தெளிவடைகிறது. அந்த நேரத்தில் சேனாதிபதி, சாந்தியுடன் சிறைக்குள் வருகிறான்.

அந்தக் கைதிதான் காலஞ்சென்ற மன்னரின் உயிர் நண்பர் என்பதையும், நாட்டின் சிறந்த தத்துவஞானி என்பதையும், சாந்தியின் தந்தையும், மணிவண்ணனது வளர்ப்புத் தந்தையும்

அவரே என்பதையும் எல்லோருக்கும் அவரே மெதுவாக எடுத்துச் சொல்லுகிறார். மங்கிப் போயிருந்த வரலாற்றின் மறுபதிப்பைக் கேட்கிறார்கள்.

அரண்மனையில், தனது ஈனச் செயலால் ஏமாற்றமடைந்த இளவரசி மேனகா தற்கொலை செய்துகொண்டு, அதற்குக் காரணமாயிருந்தவன் சர்வாதிகாரியே என்று கடிதம் எழுதித் தன் தந்தைக்கு அனுப்பி விடுகிறாள்.

அரசன் இதைப் பார்த்ததும் சர்வாதிகாரியைத் தண்டிக்கப் போகையில் ராணி ஊர்வசி தடுக்கிறாள்.

இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கையில் சிறையிலிருந்து சுகதேவனின் தலைமையில் வீரர்கள் வருகின்றனர். அரண்மனை இரகசியம் விளக்கப்படுகிறது. மணிவண்ணன் காலஞ்சென்ற மன்னனின் மகன் என்பதையும் தெளிவாக்கு கிறார்கள்.

முன் தப்பிச் சென்ற சர்வாதிகாரி, மக்களைத் தன்பக்கம் சேர்க்கிறான். 'அந்தக் கிழட்டுக் கவிஞன் நாட்டின் இரகசியக் கருவூலத்தை மறைத்து வைத்திருக்கிறான்; அதை மறைக்க ஏதோ கதை கட்டுகிறான் என்று சர்வாதிகாரி ஒரு பொய் வதந்தியை மக்கள் மத்தியில் பரப்புகிறான். மக்கள் எல்லோரும் அந்தச் செல்வம் என்ன என்பதை அறியத் துடிக்கின்றனர். கவி ஆனந்தர் மக்கள் ஆசையை நிறைவேற்ற மலைக்கோயில் சுரங்கத்துக்கு எல்லோரையும் அழைத்துச் செல்கிறார்.

"காலஞ்சென்ற மன்னர் என்னிடம் ஒப்படைத்த இரண்டு செல்வங்களில் ஒன்று அரச குமாரன் மணிவண்ணன்; மற்றொன்று, குகைக்கோயில் சுரங்கத்தில் உள்ள இந்நாட்டில் புதிய அரசியலைப் பற்றி நூல்கள். அந்த நீதி நூல்களே இந்நாட்டின் நிலையான செல்வங்கள்; மகாகவிஞர்கள் கண்ட இலட்சியக் கனவுகள் அதை வாழ்க்கையில் நனவாக்கிச் செயலாக நிலைநாட்டினால் துன்பம் தீரும்! இன்பம் பெருகும்," என்று கூறுகிறார்.

'இவையே நமது ஆன்றோர்கள் நமக்காக விட்டு வைத்த அரிய செல்வங்கள். இந்தச் செல்வங்களை நமது நல்ல நடத்தை

யிலும் - நிரூபித்துப் பாதுகாப்பதே வாழும் வழி' என்கிறார். வெறும் பேச்சும், வீண் சோம்பலும் நீங்கி நல்ல நெறியாக இருக்கும் நல்ல வாழ்வே நாட்டின் செல்வம் என்பதை எல்லோருக்கும் சொல்லி முடிக்கும் போது சர்வாதிகாரி தற்கொலை செய்து கொள்ளுகிறான். தீமை அழிகிறது. புதிய புகழ் துவங்கு கிறது. உண்மைகள் வாழ்கின்றன! நியாயங்கள் தலையெடுக்கின்றன! தருமம் மறுபடியும் ஒரு முறை பெருமூச்சு விடுகிறது!

இரண்டு திருமணங்கள் நடைபெறுகின்றன.

மணிவண்ணன் - கனிமொழி!

சுகதேவன் - சாந்தி!

வழக்கம் போல் நல்லது வெல்லாவிட்டால் உலகம் வாழ்வதுதான் எப்படி ஐயா? கதையைப் படித்தோம்... இனி நாடகத்தைக் காண்போம்.

❋

## இந்த நாடகத்தில் வருபவர்கள்...

**மகாகவி ஆனந்தர்...**

அன்பு நாட்டின் அருமைக் கவிஞர். வாய்மைக்கும், தூய்மைக்கும் இலக்கணம்! தமது நாட்டின் பெருமையை நாடகங்களாகத் தொகுத்து மக்களை அறியாமை யினின்றும் எழுப்பி உண்மை பெறச் செய்கிறார். வயது 35 - நாடகத் துவக்கத்தில்; 55 முடிவில். சிறையின் அவதியால் தோற்றத்தில் 70.

**மணிவண்ணன்...**

அரசகுமாரன்; கவிஞரால் வளர்க்கப்பட்டு, சிலகாலம் அனாதையாகத் திரிந்து, கலைஞனாக வாழ்ந்து, மீண்டும் நாட்டை ஆளுகிறான். வயது 22.

**சுகதேவன்...**

நாட்டின் படைத்தலைவன்; காவல் அமைச்சன். தனிப்பட்ட ஆற்றலால், எதிர்த்து வரும் இடையூறுகளை வென்று நிற்கும் பெருவீரன். வயது 22.

**வீரசிம்மன்...**

பொம்மை மனிதன். அரச பதவியில் இருப்பவன். பெண் களுக்கு அடிமை! கயவர்களின் கைப்பாவையாகிறான். வயது 50.

**சர்வாதிகாரி...**

கொலைஞன். மண்வெறியன். தீமைகளின் இருப்பிடம். நாடு பிடிக்கும் நயவஞ்சகன். தானே கடவுள் என்று மக்களை ஏமாற்றும் தேசத்துரோகி. வயது 50.

**கனிமொழி...**

அழகின் பொலிவு. அறிவின் நிறைவு - அமைதியின் இருப்பிடம். அன்பின் சக்தி. சிறுமை கண்டு சீறும் வீரமங்கை. சுகதேவனின் தங்கை. வயது 20.

**சாந்தி...**

கவிஞரின் மகள். கலைப் பூங்கோதை சுகதேவை மணக்கிறாள். வயது 20.

**அரசி ஊர்வசி...**

கலையகந்தையாள். காமச்சிலையாள். கொலை வெறியினள். அழகான அரணை. வயது 30. கலையுலகில் நாட்டரசி. விதிக்கும் விதிபடைக்கும் மதியாற்றல் மிக்கவள்.

**இளவரசி மேனகை...**

மன்னன் வீரசிம்மனின் முதல் தாரத்தின் மகள். வயது 20.

**குழந்தை மணிவண்ணன்... - குழந்தை சாந்தி...**

கவிஞருக்கு மழலையின்பந் தரும் குழந்தைத் தெய்வங்கள். வயது 7-5.

**வாணி...**

கவிஞரின் மறைந்து போன துணைவி. நினைவு வடிவத்தில் அடிக்கடி அவன் கனவில் நிழலிடும் புனிதவதி. சாந்தி தன் தாய் வாணியின் சாயலையே உடையவள். ஆதலால், வாணி வேடமணியும் பெண்ணே பெரிய சாந்தியின் வேடத்தையும் அணிந்து, தனது நடிப்பின் திறமையை மேலும் உறுதிப் படுத்திக்கொள்ளும் வாய்ப்புள்ளது. மற்றும் வீரர்கள், மக்கள், கலைஞர்கள், ஐந்தாம் படைகள் முதலியோர்.

## திரைக்குப் பின்

**பொதுமை வழிபாடு கூட்டமுதப் பாடல்**

*(மோகனப் பண்ணில்,*
*பலவகைத் தாள கதியில் பாடலாம்)*

வான்மழை பெருகி வளமுறச் சாந்தம்
சூழ்ந்திட வையம் சுகவழிதரும் ஓர்
ஆதிபரம் பொருளாம் - ஜெக
ஜோதி தரும் அருளாம்

ஆதவன் - அதிசய ஒளிதருமதி
அந்தரமதில் - மிக சுந்தரமதாய்
மிளிரும்பலவகை தாரகை மலர்கள்
ஜோதியின் பகுதிகளாம்

மானிட உருவம் அறிவுடனே
உலகினில் வாழ்வதே
உயிர் எனுமொரு ஒளியின் செயலே
உணருவோமிதை... வாழ்வெனும்

நதியின் வேகம் விதியின் வலியால்
விரைந்து ஓடும் ஆதலால்
மாமதிஎனும் அணையினாலே
வாழ்க்கை நதியின் பெருக்கை நிறுத்திச்
சோதனை அலையாய் எழுமாம் பாவமும் பொய்புலை பலவும்

அதற்குக் களைத்துத் திகைத்துத் துயரினில் அழியா வகையை
விரைவில் அருளால் புரிவோம் வருவீரே
விதியை அஞ்சோம் அதை நாம் வெல்வோமே
நலமே செயவே வருவீர் உலகீரே!

# காட்சி - 1

*(சர்வாதிகாரியின் ஆடம்பர மாளிகை)*

*(மனிதச் சிற்றின்பங்கள் யாவும், மண்டிக் கிடக்கும் அரண்மனை, தளிர்க்கரங்களில் தங்க மதுக் கோப்பைகள் ஏந்திய மங்கையர் கூட்டம். ஏவியதும் தாவி வந்து கால் பிடிக்கும் காவலரின் காக்கைக் கும்பல்)*

---

**கா**வலர் குரல்கள் : இராசாதி இராச இராச மார்த் தாண்ட இராச கம்பீர, இராச கோலாகல மகர குண்டல - மகா மண்டலாதிபதி சர்வ அதிகார இராச குருதேவர் வருகிறார்... வருகிறார்...

*(உள்ளே இரண்டு சிங்கங்கள் கத்துகின்றன - சர்வாதிகாரி அன்புடன் வளர்க்கும் காட்டுச் சிங்கங்கள்)*

சர்வாதி : கண்டாகர்ணா! நமது காவற் சிங்கங்கள் ஏன் இப்படிக் கத்துகின்றன? இரை போடவில்லையா? அல்லது போட்ட இரை போதவில்லையா?

*(மீண்டும் சிங்கத்தின் குரல்கள்)*

கண்டாகர்ணா : போடேனுங்க, சாமி! ஆனால் இது மனித ரத்தம் வேணும்னு ஆசைப்படுது. நர மாமிசத்தை எண்ணி நாக்கைத் தீட்டுதுங்க சாமி.

சர்வா : ஏன்? நம் பாதாளச் சிறையில் இருக்கும் கைதிகளைத் தினம் ஒருவராக இதற்கு இரை யாக்கலாமே?

கண்டா : பயனில்லிங்க, சாமி, பாதாளச் சிறைக் கைதி களை இந்தச் சிங்கங்கள் முகர்ந்துகூடப் பார்க்க மாட்டேங்கிறதே!

க.க - 2

**சர்வா :** ஏன்? அவர்களும் மனிதர்கள்தானே!

**கண்டா :** மனிதர்கள்தான். ஆனா அந்தக் கைதிங்க உடம்பிலே ரத்தமே இல்லீங்களே.

**சர்வா :** உயிர் இருக்கிறதல்லவா?

**கண்டா :** ஐயையோ, அவங்க உயிர் நமக்கு வேண்டியிருக் குங்களே! உயிர் போயிட்டா அவங்க மனசிலே இருக்கிற இரகசியம் போயிடுங்களே!

**சர்வா :** *(பெரிதாக சிரித்து)* கண்டகர்ணா! நீ விவரங் களை வெகு நன்றாகப் புரிந்து கொண்டி ருக்கிறாய்.

*(மீண்டும் சிரித்தல். மீண்டும் சிங்கத்தின் குரல்)*

**கண்டா :** சே! மிருகம்... மனுசனை விட மோசமா இருக்கு! போடறதை எல்லாம் தின்னுட்டு சதா கத்திக் கிட்டே இருக்கு.

**சர்வா :** கவனமுடன் பார்த்துக்கொள். அதிட்டமுள்ள சிங்கம். அடக்கி வை.

**கண்டா :** இந்தக் காட்டுச் சிங்கத்தை நொடியிலே அடக்கிப்புடலாமுங்க! ஆனால் அந்தப் பாட்டுச் சிங்கத்தைக் கூட்டிலே தள்ள முடியல லீங்களே! மகா கவியாம்! மண்ணாங்கட்டியாம். அடாடாடாடா! மனுசன் கொஞ்ச நேரங்கூட சும்மா இருக்க மாட்டேங்கிறான் - உம், அவன் இருக்க மாட்டான்.

**சர்வா :** ஓ! அந்தக் கவி ஆனந்தனா; இன்னுமா அவன் விடுதலைப் பல்லவிப் பாடுகிறான்?

**கண்டா :** ஆமாம் - விடுதலை வந்துவிட்டதுன்னே பாடறான் - வீரமாப் பாட்றான் - விடாமல் பாட்றான் - வீடு வீடாப் பாட்றான். வீதி வீதியாய் பாட்றான்! அவன் என்னங்க, அடேங்கப்பா, என்னா பேச்சு பேசறான் என்னா புரட்சி

*பண்றான்.. என்னா பேச்சு பேசறான். என்னா கவி பாட்றான்! மக்கள் அவன் பேசறதைக் கேட்டா மகுடியில் கட்டுண்ட பாம்புங்க மாதிரி மயங்கிப் புடறாங்க.*

**சர்வா :** *என்னை எதிர்த்துப் பேசும் ஆள் இருக்கிறானா இந்நாட்டில்?*

**கண்டா :** *உங்களை மட்டுமா எதுக்கிறான்? அவன் என்னையும் சேர்த்து எதுக்குறாங்க, சாமி! இந்த நாட்டிலே உங்களை எதுக்கிற ஒரே ஆசாமி அவன்தானுங்க. பாருங்க, அவன் உங்களுக்கு எழுதியிருக்கிற பதிலை.*

**சர்வா :** *(ஏட்டைப் படித்தவண்ணமாக) "அழியும் உன்னை அமரகவி பாடமாட்டான்!" முட்டாள்! வாழ்வதற்கு வழி சொன்னேன்! வறியனுக்குப் புரியவில்லை; அரசவைக் கவிஞன் என்றேன்! அனுபவிக்கத் தெரியவில்லை. என்னை அவன் மிரட்டுவதா? சூரியனை இருட்டு மிரட்டுகிறது!*

**கண்டா :** *ஆமாங்க... கோடை இடியை ஒரு சின்னக் குருக்கத்திக் கொடிவந்து மிரட்டுதுங்க! - கோபுரத்தைக் குப்பை மிரட்டுதுங்க. அவன் சொல்றான், வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ....*

**சர்வா :** *வேடிக்கை. 'இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம்,' 'தனி ஒருவனுக்குண விலையெனில் உலகினை அழித்திடுவோம்' இவன் அழிவைத் தெரிந்து கொள்ளவில்லை! உலகை அழிக்கப் புறப்பட்டு விட்டான். விதியை எதிர்க்கிறான். விளையாட நினைக்கிறான். ஆகா! (வெடிச் சிரிப்பு)*

**கண்டா :** *சாமி! நாட்டு மக்கள் அந்தக் கவி மேலே எவ்வளவு அன்பு வச்சிருக்காங்க தெரியுமா?*

**சர்வா :** *நாட்டு மக்கள்! செம்மறி ஆட்டு மந்தைகள்! கண்டாகர்ணா! உடனே சென்று நமது வேந்தரின் மெய்க் காவற்படையினரை அனுப்பி, அந்தப் புரட்சிக் கவிஞனைப் பிடித்துவந்து பாதாளச் சிறையில் போடும்படி நான் ஆணையிட்டதாகக் கூறு - போ!*

**கண்டா :** *சாமி, நீங்க சொல்றது அவ்வளவு எளிமையான காரியமில்லிங்க... அந்த.... கவியிருக்கானே! அவன் செல்வாக்குள்ள ஆளுங்க!*

**சர்வா :** *என்ன உளறுகிறாய்! எலியைக் கண்டு புலி அஞ்சலாமா? அவனைப் பார்த்து நீ நடுங்கலாமா? உம்... புறப்படு.... நானும் உங்கள் பின்னாலேயே வருவேன். உம் - போ - அஞ்சாதே. நானிருக்கப் பயமேன். மகாகாளி! சதாசிவம்!*

**(காட்சி 1 முடிவு)**

# காட்சி - 2

இடம் : ஆற்றங்கரை ஓரம் - ஒரு சிறு குடில்

காலம் : காலை......

*(அமைதி சூழ்ந்த ஆற்றங்கரையில் அமைந்த அழகானக் குடில்கள். பின்னணியில் நெடிய மலைகள், வற்றாத ஊற்றுக்கள். தென்றலிலே தவழ்ந்துவரும் தேன் குயில் ஓசை. அடர்ந்த புதர்களின் அருகில் அழகு மயில் நடனம்! ஓடைகளில் அன்னங்களின் அழகிய அசைவுகள்! இயற்கை சீரோடும் சிறப்போடும் அமைந்த இடம்)*

---

*கவிஞர் ஆனந்தன் பாடுகிறார்*

மாதவநாடும் நல்வாழ்வுறும் நாளென்றோ
மானிலமே மகிழ்வுறவே மானிடரின் மாய்கைமாறி - மகா
*(மாதவ)*

மாதா மனமிக மகிழ்ந்திட மாட்சிமை மிகுத்திடுமோ அறியேன்
சத்தியஜோதியாய் ஜெகமேவீசும் சுடரொளியே ஒளியே
ஒளியே

சூதால் சூழ்ச்சிகள் சுழல்வது ஓய்ந்திடுமோ
சதிசெய்யும் அதமர்கள்வீழ - மகா *(மாதவ)*

ஆழியின் அலை எழுந்தணிசெய்யும் ஒலியிசை
சூழும் கடலகழியாக - விழைவாய்
உலகினர் புகழ்ந்திடும்
மலையே உயர் அரணாய்
இன்பமே மழையாய், அன்பதே நிலமாய்,
பண்பதேபயிராய்ச்
சீர்வளமே சேர்ந்துளமே திகழும் அழகமுதமே!

கவி : *ஒளிமயமான இறைவனே! என்று என் மனத் தெழுந்த கனவுகள் நனவாகும்? என்று என்*

*மக்கள் நல்வாழ்வைப் பெறுவார்கள்? வானளாவிய உயர் மலைகள்! வற்றாத உயிர் நதிகள்! இனிய வயல்கள்! நெடிய பொழில்கள்! வானம் பொழிகிறது! பயிர் செழிக்கிறது! வளம் கொழிக்கிறது! எனினும் எனது நாட்டை வறுமையும், மடமையும் பிடித்து வாட்டுகின்றன. பசியும் பிணியும் புயல் போல் சூழ்கின்றன! கவலை, விடம் போல் ஏறுகிறது. அரசரோ சர்வாதிகாரியின் கைப்பாவையாக ஆடுகிறார். ஏழ்மை திகைக்கிறது! இதயம் துடிக்கிறது! அதிகாரம் அலட்சியப்படுத்துகிறது! நிர்வாகம் நிமிர முடியாமல் கூனலாகிவிட்டது. மக்கள் மாக்களாகிறார்கள். நியாயங்கள் நடுங்குகின்றன. சிறுமைகள் சிங்காதனமேறுகின்றன. தருமங்கள் திகைத்து ஓடுகின்றன. அறங்கள் கல்லறைகளாகின்றன! பச்சை மரங்களைப் பற்றி எரிக்கிறார்கள்! பட்ட மரங்களுக்குப் பாலூற்றிப் பூசை செய்கிறார்கள்*

***மாணவன் :*** *ஆமாங்கய்யா, நம்ம ர்ாசாவோ அந்தப்புரமே கதின்னு கெடக்கிறாரு. சனங்களோ சொந்தப் புரமே கதின்னு இருக்கிறாங்க. நானும் எந்தப் புரத்திற்குப் போறதுன்னு புரியாம தவிக்கிறேன். என்ன பண்றதுங்க? எல்லாம் விதிங்க.*

***கவி*** *: விதி! அந்த விதியை மனிதன் மதியால் வென்றே தீர வேண்டும், தம்பி.*

*(ஓடையின் சலசலப்பு. பறவைகளின் இனிய ஒலிகள் கொஞ்சிக் குலவிப் பாடும் குயில் ஓசையைத் தொடர்ந்து இசை மெருகுடன் கவிஞனின் இதயப் பாடல் துவங்குகிறது)*

***பாட்டு***

**விதியை வெல்வோம் நாம்**
**வீண்துயரம் ஏனோ?**
**வீண்துயரம் ஏனோ? (விதியை)**

வான மதி இரவியைப் போலே
ஞானஒளியே பெறுவோமே!
வீணை ஒலிகுழலிசை யாலே
கீதமது எழுவது போலே
மோனமா மனதால்
நாதமறிவோமே (விதியை)

மாயை எனும் இருளதனாலே
மானிடனே மதிமயங்காதே
தூய அன்பதனாலே
வாய்மை பெறுவோமே. (விதியை)

கவி : *விரட்டும் விதியை விரைவில் வெல்வோம் தம்பி!*

மாண : *வேண்டாம் அய்யா! விதியை வெல்ல நம்மால் முடியாதுங்க! இந்த சனங்களைப் பத்தி நாம ஏங்க கவலைப்படணும்? அவங்க தலைவிதிப்படி எப்படியோ ஏதோ நடந்துட்டுப் போகட்டுங் கய்யா! நாட்டை மறந்துட்டு நம்ம வேலையைப் பார்க்கலாங்கய்யா!*

*(மீண்டும் கவிஞர் பாடுகிறார்)*

கவி : தாயெனவே நமைப் பாலிக்கும்
தாயகமே தாரகமென்போம்
வாழி நேசதேசம் வாழிநலம் சூழ *(விதியை)*

மாண : *தேசமாவது, தெய்வமாவதுங்க! நமக்கு ஆபத்து வந்தா, ஏன்னு கேக்க நாதியில்லீங்க இந்த நாட்டிலே. நம்ம நாட்டிலே நா நரிகளின் கூட்டம் அதிகமாயிடுச்சிங்கய்யா! நாவன்மை பெருகிப் போச்சுங்க! செயல்வன்மை குறைஞ்சிப் போச்சுதுங்க!*

கவி : *தம்பி, துன்பத்தைக் கண்டு ஓடி ஒளிவது கோழைத்தனம். வீரர்களாய்ப் பிறந்தோம். உழைப்பால் சிறந்தோம். சூழ்ச்சியினால் வீழ்ந்*

தோம். காலம் வந்துவிட்டது. கோழை ஆயிரம் முறை சாகிறான்.

**மாண :** ஆமாம், வீரன் மாத்திரம் சாகாமலா இருக்கான்? வாங்க, குழந்தைகளையெல்லாம் அழச்சுகிட்டு எங்கேயாவது வேறு நாட்டுக்குப் போயிடுவோம். ஆபத்து வேகமா வந்துகிட்டிருக்குதுங்கய்யா.

**கவி :** தம்பி! பிறந்த நாட்டை விட்டு ஓட நானொன்றும் நன்றி கெட்டவனல்ல. ஆபத்து. அது ஒன்றும் ஆயிரம் கால் பூதமல்ல, தம்பி.

**மாண :** அதைவிடப் பயங்கரமானதுங்க அது! சர்வாதி காரி சொன்னபடி அவன்மீது தாங்கள் காவியம் எழுதவில்லையாம். அதனாலே ரொம்ப ரொம்பக் கோபமா இருக்கிறான். போனாப் போறான், ஏதோ ஒன்னைக் கிறுக்கி அவன் தலைமேலே போட்டுடுங்கய்யா. பாம்பு கிட்டே பகை எதுக்குங்க?

**கவி :** கொடும் புலிக்குப் பயந்து குயில் பாடுவதில்லை, தம்பி! நானும் அவனைப் புகழ்ந்து பாடிவிட்டால் இந்த நாட்டின் ஆத்மாவே அவன் காலடியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டது என்றுதான் பொருள்.

**மாண :** என்ன செய்யறதுங்க? ஒன்னு, நாம் உலகத்தோட ஒத்துப் போகணும். இல்லேன்னா, உலகம் நம்மோட ஒத்து வரும்படி செய்யணுங்க. ஏங்கய்யா, எனக்கொரு சந்தேகம்! நாம் கொஞ்ச நாளைக்கு சர்வபலம் படைத்த இந்தச் சர்வாதி காரியை எதிர்க்க ஆயுதப் புரட்சிக்கு மக்களைத் தயார் செய்தா என்னங்க?

**கவி :** அதற்கும் துணிந்து விடலாம் தம்பி. அது ஒன்றும் அவ்வளவு பெரிய காரியமல்ல. ஆனால்...

**மாண :** உயிர்ச் சேதமாயிடுமேன்னு பயப்படறீங்களா?

**கவி** : *என் உயிருக்கு நான் என்றுமே அஞ்சியதில்லை, தம்பி. ஆம், என்று, என் அருமைத் துணைவி வாணி என்னைவிட்டுப் பிரிந்தாளோ, அன்றே என் உயிரின் மீதிருந்த ஆசையெல்லாம் அற்றுப் போய்விட்டது தம்பீ! ஆயுதப் புரட்சி வேண்டு மென்று அரைக்கணத்தில் முடிவெடுத்து விடுவேன். அனால் அந்தப் புரட்சிக்கு ஏற்ற துணிச்சல் நாட்டு மக்களுக்கில்லை. மேலும் உணர்ச்சி வசப்பட்டு திடீரெனத் துவங்கும் ஆயுதப் புரட்சி என்பது, ஒரு வாணவேடிக்கை போன்றது... வைக்கோலில் பற்றிய நெருப்பைப் போல் வெகு விரைவில் அணையக் கூடியது! மேலும் என் துணைவி வாணி என்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்த ஒப்பற்ற இரண்டு உயிர்கள்! ஆம்! உவமையிலாத செல்வங்கள்! உலகினுமரிய உயர் தனி ஓவியங்கள்... எனதரும் குழந்தை சாந்தி! வளர்ப்பு மைந்தன் மணி வண்ணன்! இந்த இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றுவது என் வாழ்வின் இலட்சிய மட்டுமல்ல, தம்பி. என் உயிரினுமினிய வாணிக்கு நான் கொடுத்துள்ள, இறுதிக்கால வாக்குறுதி! இந்த உலகமே அழிந்தாலும் அந்தக் குலதெய்வத் தினிடம் நான் கொடுத்த என் வாக்குறுதியை நிறைவேற்றியே தீருவேன். ஆம், இந்தக் குழந்தைகள், அந்தப் பெண் தெய்வம் என்னிடம் ஒப்படைத்த ஒப்பிலாச் செல்வங்கள்; இங்கெனது ஆவி போயினும் வாணிக்குத் தந்த வாக்குறுதியைக் காப்பது என் கடன்; குழந்தைகள் என் உயிரின் வேர்கள்.*

*(தன்னை மறந்து தன் முன்னைய நினைவில் ஆழ்ந்து)*

*ஆம் அதோ பார் என் வாணி! மறுபடியும் வான்வெளியிலே தோன்றுகிறாள். நதியின் அலை*

களிலே அவளது வண்ணச் சிலம்பொலியைக் கேட்கிறேன். தென்றலின் வீணையில் அவளது தேன்பாட்டைக் கேட்கிறேன். மீண்டும் மீண்டும் அவள் தன் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும் என்று என்னைத் தூண்டிக்கொண்டே இருக்கிறாள். அதோ, என் புனித தெய்வம், உயிரின் துணை! ஆத்மாவின் அமரதீபம்.

*(பின்னணி: வானப் படுதாவிலே வாணியின் உருவம் கலைந்த ஓவியம்போல் காட்சி தருகிறது பின்னணியில் சாமா இராகம் ஒலிக்கட்டும்)*

இல்லை வாணி! எக்காரணங்கொண்டும் உன் குழந்தைகளை நான் பிரிய மாட்டேன். உனக்குத் தந்த வாக்கினை மறக்கமாட்டேன். என் கடமையை நான் செய்தே தீருவேன். வாணி - வாணி! வாணி!

*(உரு வெளித் தோற்றம் மறைதல்)*

**மாண** : அய்யா. மன்னிக்கணுங்கய்யா. உங்களுக்கு அம்மா நினைவு வர நானே காரணமாயிட்டேன். ஆமாங்கய்யா, அம்மா எப்படித்தானுங்கய்யா இறந்தாங்க?

**கவி** : அந்த அமரதேவதை இறக்கவில்லையப்பா. பாவிகளால் கொல்லப்பட்டாள். சாட்சி எங்கே என்று கேட்டது இந்தச் சதிகார உலகம்! மனச் சான்று என்று ஒன்று இருந்தால், அது அந்தக் கொலைஞர்களை ஒருநாள் இந்த உலகுக்கு அடையாளம் காட்டியே தீரும். தருமத்தின் நாடகம் அதிக நேரம் தனது அறத்திரையை மூடிவைக்காது, தம்பி, விரைவில் மாயத் திரைகள் அனைத்தும் அற்று விழப்போவது உறுதி! உண்மைகள் இந்த உலக நாடக மேடையில் நடமாடப்போவது நிச்சயம். அதை மக்கள் கண்டு மகிழப்போவதும் உறுதி.

**மாண** : என்னங்க உலகம் இது! உலகம் முட்டாள்களின் சந்தைங்க. முரட்டுப் பசங்கள் நிறைந்த மூட மரக்காடுங்க.

**கவி** : வேடிக்கை உலகம், கொடியவர்கள் சிலர் - அவர் களுக்கு இரையாவோர் மிகப்பலர். கெடுப்பவர் சிலர்! கெடுவோர் மிகப் பலர். தீமையை எதிர்க்க முடியாத ஆமைகள் கூட்டமாகி விட்டது நமது சமுதாயம். ஆம் அது ஓர் ஓய்வில்லாச் சந்தை தான். இன்பதுன்பம் எல்லாம் இதன் விற்பனைப் பொருள்கள், தம்பி! பயத்தால் நடுங்காதே அச்சம் ஒரு மாயை அதை வெல்வதே நல்லவர் கடமை.

**மாண** : நடக்காதுங்க, நீங்க ஒருத்தர் கதறி என்னங்கோ பிரயோசனம்? கோடிக்கணக்கான கோட்டான் களுக்கு மத்தியிலே ஒரே ஒரு குயில் கூவினா, அது யாருக்குங்க கேக்கப் போகுது?

**கவி** : தம்பி! சில பேர் தியாகத்தால் பல பேர் வாழ்வது தான் உலக நியதி... அந்த நியதிக்கு நானும் பலியாக வேண்டுமானால் அதற்கும் துணிந்து தான் தம்பி இருக்க வேண்டும்.... இந்தா, இந்தச் சுவடியை வைத்துக்கொள்.

**மாண** : என்னாங்க இது, நாடகங்களா...? ஆ...! கனவு... கனவு! அடடே, இதை எழுதி முடிச்சிட்டிங் கிளா?

**கவி** : ஆம்! விரைவில் நனவாகப் போகும் என் கனவு! இந்த நாடகம் என் கனவை உலகில் நிறைவேற்றி விடும், தம்பி! இது ஒன்றே போதும் - இந் நாட்டின் உறக்கத்தை நீக்க.

இது இந்த நாட்டின் விதியை வெல்லப் போகும் வெற்றிப்படைக் கருவி! என் உயிரின் விருப்பம், ஆத்மாவின் துடிப்பு! நம் நாட்டின் குரலை இந்த நாடகத்தில் கேட்கப் போகிறாய். இதை

நாடெங்கும் நடிப்பதற்கு ஏற்பாடு செய். நிறைய பிரதிகளை எடுத்து எல்லோருக்கும் வழங்கு. நம் மக்களுக்குக் கலை உணர்ச்சி அதிகம்.

*(சுவடியை மாணவனிடம் தருகிறார்)*

**மாண** : ஐயா! மறுபடியும் உங்களைப் பார்க்க நான் உயிரோடு வருவேனா...

**கவி** : ஏனப்பா இப்படிப் பயப்படுகிறாய்?

**மாண** : நிலைமை அப்படி இருக்குங்க.

**கவி** : சோதனைக்கு அஞ்சாதே! போய் வா.

*('அப்பா, அப்பா' என்று குழந்தைகள் அழைக்கும் ஒலி)*

**கவி** : அதோ குழந்தைகள்... என் தெய்வங்கள்... நீ போய் வா. பிறகு சந்திப்போம்.

*(மாணவன் போகிறான். குழந்தைகள் வருகின்றனர்)*

**கவி** : மணிவண்ணா.... சாந்தி!

**சாந்தி** : அப்பா.... அப்பா... பாருங்கப்பா இந்த... அண்ணாவை.

**கவி** : என்னம்மா... அண்ணாவிற்கு என்ன?

**சாந்தி** : விளையாட வரமாடேங்குதுப்பா!

**கவி** : அப்படியா... ஏம்மா?

**சாந்தி** : இராஜமந்திரி விளையாட்டு விளையாடலா முன்னு சொன்னேன். அண்ணா வேணாங்குது.

**கவி** : இராஜா விளையாட்டு பிடிக்கலையா, ஏன்? நல்ல விளையாட்டாச்சே, மணிவண்ணா! நீ இராஜாவாக இரு... உன் தங்கை சாந்தி மந்திரியா யிருக்கட்டுமே! நான் வேண்டுமானால் உங்கள் சேவகனாக இருக்கிறேன்! உம் உம்! வணக்கம்.

இராஜா மந்திரிகளே! உங்கள் அரசாட்சி நீடுழி வாழ்க! உங்கள் அரசாங்கத்துக்குப் பெயர் என்ன? உங்கள் அரசு என்ன அரசு? வல்லரசா? நல்லரசா? புவியரசா? பூவரசா? என்ன அரசு? சொல்லுங்கள்... அரசே?

**மணி** : அதெல்லாம் வேணாம்பா, அரசன் என்றாலே ஆபத்து என்றுதானே அர்த்தம்.

**சாந்தி** : ஆபத்து வந்தால்தான் காப்பாற்ற நான் இருக்கிறேனே!

**கவி** : உம்... உன் தங்கை சாந்தி இருக்கையில் உனக்கு ஏனப்பா பயம்? ஏனம்மா சாந்தி! உன் அண்ணனுக்கு ஆபத்து வந்தால் நீ காப்பாற்று வாயல்லவா?

**சாந்தி** : ஓ.... என் உயிரைக் கொடுத்தாவது அண்ணன் உயிரைக் காப்பாத்துவேன், அப்பா!

**மணி** : ஏன் சாந்தி! இப்படிப் பொய் பேசறே?

**சாந்தி** : எது பொய்... ஏன்? நான் உன்னைக் காப்பாற்ற முடியாதா?

**மணி** : உன் உயிர்போன பிறகு, என் உயிர் இருக்குமா? அது பொய்தானே?

**கவி** : ஆ - என் கண்மணிகளே! உங்கள் அன்பே உங்களைக் காப்பாற்றும் (உச்சி முகர்ந்து முத்த மிட்டு) அன்பின் தெய்வங்களாகிய உங்களைப் பிரிக்க யாரால் முடியும்? நீங்கள் இன்று போல் என்றும் வாழ்வீர்களாக! வாழ்க என் செல்வங்கள். வளர்க என் கண்மணிகள்!

**சாந்தி** : அப்பா! நேரமாகுது. நாங்கள் போக வேணும்.

**கவி** : எங்கேயம்மா இவ்வளவு அவசரம்?

**சாந்தி** : உங்களுக்குத் தெரியாதா அப்பா?

**கவி** : தெரியாதே!

**சாந்தி** : மழை நாட்டு மாமன்னர் மணிவண்ணருக்கு முடிசூட்டு விழா நடக்கப் போகுதப்பா!

**கவி** : முடிசூட்டு விழாவா! எங்கே அம்மா?

**சாந்தி** : அதோ, அந்த நந்தவன நகரத்தில்...!

**கவி** : நந்தவன நகரம்! பலே! உம்... பிறகு!

**சாந்தி** : குடிகள் யார் தெரியுமோ?

**கவி** : தெரியாதே! சொல்லம்மா. குடிகள் யார்?

**சாந்தி** : அங்குள்ள மான்கள், மயில்கள், மணிப் புறாக்கள்! கிளிகள், குயில்கள், கோழி இனங்கள்! குருவி ...மைனா வானம்பாடி! காடை, கழுகு, கருப்புக் குருவி! மலர்கள், செடிகள், மாமரங்கள்! மாடு, ஆடு, கன்றுக்குட்டி! மலைகள், நதிகள், மது வனங்கள்! கனிகள், கரைகள், கார்மேகங்கள்!

**கவி** : அப்புறம்?

**சாந்தி** : அப்புறம், கார்மேகங்கள்! நீர் வேகங்கள்! நதி ஓட்டங்கள்! புது ஆட்டங்கள்! அப்பா இந்த உலகத்தில் எவ்வளவு உண்டோ அவ்வளவும் எங்களுக்குத்தாம்பா சொந்தம்.

**கவி** : பலே சாந்தி... பலே.... நீயும் பால கவி ஆகி விட்டாய் தாயே, பால கவி ஆகிவிட்டாய்!

**சாந்தி** : அப்பா! மகாராஜா மந்திரியோடு சிம்மா சனத்திலே உட்காரும்போது, பரத நாட்டியம் பாட்டுக் கச்சேரி எல்லாம் உண்டே. தாங்கள் அவசியம் வந்துடணும்.

**கவி** : அடடே! பாட்டு நடனங்கூடவா? யாரையம்மா ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?

**சாந்தி** : *(அழகிய நடிப்புடன்)* அப்பா, அப்பா! வெள்ளை மயில் ஆடும்! நீல மயில் அசையும்! குயில் பாடும்!

பச்சைக்கிளி பேசும்! வண்டினம் சுருதி கூட்டும்! வானம்பாடி சுரம் பாடும்! வாத்துக்கள் தாளம் போடும்! தவளைகள் தத்திப் பாயும்! புறாக்கள் சிறகடித்துக் கை தட்டும்! கொண்டலாத்தி தலையாட்டும்! மரக்கிளைகள் ஆமோதிக்கும். கருடன், கழுகு எல்லாம் மகிழ்ச்சி தாங்காமல் கைன்னு சத்தம் போடும்.

**கவி** : உம்! *(ஆவல் ததும்ப)* வெள்ளை மயில் ஆடும். நீல மயில் அசையும். குயில் பாடும். கருடன் கழுகு முதலியவை மகிழ்ச்சி தாங்காமல் - 'கை' என்று சத்தமிடும். உம்... பிறகு, பிறகு...

**சாந்தி** : போங்கப்பா! நான் இதற்கு மேல் சொல்ல மாட்டேன்.

**கவி** : ஏனம்மா?

**சாந்தி** : எல்லாவற்றையும் இப்பவே சொல்லிவிட்டால் அப்புறம் முடிசூட்டு விழாவிற்கு வரமாட்டிங்க.

**கவி** : இல்லையம்மா இல்லை. அவசியம் வருகிறேன். நீங்கள் புறப்படுங்கள், நான் பின்னாலேயே வருகிறேன்.

**சாந்தி** : உம்.... அண்ணா! நீ அரசர் ஆயிட்டே! புறப்படு... உம்...

**மணி** : நீயும் அமைச்சர் ஆயிட்டே.... வா... அம்மா! அவசியம் வந்துடுங்க!

*(இருவரும் செல்கின்றனர், கவிஞர் தனிமையில்)*

**கவி** : *(திகைப்புடன்)* ஆகா! என்னே இவர் தம் மழலை இன்பம்! இச்சிறு வயதில் எவ்வளவு உன்னதமான எண்ணங்கள்! ஆழியினும் அகண்ட இலட்சியங்கள்! காலக்கனவின் கற்பனைகள். குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற்கேளாதவர்! அமரத்வமான மறை

*மொழிகள்! இம்மொழிகளுக்கு எதைத்தான் உவமை கூறுவது? உலகின் செல்வத்தையெல்லாம் பணயமிட்டாலும் இப்பேரின்பத்தைப் பெற முடியுமா? மனிதனை அமரனாக்கும் மழலை இன்பமே நீ வாழ்க.*

***பாட்டு:***

*சாமா இராகம்*

குழலிசை இதற்கிணையாமோ - வேய்ங்
குழலிசை இதற்கிணையாமோ
யாழொலியும் ஈடாமோ.... (குழலிசை)
மழலையின் தேன்மொழி அழகொளியாலே
தழைக்குது ஆனந்தம் தாரணி மகிழ்வுறும் (கு)

அன்பெனும் சுவைமது
அனுதினம் பொழிந்திடும்
பண்பினிக்கும் குரலால்
பாட்டமுதம் தரும்
துன்பத்தைத் தீர்த்திடும்
தெய்வமாம் குழந்தைகள்
இன்பமாய் வாழ்ந்திட
இறைவனின் கருணையால் *(குழலிசை)*

*(திடீரென முரட்டு வீரர்கள் அறுவர் இடி நகையுடன் வருதல் - பயங்கரமான காலடி ஓசைகள்)*

**கவி** : *யார் நீங்கள்?*

***வீரன்.1*** : வேந்தர் வீரசிம்மரது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர்கள். இதுதானே சாந்தி குருகுலம் என்பது?

**கவி** : ஆமாம், இதுதான் சாந்தி குருகுலம்!

***வீரன்.2*** : உமது பெயர்தானே மகாகவி ஆனந்தர் என்பது?

**கவி** : *மகாகவி என்று அழைப்பது மக்களின் ஆவல். ஆனந்தன் என்பதுதான் என் பெயர்.*

**வீரன்.3 :** *உம்... உம்மை உடனே கைது செய்து பயங்கரப் பாதாளச் சிறையிலே தள்ளும்படி இதோ அரசர் கையெழுத்தோடு கூடிய உத்தரவு.*

**வீரன்.4 :** *நீர் எழுதிய நூல்களையும், குருகுலத்தையும் சாம்பலாகும்வரை கொளுத்தும்படி இதோ சர்வாதிகாரியின் இரண்டாவது உத்தரவு.*

*(இரண்டு உத்தரவு ஓலைகளையும் தர, கவி இரண்டையும் பார்த்து)*

**கவி** : *பயங்கரச் சிறைவாசமா? எனக்கா? நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!*

**வீ-1** : *குற்றம் செய்யாதவர் போலிருப்பதே பெரிய குற்றமாகும்.*

**வீ-2** : *நீர் அபாயகரமாக வாழ்பவராம்! புரட்சிக்கார ராம்! சிந்தனைச் செம்மலாம். சுதந்திர வீரராம். ஆகையால் சிறையில் சாக வேண்டியவராம்! அதோ பாரும் உம்மைப் பிடிக்க ஒரு படையே வந்திருக்கிறது.*

**கவி** : *வேண்டாம்! நான் குற்றமற்றவன்.*

**வீ-3** : *எமது சர்வாதிகாரியின் மீது புகழ்க்காவியம் பாட மறுத்தது முதற் குற்றம். உம்மைப் போல படிச்ச கவிகள் எல்லாம் இனிமே சிறையிலே தான் இருக்கணும்.*

**வீ-4** : *எல்லாம் தெரியும். நீர் ஒரு பெரிய துரோகி!*

**கவி** : *பிறந்த நாட்டின் மீது பற்றுக் கொள்வது துரோகமா?*

*(அது சமயம் வேட்டைப்புலி போல் பாய்ந்து, குரு குலத்துக்குள் நுழைகிறான் சர்வாதிகாரி)*

**சர்வா** : அதைவிட மகா துரோகம் உலகில் இல்லை என்று என் சர்வாதிகாரம் சாற்றுகிறது.

**கவி** : அறிவை வளர்க்க நூல்களை எழுதுவது குற்றமா?

**சர்வா** : அறிவை வளர்க்கும் உரிமை அடிமைக்கு இல்லையென்று அதிகாரச் சட்டம் அறைகிறது!

**கவி** : வறுமையைப் போக்க வழிவகுப்பது பாவமா?

**சர்வா** : வறுமையில் வாடுவதே உங்கள் தலைவிதி! புரட்சிக் கவியா பாடுகிறாய்? மக்களைக் கெடுக்கிறாய்?

**கவி** : உறங்கும் என் மக்களைத் தட்டி எழுப்புவது தீமையா!

**சர்வா** : மீளா உறக்கத்தில் உங்களை வீழ்த்துவதே எமது திட்டம். இனி என்றுமே நீங்கள் எழுந்திருக்க முடியாது. செங்கோலுக்கு முன் சங்கீதமா பாடுகிறாய்...

**கவி** : இல்லை... கொடுங்கோலுக்கு முன் போர் முரசு கொட்டுகிறேன்.

**சர்வா** : இல்லை! காட்டுப் புலிக்குமுன் வீட்டெலி நாட்டியமாடுகிறது! ஆகா... என்ன துணிச்சல்! என்னிடமே உன் சுயரூபத்தைக் காட்டுகிறாய் உம்... அடே ....போடு விலங்கை...! கொளுத்து வீட்டை....! எல்லாம் எரியட்டும்... என் மனம் போல்....!

**கவி** : (துடித்து) ஆ... கொளுத்தவா? என் குரு குலத்தையா? எனது நூல்கள், என் கவிதைகள், காவியங்கள் அனைத்துமே முற்றுப்பெறாத கனவுகள் தானா...? என் நண்பர்கள் எங்கே?

**சர்வா** : அங்கே சொர்க்கத்தில்! உனக்கு வரவேற்புக் கீதம் பாடுகிறார்கள்.

**கவி** : வேண்டாம்.... என் மனம் உன்னிடம் பிடிபட மறுக்கிறது. என் அந்தராத்மா அடிமைச் சிறையை உதறித் தள்ளுகிறது.

**சர்வா** : விதியோ விளையாடினாய், வினை வேட்டை யாடி விட்டது.

**கவி** : வேண்டாம்... என் கவிதை முடியவில்லை. கனவு கலையவில்லை.

**சர்வா** : இதுதான் முடிவின் ஆரம்பம்; மரண தாண்டவத் தின் முதற்பகுதி; அழிவின் அரிச்சுவடி. நீ மட்டுமல்ல, உன் துணைவர் - தோழர் அனை வருக்குமே இனி ஆயுள் முடிந்துவிட்டது. என்ன வேடிக்கை? அடே! தீ பரவட்டும், எல்லாம் எரியட்டும். என் மனம் குளிரட்டும்! எதிரிகள் மடியட்டும்!

**கவி** : ஆ! நெருப்பு! என் அருமைக் குழந்தைகள்! என் இலட்சியங்கள் குழந்தைகள்! அனைத்துமே முற்றுப் பெறாத கனவுகள்தானா? அய்யோ! அவர்களைக் காப்பது யார்? மணிவண்ணா...! சாந்தி! சாந்தி...! வாணி! வாணி! உன் குழந்தை களைக் காப்பது யார்?

**சாந்தி** : அப்பா... அப்பா....

**மணி** : அப்பா... ஆ!

**கவி** : வேண்டாம், என் குழந்தைகளைக் கொல்ல வேண்டாம். ஐயோ, குழந்தைகள்...! சாந்தி...! சாந்தி! மணிவண்ணா...!!

*(கவிஞரின் தலையில் பலமான அடிவிழுகிறது; தன்னிலை இழக்கிறார். அன்பிளம் புறாக்கள் போன்ற குழந்தைகள் ஓடிவந்து தந்தையைக் கட்டிப் பிடிக்கின்றனர். இராட்சஸ வீரர்களது கரங்களோ, அவர்களைப் பிரித்து அறைகின்றன. மகாகவியின் மனம், நெருப்பில் விழுந்த மலரா*

*கிறது. தம்மை மறந்து வீரர்களைத் தாக்கப் போகிறார். மகா முரடர்களான வீரர்கள், விலங் கிடப்பட்ட கவியின் தலையை இரும்புத் தடி கொண்டு தாக்க, அவரது சித்தம், தன்னிலை இழக்கிறது. குழந்தை சாந்தியைப் பார்த்தவண்ண மாகவே கதறிக் குமுறுகிறார்; ஆனால், முதலை வாயிற்பட்ட மீனைப் போல், காவலர்கள் அவரை இழுத்துச் செல்கின்றனர். 'சாந்தி' 'சாந்தி' என்று அவர் உரக்கக் கூவிய அவலக் குரலின் எதிரொளியால் அக்காடும் அதனைச் சூழ்ந்த மலையும் குன்றும் நதியும் ஒரு கணம் கலங்கின. 'வாணி வாணி' என்று அவர் எழுப்பிய அவலக்குரலால் வானமும் வான்முகடும் ஒரு கணம் அதிர்ந்தன. ஆனால், வஞ்சக சர்வாதிகாரி யின் மனம் கலங்கவில்லை. சேவகர்கள் சிறிதும் அசையவில்லை. பரந்த உலகிலே அக்குழந்தைகள் அனாதைகளாகிறார்கள். குருகுல மாணவர்கள் அனைவரும் அதற்கு முன்பே கைதிகளாகி விட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். குழந்தைகள் இரண்டும் எங்கோ புறப்பட்டுப் போகின்றன. பாவம்! விதிதான் இனி அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்)*

**(காட்சி 2 முடிவு)**

## காட்சி - 3

இடம் : அரண்மனை நந்தவனம்

*(நிழற்படுதாவில் காலத்தின் நிழற்சக்கரம் சுழலட்டும்; பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு)*

*பின்னணிப் பாடல்*

காலமெனும் காட்டாறு
கரைமீறி ஓடுதடா...!
கேலிமிகும் உலகெல்லாம்
காலம்செய் பாலமடா!
கோடியுகக் கதைபலவும்
கூவுகிற கற்பனையும்,
காலமெனும் கவிஎழுதும்
கலைமலியும் காவியமாம்!
கோஉயிர்க் குலமெல்லாம்
குலவுகிற வாழ்வெல்லாம்
காலமெனும் கன்னியவள்
கண்ணிமையின் லீலையடா!
காலைப்பொன் சூரியனும்
கார்முகிலின் சந்திரனும்
காலமெனும் வண்டியிலே
கடையாணி சக்கரமாம் *(கால)*

*(நிழற்காட்சி நீங்கட்டும். நேர்க்காட்சி மின்னொளி வெள்ளத்தில் தெரியட்டும். ஊர்வசி அரண்மனை நந்தவனத்தில், மலர்க் கயிற்றால் அலங்கரிக்கப் பட்ட ஊஞ்சலில் ஆடிய வண்ணம் பாடுகிறாள்)*

குயில்கூவும் கோடையிலே
மயில்ஆடும் மழைகண்டு

**கோலவண்டு யாழைமீட்டும்**
**கவிகொட்டும் வானம்பாடி!**

**சித்திரையில் ரதிமதனன்**
**சிலைபாயும் ஐங்கணையும்**
**சுத்திவரும் ஊர்வசியின்**
**சுடர்விழியின் மந்திரமாம்...**

*(அரண்மனைச் சோலையில், மாலை நேரத்தில் ராணி ஊர்வசி ஊஞ்சலில் அமர்ந்து பாடி ஆடுகிறாள். அச்சமயம் சர்வாதிகாரி அங்கு வருகிறான்)*

சர்வா : **கண்ணாடிக் கண்ணிஉனைக்**
**கண்டதுமே எனதுமனம்**
**விண்ணாடிச் செல்லுதடி**
**வேதங்கள் காணுதடி**
**மண்ணாடும் மான்விழியே**
**மயிலாடும் ஒயிலாலே**
**திண்டாடித் தெய்வமெலாம்**
**தெருவெல்லாம் அலைந்திடுமாம்**

***சர்வா*** : *(சிரித்து) ஏது, அரசி ஊர்வசி அம்மையாரின் மகிழ்ச்சி, ஆனந்தத்தின் எல்லையையே எட்டிப் பிடித்து விட்டது போலிருக்கிறதே...?*

***ஊர்வசி*** : *நான் சகலகலாவல்லி!*

***சர்வா*** : *நான் சர்வாதிகாரி!*

***ஊர்வ*** : *நான் சர்வாலங்காரி!*

***சர்வா*** : *நீ அலங்காரி என்பதை வரவேற்கிறேன் அரசி என்பதை வாழ்த்துகிறேன். ஆனால், என் எழிலரசி! அலங்காரியாக இருந்து என் ஆத்மாவை அலங் கோலப்படுத்தும் நீ, அரசியாகும்போது அடிக்கடி என்னை விட்டு விலகிப் போய் விடுகிறாயே, ராணி!*

**ஊர்வ** : கவலை வேண்டாம், தங்களுக்குரிய நியாயமான பங்கு எங்கும், எதிலும், எப்போதும் உண்டு. என்ன! எப்படி இருக்கிறது நமது இலட்சிய வான வேடிக்கைகள்? தங்களது அறிவின் செப்பிடு வித்தைகளைச் சீக்கிரமே செய்யுங்கள்.

**சர்வா** : ஊர்வசி! இனிமேல் நாம் நமது கொண்டாட்டங் களை எல்லாம் சற்று ஒதுக்கி வைக்க வேண்டும். கடந்த இருபது ஆண்டு காலமாக எந்த இலட்சி யத்திற்காக நாம் பாடுபட்டு இந்நாட்டிலே பெருமுயற்சிகள் செய்து வருகிறோமோ, அந்த இலட்சியம் கைகூடும் காலம் கிட்டிவிட்டது. உள் நாட்டில் நடக்கும் இந்த வறுமைப் போரிலும், குழப்பக் கொந்தளிப்பிலும் இந்த நாட்டை நமதுரிமையாக்கிக் கொள்ளத் தவறிவிட்டால், பின்னால் என்றுமே இயலாமற் போய்விடும்.

**ஊர்வ** : அன்பே! இதற்குத்தானா இவ்வளவு சிந்தனை? சமயம் பார்த்து நமது நாட்டுப் படைகளைக் காலரூபனின் தலைமையில் இந்த நாட்டின் எல்லையை முற்றுகையிடச் சொல்லுங்கள். இங்கு அவர்களை எதிர்க்கும்படியான வீரர்கள்தான் இல்லையே. வெற்றி நமதே என்பதற்குத் தடை என்ன? அரசன் வீரசிம்மன் என் மந்திரப் பொம்மை! செல்வர்களான பெருங்குடி மக்க ளெல்லாம் உமது தாசானுதாசர்கள்! அடியார்க்கு அடியார்கள்! இன்னும் என்ன வேண்டும் நமக்கு?

**சர்வா** : ஊர்வசி! அரசன் உன் சேவகனாய்த்தான் இருக்கிறான். பெருங்குடி மக்கள் என் தாசர் களாகத்தான் இருக்கின்றனர். தொண்டர்களுக் கும், குண்டர்களுக்கும் குறைவில்லை. அப்படி இருந்தும், அச்சிறுபயல் சுகதேவன் இந்நாட்டின் தளபதியானதை நம்மால் தடுக்க முடியாமற் போனது மிகவும் வருந்தற்குரிய செய்தி கண்ணே!

*(அங்கலாய்ப்பு; ஆத்திரம்; பெருமூச்சு) ஆம்! சிறை மந்திரிப் பதவியில் கூட அச்சிறுவனுக்கே வெற்றி... உம்!*

**ஊர்வ** : *சுகதேவன் - அவன் ஒரு சிறு பாம்பு! இந்த ஊர்வசி நினைத்தால் தனது இடது கால் அணியால் அவனை உருத்தெரியாமல் நசுக்கிவிட முடியும். மடையன்! மன்னனின் மகள் - என் வளர்ப்புப் பெண் - மேனகையை மணந்து, நம்முடைய அணியில் சேர முடியாதென்று கூறி, அன்று என்னையே ஏளனம் செய்தான். ஆறாத பெரும் பழிக்கு ஆளாகி விட்டான். இனி அவன் வாழ்வது கடினம்.*

**சர்வா** : *ஊர்வசி, உன்னைப் பற்றி நீ நினைக்கும் உனது எனது எண்ணம் மிகவும் அதிகமானது! இளைஞர்கள் அவனைத் தெய்வமெனக் கொண்டாடுகிறார்கள். நம் திட்டப்படி நமது எல்லைப் படைகள் எதிர்த்து வந்தால் அவை களை வெல்லும் வல்லமையும் பெற்றுவிட்டான் சுகதேவன்!*

**ஊர்வ** : *அதற்கும் ஏற்றதொரு திட்டம் ம்மிடம் தோன்றாமலா போய்விடும்? முதும. ழும்பற்ற ஒரு மனிதப் புழுவாய், இரவும் பகலும் என் படுக்கை அறையிலேயே சுருண்டு கிடக்கும் - வேந்தன் வீரசிம்மனிடம் கூறி, வேண்டிய ஏற்பாட்டை விரைவில் செய்துவிடுகிறேன். நாம் மட்டும் அரசின் பெயரால், இனமொழி சாதி வேற்றுமை உணர்ச்சியின் பெயரால், இந்நாட்டில் ஐந்தாம் படைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். உமது இன்பப் பேச்சின் திறமையால் இளஞ் சோம்பேறிகளை இயக்கிக்கொண்டே இருங்கள்! வாதங்கள் பேசுங்கள்! வேலை செய்ய முடியாமல் வேறு வழியில் திருப்புங்கள்! முடியாத தத்துவங்களை முரணாகப் பேசுங்கள்!*

*முன்னேற்றத்தை முடக்கி மூலையிற் போடுங்கள்! நாவன்மையால் நாட்டு வன்மையை நசுக்கி வையுங்கள். பேச்சின்பத்தில் பெரும்பற்றுள்ள வர்கள், இந்தச் செயலற்ற சோம்பேறிகள்! பேசுங்கள்! பேச்சின் எல்லைகளுக்கப்பால் அவர் களைச் சிலையாக்கி வையுங்கள்! இவர்கள் வெறும் வார்த்தைப் பித்தர்கள்! சொற் கோமாளிகள்! சோற்றுப் புலவர்கள்! ஈசல் கூட்டத்தை வெல்வதற்கு இடியின் துணை தேவையில்லை - கண்ணா! இந்த மக்களை வெல்வதற்கு ஆயுதப்படை தேவையில்லை. வெறும் பேச்சுப் படையே போதும். என்ன வேண்டும் சொல்லுங்கள்! இதைப் போல் ஆயிரம் அரசுகள் வேண்டுமா? சொல்லுங்கள்! இந்த ஊர்வசியின் கடைக்கண் ஒருமுறை அசைந்தால் போதும்! கால்விரல் ஆணை யிட்டால் போதும்! அரசன் - அரசியல், சட்டம் - சாத்திரம், திட்டம் - தேசம் எல்லாம் அரை நொடியில், காந்த மலையைக் கண்ட இரும்புத் துண்டுகளாகி என் தாமரை அடிகளில் தாமாக வலிய வந்துவிழும்! கலங்காதீர்கள். கள்ளிலே மயக்கம்! காரிகை முயக்கம்! கடமையில் தயக்கம்! கலையிலே உருக்கம் - இவையன்றி வேறொன்றுமே அறியாத கோழைகளைக் கொண்டதொரு ஏழைகளின் நாடு இது! முட்டாள்களின் சொர்க்கம் இந்த மூட வள நாடு! இதை நம் வயப்படுத்துவது, நமக்கு இனிய மது அருந்துவது போன்ற எளிமையான வேலை. இதற்காக நமதின்பம் கொஞ்சங்கூடக் குறையக்கூடாது, துரையே! அரசியல் வேறு; ஆனந்தம் வேறு; பொது வேலை வேறு; மது வேலை வேறு! என் குரல் எப்படி மெருகிடப் பட்டிருக்கிறது பார்த்தீரா? என்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது...?*

**சர்வா** : ஊர்வசி, உன்னைப் பார்த்தால்.... பசி தீருகிறது - பார்வை மாறுகிறது - ஏதோ ஒரு இனிமை எங்கெங்கோ ஏறுகிறது. இன்பம் ஊறுகிறது! இளமை குன்றா எழிற்கன்னி நீ! வனப்பு என்ற பட்டாடை உன் வாலிபத்தின் வெற்றிக் கொடியாக வானளந்து பறக்கிறது, கண்ணே!

*(அச்சமயம் அந்தி இருள் பரவுகிறது. இடி குமுறுகிறது. பின்புறமிருந்து ஏதோ ஒரு பெண் தேவதையின் பேருருக் கருநிழல் தோன்றி ஒளி மின்னல் என மறைகிறது. சர்வாதிகாரி, அமர்ந்ததும் பாரம் தாங்காமல் ஊஞ்சல் அறுந்து கீழே விழுகிறது. ஏதோ ஒரு நிழலைக் கண்டு பயப்படுகிறாள் ஊர்வசி)*

**ஊர்வ** : *(எதையோ கண்டு மருண்டு)* ஆ! பேயின் நிழல்கள்! ஆந்தையின் அலறல்...! ஆ! கோட்டான்களின் கூவல்...!

*(எழுந்து மறுபுறமாக மாளிகைக்குள் போக அவளைத் தடுத்து)*

**சர்வா** : ஊர்வசி, ஒன்றுமில்லை. நில்! எங்கே போகிறாய்? நானிருக்கப் பயமேன்...?

*(ஊர்வசியைத் தொடர்ந்து செல்ல, மறுபுறம் அரண்மனைக் காவலனாக கார்மேகன் முகமூடியோடு வந்து)*

**கார்மேகன்** : ஏன் இப்படி ஓடுறாங்க. அவங்க நிழலைக் கண்டு அவங்களே பயப்படறாங்க! சர்வாதிகாரிக்கு இந்தப் பழக்கமும் உண்டா? உம்! வேலை யில்லாமல் உக்காந்தபடியே அரண்மனைச் சாப்பாட்டை நாசமாக்குவதன் பலனா, இது? உம்! நடக்கட்டும்; காட்டு ஓநாய் பசுத்தோலைப் போர்த்திக்கொண்டு அரண்மனையிலே வேட்டையாடுது! பலே! சரியான வேட்டைதான். காவி கட்டும் சாமியார், காதல் காவியம் தீட்டுறாரு.

இருக்கட்டும். பலநாள் திருடன் பலக்க மாட்டிக் கிட்டான். பார்ப்போம்! இவங்க அந்தரங்க இரகசியங்கள் எல்லாம் அம்பலமாக்க வேண்டிய நேரம் வந்திட்டுது! *(தனக்குள்)* அடே கார்மேகம்! பயப்படாதே. இந்தப் பயல் என்னமோ பெரிய அது இது மதுன்னு பேசுறான். எதுன்னு கேட்டா பதில் எதுவுமே இல்லை. ஜனங்களை அடக்கி ஆளப் பார்க்கிறான். ஆகட்டும்; பேய் வந்து மிரட்டி, பிசாசை ஏமாத்திட முடியாது. இவன் சங்கதி நம்ம கிட்டே பலிக்காது! அம்மா, தாயே! *(மேலே பார்த்து)* எனக்கு வேண்டிய பலத்தை நீ தான் கொடுக்க வேணும்... அடப்பாவி! போட்டி ருக்கிற துறவி வேடத்திற்கும் இவன் நடிப்பிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையே! ஓகோ! நடிப்பு வேறு - நடப்பு வேறே போல் இருக்கு இந்த நாடகத்திலே. உம். நடக்கட்டும்! திரையில்லாத நாடகமுமில்லை - உரையில்லாத காவியமு மில்லை! பார்க்கலாம்!

(காட்சி 3 முடிவு)

# காட்சி - 4

இடம் : பயங்கரச் சிறை

காலம் : பகல்

*(பாதாளக் காவல்! காவலர் நடமாட்டம். பின்னணி ஒலிகள். சில கைதிகள் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருக்கின்றனர். சிலரது கை கால்கள் சங்கிலியால் பிணிக்கப் பட்டிருக்கின்றன. பலர் பரிதாபப் பார்வையோடு விடுதலை வருமா என்று ஏங்கிய வண்ணம் நடமாடுகின்றனர். துயரத்திற்கும் துன்பத்திற்கும் மனிதக் கொடுமைக்கும் உறைவிடமான அந்தப் பூலோக நரகத்தில், புழுதியும் புழுக்கமும், இருளும் ஈரமும் நிறைந்த ஒரு பகுதியிலே, நாற்புறமும் வெளிச்சம் புகாத கற்சுவர்கள் காவல் செய்ய, ஒரு கிழக்கைதி முடிவற்ற துன்பத்துடன் எதையோ முணகிய வண்ணம் உட்கார்ந்திருக்கிறார். அவர் கழுத்தில் தாங்க முடியாத ஒரு சங்கிலி! காலுக்கும் கைக்குமாக இரும்புச் சங்கிலிகள் அணி செய்கின்றன. அடிக்கடியும் அக்கைதியின் வாயிலிருந்து வரும், 'சாந்தி... சாந்தி... வாணி! வாணி!' என்ற கூக்குரலைக் கேட்டவுடனே மற்றக் கைதிகள் கண்ணீர் விடுகிறார்கள். அவரது பரட்டைத் தலையும் கிழிந்த உடையும் அழுக்குப் படர்ந்த மேனியும் அவரை முழுமையான ஒரு பைத்தியக்காரன் என்பதைப் பறை சாற்றுகின்றன! திடீரென்று கைதிகள் அனைவரும் சோகத்தின் ஆழத்திலிருந்து, அச்சத்தின் அடிவயிற்றிலிருந்து, முடிவின் மூலாதாரத்திலிருந்து, கடைசி மூச்சின் கலவரமான அவலத்திலிருந்து, கருகிய கருத்து உருகிடும் இசையிலே கலந்து பாடுகிறார்கள்)*

*கூட்டப் பாட்டு*

கைதிகள்: சோதரா.... சோதனை நரகமே!
தீருமோ வேதனை... மாறுமோ *(சோதரா)*
மகான் நம் கவியோர்
மாசறியாரே
பாழும் துன்பம் ஏகுமோ -
நெஞ்சம் வேகுமோ?
*(என்று புலம்பித் துடிக்கின்றனர்)*

*(காவலர்கள் தங்கள் கைகளிலிருந்து கசைகளைத் தாராளமாக வீசத் தொடங்குகிறார்கள். கைதிகளது வற்றிப்போன உடலிலிருந்து சில துளி இரத்தமும் அக்கசையடியால் வெளி வந்து கொண்டிருந்தது. அச்சமயம் சேனாதிபதியும் சிறை மந்திரியுமான சுகதேவன் படிகளிலிருந்து இறங்கி வருகிறான். இவன் ஒரு புதுயுக இளைஞன்)*

**சுகதேவன்** : காவலர்களே, நிறுத்துங்கள்! எரிகிற நெருப்பிலே ஏன் மேலும் நெய்யை வார்க்கிறீர்கள்? சிறிது சிறிதாக உயிர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் கைதிகள்! அவர்களை ஏன் மேலும் சித்திரவதை செய்கிறீர்கள்?

**சர்வா** : *(நுழைந்த வண்ணம்)* வேந்தன் கட்டளை!

**சுகதே** : வெந்த புண்ணிலே வேலை நுழைப்பதா?

**சர்வா** : குற்றவாளிகளைத் திருத்த....

**சுகதே** : உயிரை அணு அணுவாகச் சிதைப்பதுதான் குற்றவாளிகளைத் திருத்தும் முறையா?

**சர்வா** : கொலை மனம் படைத்த பாவ ஜென்மங்களைத் திருத்த...

**சுகதே** : கொடுமையான முறைகள்தான் மருந்தா?

**சர்வா** : மருந்து ஊட்டுகையில் கசக்கத்தான் செய்யும். நோய் தீர்ந்த பின் இந்நோயாளிகள் புத்துயிர் பெற்றுப் புனிதமடைவார்கள்.

**சுகதே** : மருந்து, நோய் தீர்க்கும். ஆனால், நீங்கள் இவர்களுக்குத் தருவது கொல்லும் நஞ்சினைத் தவிர வேறில்லை.

**சர்வா** : ஒழியட்டுமே. நீதிக்கும் சட்டத்திற்கும் அடங்காத துராத்மாக்கள் தொலைவதால்...

சுகதே : ....நாட்டுக்குத் தீங்கொன்றுமில்லை. ஆனால், நீதிக்கும் நேர்மைக்கும் மாறாக நடந்தவர்கள் இவர்கள்தான், என்று நீர் எப்படி நிச்சயமாக அறுதியிட்டுக் கூற முடியும்?

சர்வா : தாங்கள் கூறுவதைப் பார்த்தால் நம் அரசரும், நியாயவான்களும் ஆராயாது பிழை செய்தார்கள், என்று சுட்டிக் காட்டுவது போல் அல்லவா தோன்றுகிறது!

சுகதே : சொற்களுக்கு நேர்மாறான பொருளைக் கொள்வது ஒரு கடினமான வேலையல்ல. பிடிபட்டவர்களெல்லாம் பிழை செய்தவர்களல்ல என்பதே என் எண்ணம்.

சர்வா : இங்கு நடக்கும் இக்கடும் தண்டனைகளில்லாவிடில், அறியாமை நிறைந்த முரட்டு மக்கள் ஆரணியப் பாம்புகள் போல் பெருகி, சமுதாயத்தையே அழிப்பார்கள். இவர்களை அழித்துப் புனிதமாக்கவே அந்தச் சிவம் நம்மை அறிவாளிகளாகப் படைத்தது.

சுகதே : நன்றாயிருக்கிறது உமது முடிவு! அறியாமைக்கும், முரட்டுத்தனத்திற்குங்கூட மக்களின் மீதே குற்றஞ் சாட்டித் தப்பித்துக் கொள்ள முயல்வீர்கள் போலிருக்கிறதே!

சர்வா : ஆமாம். ஐயம் வேண்டாம், தளபதி! முன்னே பல பிறவிகளிற்செய்த பாவங்களின் தொடர்ச்சி இவர்களை விடாமல் இந்தப் பிறவியிலும் தொடர்ந்து பாதகர்களாக்கி விட்டது. ஆதலால் இவர்களை அழித்து மறு உலகத்துக்கு அனுப்பிப் புதுப் பிறப்பை அளிப்பது நம் பொறுப்புத்தான். அதற்காகவே நம்மிடம் கடவுள் இந்த மாபெரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்.

சுகதே : பெரியவரே, அனாவசியமாகக் கடவுளைக் கடுஞ் சிறைக்குள் கொண்டுவர வேண்டாம். நீர் பேசும்

மொழிகள் காதையும் கருத்தையும் துளைக்கும் நச்சுக்கணைகள் போற் பாய்கின்றன - எச்சரிக்கி றேன்! இரக்கம் காட்டாவிட்டாலும் அரக்கத்தன மாகப் பேசாமலாவது இருங்கள்.

**சர்வா** : சுகதேவ்! உம் போன்ற அனுபவமற்ற வாலிபர்கள் இதைப் போன்ற பெரும்பதவிகளைத் திறமை யுடன் வகிக்க முடியாதென்பதற்கு ஒரு பெரும் உவமை, தாங்கள், பாவம், இரக்கமிக்க மனம், பெண்களைப் போல! அனுபவம் போதாது!

**சுகதே** : அனுபவம் என்ற வார்த்தைக்கு அநியாயம் என்பதுதான் பொருள் என உங்கள் அகராதி யிலிருந்தால், அதை இனிமேல் திருத்திக் கொள்ளுங்கள் சுவாமிகளே!

**சர்வா** : பாவம், கருணை மிக்க அன்பு நெஞ்சம். அன்பும் அறமும் குறுக்கிட்டால் அரசியலில் அதிக லாபம் அடைய முடியாது, அப்பனே!

**சுகதே** : இலாப நட்டம் பார்க்கும் வியாபாரமாக அரசியலை நான் கருதவில்லை.

**சர்வா** : நீவிர் ஒரு வீரரைப்போலும் ஞானியைப் போலும் பேச விரும்புவது நல்லதுதான்.... ஆனால்...

**சுகதே** : அதைச் செயலிற்காட்டக் காலம் வந்து விட்ட தென்றே நம்புகிறேன்.

*(மீண்டும், 'சோதரா சோதனை' என்ற துயரப் பாட்டின் தொடர்ச்சி! அவலக்குரலில் அதி ரொலிகள்! சவுக்கடிகளின் எதிரொலிகள்!)*

**சுகதே** : *(காவலரிடம்)* காவலா! அது என்ன அங்கே கூக்குரல்? என்ன நேர்ந்தது?

**வீரன்1** : அங்கிருக்கும் கைதிகள் மகா பொல்லாதவர்கள்! மகா பிரபுக்கள் விஜயம் செய்வதை அறிவித்தி ருந்தும் கேட்காமல் பாடுகிறார்கள்.

**வீரன்2** : *யாரோ ஒரு பைத்தியக்காரன். அவன் ஒரு ஆயுட்கைதி. அவன் ஒரு கவிஞனாம்.*

**சுகதே** : *என்ன கவியா? கைதியாயிருக்கிறாரா? பைத்திய மாகவா?*

**சர்வா** : *அடே! அவனை இன்னுமா உயிருடன் வைத்தி ருக்கிறீர்கள்? கொண்டு வாருங்கள், சிறை மந்திரியார் பார்க்கட்டும்.*

*(வீரர்கள் செல்ல, சுகதேவ் சர்வாதிகாரியை வெறுப்புடன் பார்த்து)*

**சுகதே** : *ஐயா தாங்கள் தங்கள் பரம்பொருள், சொர்க்க நரகங்களைப் பற்றிய அராய்ச்சிகளை விட்டு, இந்நேரத்தில், வர வேண்டாத, பயங்கரச் சிறை யாகிய இங்கு வந்தது எதற்காக?*

**சர்வா** : *தங்களைப் போன்ற இளம் வாலிபர்களை நிர்வாகப் பொறுப்புக்கு ஏற்றவர்களாகச் செய்யும் கடமையை, நான் 'வேண்டாம், வேண்டாம்' எனப் பலமுறை மறுத்தும், அரசர் வீரசிம்மர் விடாப்பிடியாக என்னிடமே ஒப்படைத்து விட்டார். என்ன செய்வது? நாம் பாசத்தை விட்டாலும் அது நம்மை விடுகிறதா இலேசில்! ஓய்விலாப் பெரும்பணி. மகா காளி... மகா காளி.... சச்சிதானந்தம்!*

*(மீண்டும் அதே சோகப் பாட்டின் அலை ஒலி உள்ளிருந்து கேட்கிறது)*

**"சோதரா சோதனை நரகமே**
**தீருமோ - வேதனை...."**

**சர்வா** : *(வெகுண்டு) ஆகா, என் கையிலிருப்பது வாளா யிருந்தால் இந்தப் பாவஜென்மங்களுக்கு, சிறை மந்திரியார் முன்னிலையிலேயே நல்ல பாடங் கற்பிப்பேன். எங்கே, தங்கள் வாளையாவது கொடுங்கள்...*

*(சுகதேவன் உறையிலிருந்து வாளைச் சர்வாதிகாரி எடுக்கப் போக)*

**சுகதே** : வயதானவரே, தமது அனுபவத்தின் ஆபாசத்தை இவ்வளவு கேவலமாக ஒரு நொடியில் நிரூபித்து விட்டீரே! சரி, எனக்கு அனேக பணிகளிருக் கின்றன. விரைவிற் சென்றுவிடும் வெளியே.

**சர்வா** : இல்லை! இந்தத் துராத்மாக்களைச் சும்மா விடக்கூடாது.

**சுகதே** : நில்லும்! இவர்களைத் துராத்மாக்கள் என்று தூற்றுவதால் தாங்கள் பரமாத்மா ஆகிவிடலாம் என்று பார்க்கிறீர். அப்படித்தானே.

**சர்வா** : வேடத்திற்கேற்ற நடிப்பு வேண்டும்; காலத்திற் கேற்ற கண்ணோட்டம் வேண்டும். உங்களுக்கு உலகம் தெரியாது.

**சுகதே** : எனக்கு உலகம் தெரியாமலிருக்கலாம். ஆனால், உம்மை மிக நன்றாகவே தெரியும். தாம் சென்று வரலாம். காவலா! வெளியே செல்ல வழிகாட்டு இவருக்கு.

**சர்வா** : அவமானம் அரசரது அந்தரங்க ஆலோசகரான சர்வாதிகாரிக்கு அவமானம்!

**சுகதே** : நீர் ஆலோசகராயிருக்கலாம், அதை யாரும் தடுக்கவில்லை. ஆனால், சிறை மந்திரியும் சேனாதி பதியுமான சுகதேவன். ஒரு சாதாரண மனிதரை வெளியே போ என்று ஆணையிடுகிறான். எதிர் மொழி கூறாது கீழ்ப்படிய விருப்பமா? அன்றி அவன் சினத்திற்கு இலக்காகப் பிரியமா?

*(சர்வாதிகாரி வஞ்சனைப் பார்வையுடன் 'சச்சிதானந்தம், மகா காளி' என்ற சொற்களோடு வெளியேற, உள்ளே சென்ற வீரர்கள் கைதி ஆனந்தரை வாய்க்கட்டுடனும், விலங்குடனும் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்)*

**சுகதே** : *வீரர்களே! இக் கட்டுகளை யெல்லாம் அவிழ்த்து விடுங்கள். பாவம், இவர்கள் எத்தனை ஆண்டு களாக இங்கு அடைபட்டுக் கிடக்கிறார்கள்?*

**கைதி1** : *அந்தக் கணக்கெல்லாங்கூட மறந்து போச்சுங்க எசமான்.*

*(கவி அங்கிருந்து கைதிகளின் விலங்கு களை எல்லாம் பார்த்துப் பைத்தியக்காரச் சிரிப்புடன்)*

**நெஞ்சில் உரமுமின்றி**
**நேர்மைத் திறமுமின்றி**
**வஞ்சனை சொல்வாரடி - கிளியே**
**வாய்ப்பூட்டுப் போட்டாரடி.**

**கவி** : *ஆ! சீடனே, உனக்கு எத்தனை பெரிய உரிமைகள்! எவ்வளவு அருமையான நகைகள்! ஆ, இவைகளை அளித்தவர் பெயரைப் பகர்வா யாக! அவர்களை வசை பாடி ஒழிப்போம், நாம்! தமயந்தியான சாவித்திரி, சொர்க்கம் என்னும் நரகிலே, நாட்டியம் என்னும் பாட்டிலே, தூங்கிப் பறந்த சமயத்திலே, அரிச்சந்திரனாகிய துரி யோதனன் ஏன் போய் இம்சித்தான்! கொடிய வனான சீராமன் - குற்றமற்ற இரணியனை எப்படிக் கொல்வான்? அந்தச் சாந்தியுள்ள லட்சு மணன்... ஆ சாந்தி... சாந்தி... சாந்தி!! வெள்ளை மயில் ஆடும்; குயில் பாடும்; பச்சைக்கிளி பேசும்; கருடன், கழுகு முதலியவை சந்தோஷம் தாங்காது 'கை' என்று சப்தமிடும் சாந்தி...! சாந்தி! வாணி....! வாணி! இல்லை! நான் உன் குழந்தையைக் காப்பாற்றுவேன், அம்மா, காப்பாற்றுவேன்! இது சத்தியம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*(பலமுறை கதறி ஓய்ந்து செயலற்று ஒதுங்கி ஒரு தாயின் மடியில் விழும் குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழுகிறார்)*

சுகதே : *(தன் துணையாள் கருணாலயரிடம்)* இவர் ஒரு பெரிய மேதை போலிருக்கிறதே! பேச்சின் போக்கைப் பார்த்தால் சிறந்த கவிஞராகவும் ஆசிரியராகவும் காணப்படுகிறார்.

*(கவி, சுகதேவனைப் பார்த்தவண்ணம் நெருங்கி)*

கவி : சீடர்களே! இதோ, திரு. இராமபிரான் எங்கே என் காவியங்கள்! இந்த ரகுகுல மணியின் பாதங்களில் சமர்ப்பணம் செய்வோம்.

*(அபிநயத்துடன் பாடுகிறார்)*

**வெய்யோன் ஒளி தன்மேனியின்**
**விரிசோதியில் மறைய**
**பொய்யோஎனும் இடையாளொடும்**
**இளையானொடும் போனான்**
**மையோ மரகதமோ மறிகடலோ**
**மழைமுகிலோ!**
**ஐயோஇவன் வடிவென்பதுஓர்**
**அழியா அழகுடையான்!**

சவியுறத் தெளிந்து தண்ணென்று சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்! நான் என்ன கண்டேன்? மாணவர்களே, எங்கே என் மகா காவியம்? அமரத்வமான கவிதைகள் - இலக்கியங்கள், நாடகங்கள். சரி நீங்களாவது படியுங்கள், பாடுங்கள்! பதறுங்கள்! ஓம் சாந்தி! வாணி! வாணி! சாந்தி! ஓ என் சாந்தி... சாந்தி... ஆம்! மணிவண்ணனுக்கு மகுடம் சூட்டும் போது வெள்ளை மயில் ஆடும்; குயில் பாடும்; கருடன், கழுகு முதலியவை மகிழ்ச்சி தாங்காது 'கை' என்று சப்தமிடும். சாந்தி...! சாந்தி...! சாந்தி...! விதி....! விதியடா! விதி! விதிமகனே!

*(தலையில் அடித்துக் கொண்டு மீண்டும் சோர்ந்து அழுகிறார்)*

**சுகதே** : வீரர்களே! இவரைக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். வீணாக இப்படிக் கத்தினால் இவர் உடல் நலம் நலிந்து போகும்.

*(மீண்டும் கவிஞர் ஏதோ பாட, வீரர்கள் கவியின் வாயைக் கட்ட)*

**சுகதே** : ஏனய்யா, இவர் எப்போதுமே இப்படித்தானா?

**கைதி1** : ஆமாங்க, எசமான்! எப்பவுமே இப்படித்தானுங்க! வாயின் கட்டவிழ்த்தால் கோடை மழை மாதிரி கவிதையும் பாட்டும் குமுறுமுங்க.

**சுகதே** : *(கைதிகளிடம்)* ஐயா... நீங்களெல்லாம் வருத்தப் படாதீர்கள். உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல ஏற்பாட்டை வேந்தரிடம் சொல்லி விரைவில் செய்கிறேன்.

**கைதி-2** : எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாங்க, என்ன குற்றத்துக்காக அடைச்சு வைச்சிருக்கி றாங்கன்னு தெரிஞ்சா அதுவே பெரிய ஆறுதலுங்க.

**கைதி-3** : இதோ பாருங்க, உடம்பெல்லாம் இரத்தம் வரும்படியா அடிச்சுடறாங்க, வலி தாங்க முடியலீங்க.

**சுகதே** : *(வீரர்களிடம்)* அடே இங்குள்ள வீரமடையர் களே! உங்களுக்கு இரக்கம் என்பது சிறிதும் இல்லையா? இப்படியா அடிப்பது? இனிமேல் இந்தக் கைதிகளைக் கருணையோடு நடத்த வேண்டும், தெரியுமா? *(துணையதிகாரியிடம்)* பாவம், இந்தப் பைத்தியக்காரக் கைதியின் நிலையைப் பார்த்தால், ஏதோ ஒரு நிறைவேற முடியாத ஏக்கக் கனவால் அதிர்ச்சியுற்றவர் போலக் காணப்படுகிறார்; நிராசையினால் மனித மனம் நிலை குலைந்து விட்டால் அதன் முடிவு இதுதான் போலும்! பாவம், இக்கவியின் மனத்

தெழுந்த அந்த சோகக் கனவு என்னவென்று அறிய முயற்சி செய்ய வேண்டும்.

*(ஒரு சேவகன் வந்து வணங்கி)*

**சேவகன் :** வாழ்க, நம் வெற்றி! வேந்தர் தங்கள் வரவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

*(சுகதேவன் புறப்பட, வீரன் வணங்கி)*

**வீரன் :** மகா பிரபு, இக்கைதிகள் சில சமயங்களில் மிகவும் தொல்லை தருகிறார்கள்.

**சுகதே :** ஏன், நீங்கள் தூங்க முடியாதபடி பாடிக் கொண்டிருக்கிறார்களா?

**வீரன் :** ஆமாங்க, எசமான்.

**சுகதே :** முட்டாள். உன்னைத் தூங்குவதற்காகவா இங்குக் காவல் வைத்தது? கடமையை ஒழுங்குறச் செய்யுங்கள். அப்பைத்தியக்காரக் கவிக் கைதிக்கு ஒரு சிறு ஆபத்தும் நேராமல் பாதுகாத்து வையுங்கள்! அவர் உயிருக்கு ஏதாவது நேர்ந்தால் உங்களுக்குக் கொடிய தண்டனை கிடைக்கும், எச்சரிக்கை.

*(வீரருடன் வெளியே செல்லுகிறான். மறுபுறம் சர்வாதிகாரியும், கண்டாகர்ணனும் வந்து கைதிகளைக் கசையால் அடிக்கின்றனர்; மீண்டும் அதே சோக ஒலிபரப்பும் துயர இசையும் கேட்போரின் மனத்தைச் சித்திரவதை செய்கின்றது)*

**(காட்சி 4 முடிவு)**

# காட்சி - 5

**இடம் : காடு**

**காலம் : காலை**

*(பார்க்கும் போதே மழை வெள்ளத்தாலும், புயலாலும் அழிக்கப்பட்ட பிரதேசமென்று வெகு எளிதிற் சொல்லி விடலாம். அங்கு ஒரு பாழமடைந்த மண்டபம். குட்டிச் சுவர்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. உள்ளே ஒரு ஏழைக் கிழவி காய்ச்சலால் நடுங்கும் சத்தம் கேட்கிறது. குட்டிச் சுவரின் பக்கத்திலே கூரையில்லாக் குடிசையருகே ஒரு ஏழைக் கிழவன் ஓலைச் சுவடிகளைக் கொண்டு வெகு சிரமப்பட்டு அடுப்பைப் பற்ற வைக்க முயன்று கொண்டிருக்கிறான். அவ்வழியே சுமார் இருபத்திரண்டு வயதுள்ள மணிவண்ணன் நாட்டுப்பற்று ததும்பப் பாடிக் கொண்டு வருகிறான். அவன் தங்கை சாந்தியும் பின்பற்றிச் சோர்ந்து நடந்து வருகிறான்)*

---

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதில் இறுத்தி என்
வாயுற வாழ்த்தேனோ!

**மணி** : இப்படி உட்காரம்மா. அதோ, அப்பெரியவரிடம் அருகில் ஏதேனும் ஊர் இருக்குமா என்று விசாரித்து வருகிறேன்.

*(சாந்தி ஒரு கல்மீது உட்காருகிறாள். கஞ்சி காய்ச்சும் முயற்சியில் கடுமையாக ஈடுபட்டிருந்த கிழவரிடம் நெருங்கி)*

**மணி** : ஐயா... ஐயா!

**கிழவர் :** போங்கடா போங்க. பொழுது விடியறதுக்கு முந்தியே வந்துட்டீங்களா! அங்காலே காலை யிலே கிலையிலே வீட்டைக் கீட்டைப் பார்த்துக் கீத்துக் கேட்டாலும் கீட்டாலும் ஏதோ கொஞ்சம் கஞ்சி கிஞ்சி தண்ணி கிண்ணி கிடைக்கும். இங்கே வந்து ஐயா, பையான்னு உயிரை எடுக்கிறானுவ. போங்கடா போங்க போக்கத்தப் பசங்களா!

*(மீண்டும் ஒரு சுவடியை எடுத்து அடுப்பில் வைக்கிறார்)*

**மணி :** அய்யா, ஏன் இந்தச் சுவடிகளையெல்லாம் வீணாக எரிக்கிறீர்கள்? ஏதாவது நல்ல நூல் இருந்தால் பாழாய்ப் போய்விடாதா?

**கிழவர் :** போடா போ. புதுப் புத்திசாலி. அம்மிக்கல்லே அந்தரத்திலே பறக்குதாம். இவன் எச்சிலைக்குப் பாரம் வைக்க வந்துட்டான். ரெண்டுகூடை ஓலை யோட ஒரு நூல் எரிஞ்சா என்ன நஷ்டமோ, தெரியல்லே.

**மணி :** அய்யா! உங்களுக்குப் படிப்பின் அருமை தெரியாததால் இந்த ஏட்டுச் சுவடிகளை யெல்லாம் வீணாக எரிக்கிறீர்கள்.

**கிழவர் :** டே, டே, போடா போ. போக்கத்தவனே! மகா படிச்சவன் வந்துட்டான். இந்தக் காலத்தில் பசிக்குக் கஞ்சி கெடைக்கிறதே குதிரைக் கொம்பா இருக்குதாம். இந்த இலட்சணத்திலே படிப்பில்லே பிடிப்பில்லேன்னு வேதாந்தம் பேசி என் வயித்தெரிச்சலைக் கிளப்ப வந்துட்டான். போ, போ. என்னடா பெரிய படிப்பு? உன் படிப்பு எங்க பட்டினிக்கு ஒரு பிடி சோறு போடுமாடா?

**மணி :** ஐயா,. செவிக்கும் மனதுக்கும் உணவு தரும் இந்த நூல்களையெல்லாம், கேவலம், வயிற்றுக் கஞ்சிக்காக நாசப்படுத்துவது நியாயமல்லய்யா..!

**கிழவர் :** *டே பயலே, உனக்கு இப்போ என்ன? காலை யிலே என்ன ஒரே வேதாந்தமாகப் பேசித் தள்றே. பித்தம் சித்தம் தலைக்கு கிலைக்கு ஏறி கீறிப் போச்சா, என்ன? என் ஒரே பெண்டாட்டி, அதோ குளிர் காய்ச்சல்லே நடுங்கறா. இந்தக் கஞ்சி காச்சாவிட்டால் அவள் உயிரே போயிடும் போல இருக்குது. நீ வேறே, வேதாந்தம் பேசறே. இராத்திரி பூரா மழை, புயல், குளுர்! நடுங்குது. எல்லாம் ஈரம். எலும்பெல்லாம் நடுங்குது. நனையாத இந்த ஓலைதான் நல்லாப் பத்துது. நவுறு. நான் குளிர் காயணும். கஞ்சி காச்சணும்.*

**மணி :** *எங்கே பார்க்கலாம்.*

*(சுவடிக் கூடையில் கை வைக்க)*

**கிழவர் :** *(வெகுண்டு) டே பயலே, தெரிஞ்சுதடா உன் சங்கதி... திருட்டுப் பயலே, அங்கேயிருந்தே மெதுவா கிட்டே வந்தே. இப்போ கூடையிலே யும் கையை வைக்கிறே. ஓகோ, பேசிக்கிட்டே இருந்த கஞ்சிக் கலயத்தைத் தூக்கிக்கிட்டு ஓட்டம் பிடிக்கலாமுன்னு பார்க்கிறியா! டேய், நீ திருடனா இருக்கலாம். ஆனா, இந்த வயசான கருடன் கிட்டே ஒண்ணும் நடக்காது, தம்பி! நடக்காது! நீ பஞ்சத்துக்குத் திருடன். நான் பரம்பரையாத் திருடன். தெரியுமா?*

**மணி :** *(யோசித்து) பெரியவரே, ஏதாவது பணமிருந்து கொடுத்தால் இவைகளைத் தருவீர்களா?*

**கிழவர் :** *என்ன, பணமா, உன்னைப் பார்த்தால், நாடோடி பிச்சைக்காரப் பரதேசிப் பயமாதிரி தெரியுது. உங்கிட்டே பணமேது?*

**மணி :** *நாங்கள் பிச்சையெடுத்துப் பிழைத்தாலும் கொஞ்சம் மீத்து வைக்கும் பழக்கமுண்டு அய்யா.*

*(சற்று தூரத்தில் களைப்பாற அமர்ந்திருந்த தங்கை சாந்தியிடம்)*

**மணி** : உன்னிடம் ஏதாவது பணம் இருக்கிறதா அம்மா.

**சாந்தி** : அண்ணா, இரண்டே இரண்டு பணம். இன்றைய உணவுக்கு இதுதான் வழி.

*(எடுத்துத் தருகிறாள்)*

**மணி** : *(வாங்கிப் பெரியவரிடம் தந்து)* இந்தாருங்கள் பணம்.

**கிழவர்** : *(சற்று மனமிரங்கி)* சரி, சரி. நானும் கஞ்சி காச்சியாச்சு. வெய்யிலும் வந்தாச்சு. மீதியிருக்கிற இந்த நாலஞ்சு சுவடியையும் எடுத்துக்கிட்டுப் போ. உன் பணமும் வேணாம், கிணமும் வேணாம்.

**மணி** : *(அவைகளைப் பிரித்தவண்ணமே)* சாந்தி! நம்நாடு என்ன அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறது பார்த் தாயா? சகல கலைகளும் நிறைந்த நாடென்று சரித்திரத்திலே காணுகின்றோமே தவிர, எங்கும் ஏக்கமும் துயரமும் அறியாமையுமே நிறைந்து காணப்படுகின்றன.

**சாந்தி** : நாட்டின் சரித்திரங்களெல்லாம், எழுத்தாளர் களின் கற்பனைகள்தான், அண்ணா.

**மணி** : உண்மை சிறிதேனுமின்றி அரிய வரலாறுகள் எழுந்திருக்காதம்மா.

**சாந்தி** : பின், அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட தற்போது காணாதது ஏன் அண்ணா?

**மணி** : கடவுள் செயலால் காலம் வரும்போது மீண்டும் இந்நாடு உன்னத நிலையெய்துமம்மா.

**சாந்தி** : கடவுள், காலம், விதி, வினை இவையெல்லாம் கவிஞர்கள் பூசிய கற்பனை வர்ணங்கள் அண்ணா.

**மணி** : சோர்விலே பேசுகிறாய், சாந்தி.

*(சுவடிகளைப் படித்து)*

ஆகா! என்ன அருமையான வாக்கியங்கள்... 'கனவு' எழுதியது 'கவி அமரன்' அகண்டவுலகம், "விதியை செல்வோம் நாம் வீண்துயரம் ஏனோ"

*(சுவடியைச் சுவையுடன் மேலும் படித்துத் தனக்குள்)*

ஆம்; விதியை வெல்லத்தான் வேண்டும்! விதியை வென்றுவிட்டால் பின் வீண் துயரமில்லை! சாந்தி! வரி வடிவாயிருக்கும் இந்த மொழிகள் மனத்துக்கு எவ்வளவு உறுதியையும், ஊக்கத்தையும், ஆறுதலையும் ஆர்வத்தையும் தருகின்றன, பார்த்தாயா?

*(அமர்ந்து நூல்களைக் கவனிக்க)*

**கிழவர் :** *(வந்து)* ஏனய்யா, நீங்க யாரு? பார்த்தா அண்ணனும் தங்கையும் மாதிரி இருக்குது. ரொம்பக் களைச்சுப் போயிருக்கீங்களே பாவம்!

**சாந்தி :** ஐயா, நாங்கள் நாதியற்ற பறவைகள். புறப்பட்ட இடமும் தெரியாது. இனிமேல் போய்ச் சேர வேண்டிய இடத்தையும் அறியமாட்டோம். அண்ணா, பசியண்ணா.

**கிழவர் :** ஐயோ, பாவம். கொஞ்சம் பொறுங்க. ஏதோ மீதி பழைய கஞ்சி கிஞ்சி கொண்டு வரேன்.

**சாந்தி :** அண்ணா, இக்கிழவருக்குத் திடீரென நம்மீது கருணை பிறக்கக் காரணம்?

**மணி :** அதுதான் அம்மா கடவுளின் செயல்.

*(நூல்களைப் பார்க்க, சற்று தூரத்தில் இருந்து குருட்டு வேடமிட்ட ஒரு ஏழைச் சிறுமி பரிதாபமாய்ப் பாடிப் பிச்சைக் கேட்டு வரல்)*

**திருடர்கள் வார்கின்ற இவ்வுலகில்**
**குருடர்கள் வாழ்வது ஆகாதா?**
**போலிகள் வாழ்ந்திடும் திருநாட்டில்**
**கூலிகள் வாழ்ந்திடலாகாதா?**
**காலிகள் ஆடிடும் திருநாட்டில்**
**கன்றுகள் ஆடுதல் கூடாதா?** *(திருடர்)*

**மணி** : *அந்தோ, பாவம்!*

**சாந்தி** : *அண்ணா, என்ன இனிமையான குரல்!*

**மணி** : *ஆனால், கண்கள் குருடாய் அமைந்து விட்டனவே.*

**சாந்தி** : *அதுதான் உங்கள் கடவுளின் கருணை.*

**மணி** : *சாந்தி, கடவுளின் கருணையிருப்பதால்தான், குருடாயிருந்தும், இக்குழந்தை தானாக நடக்கும் சக்தியையாவது பெற்றிருக்கிறது. குழந்தாய் இந்தாம்மா காசு...*

**கிழவர்** : *(குறுக்கிட்டு) அய்யா, அந்தப் பெண்ணுக்குக் காசு தராதிங்க. இந்தக் குட்டி மகாவேஷக்காரி. குருடுன்னு ஏமாத்திப் பொய் சொல்லுதுங்க. கண்ணிலே சிவப்புச் சாயம். ஏ... குட்டி, கண்ணைத் தெறக்கிரியா, அடி வேணுமா?*

*(என்று ஏழைச் சிறுமியின் கண்ணில் ஒட்டிக் கிடந்த செம்பஞ்சை எடுக்கிறார்)*

**ஏழைச் சிறுமி** : *(பயந்து) ஐயோ, தாத்தா என்ன தாத்தா செய்யறது? இப்படியெல்லாம் வேஷம் போட்டுக் கிட்டாலும் காசு தர்ரவங்க இல்லையே, தாத்தா. பசிக்கு என்ன தாத்தா செய்யறது?*

**மணி** : *(மனம் புழுங்கி) ஐயோ! பாவம் பெரியவரே, பசிக் கொடுமையின் கோரம், இச்சிறு குழந்தையின் மனத்தையும் என்ன மாசுபடுத்தியிருக்கிறது பார்த்தீர்களா!*

**கிழவர் :** *என்னய்யா பண்றது? பசி வந்தால் பத்தும் பறந்து போவுது. நானும் பசிக் கொடுமை பொறுக்காமல் தான் உங்களை அப்படிக் கோவிச்சேன் உம், சரி. கஞ்சி சாப்பிடுங்க, பிறகு பேசுவோம். ஏய் குட்டி, நீயும் சாப்பிடு.*

*(மணிவண்ணன் மட்டும் சாப்பிடாமல் சுவடி களையே பார்த்தல்)*

**மணி :** *சாந்தி, எனக்கொரு யோசனை தோன்றுகிறது.*

**சாந்தி :** *என்ன அண்ணா அது?*

**மணி :** *இதைப் போன்று திறமையிருந்தும் திக்கற்றுத் தெருவிலே திரியும் குழந்தைகளை யெல்லாம் நம்முடன் ஒன்று கூட்டி, இச்சுவடியிலுள்ள நாடகங்களை நடித்துக் காட்டினால், ஏதோ சிறிதேனும் நாட்டுக்குத் தொண்டு செய்தவர்களா வோம். இல்லையா?*

**சாந்தி :** *ஆம் அண்ணா! யோசனை. நமக்கும் பொழுது போவது தெரியாது. ஆமாம், பணம் வேணுமே, அண்ணா?*

**கிழவர் :** *(கவனித்து) என்ன சொல்றீங்க? நாடகம் நடத்தலாமுன்னா சவாசு. நல்லதுதான். சாமி, கூத்துன்னா எப்பவுமே எங்களுக்குப் பிரியம், அப்படின்னா, எங்க கிராமத்திலேயே முதல் நாடகம் வையுங்க நான்கூட சின்ன வயசிலே சந்திரமதி வேடமெல்லாம் போட்டிருக்கேன்.*

**மணி :** *ஆம், ஐயா. நாடகத்தால் நாம் சில உண்மைகளை யெல்லாம் உணரலாம். பாழாய்ப் பழங்கதை யாய்ப் பகற்கனவாய்ப் போன, நமது மூதாதை களின் வரலாறுகளையெல்லாம் உணரலாம். நீங்களெல்லாம் இப்படி தலைகுனிந்து வாழ் வதைக் காண என் மனம் ஆறாத்துயரடைகின்றது. ஏறக்குறைய நாம் மனிதர்கள் என்பதையே மறந்து விட்டோம்.*

**கிழவர் :** ஆமாங்க. நான்கூட அதை மறந்ததனால் தான் உங்களை அப்படிக் கோவிச்சுக்கிட்டேன்.

**மணி :** பாதகமில்லை, அய்யா. பசி, பிணி, அறியாமை முதலியவை பெருகும் நாட்டில் பொய், கொலை, சூது, வஞ்சகம் இவை வளர்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

**சாந்தி :** என்னண்ணா! தாங்கள் இந்நாட்டின் அரசரா யிருந்தால் அறியாமை, பசி, பிணி - இவை யெல்லாம் இருக்காதோ?

**மணி :** நான் அரசனாயிருந்தாலா... சாந்தி! உலகில் இல்லை என்ற வார்த்தைக்கே இடமில்லாமல் செய்து விடுவேன்.

**கிழவர் :** உம்! என்னய்யா பண்றது? இந்த மாதிரி நல்ல எண்ணத்தோட பேசுறவங்க எல்லாம் நம்மைப் போல அன்னக்காவடிகளாகத்தான் இருக்காங்க. அப்படியே ஒருசில அன்னக் காவடிகள் முன்னுக்கு வந்துட்டாலும், முன்னே சொன்னதை மறந்து போயிடுறாங்க. அதிட்டம் வந்தால் அன்னக்காவடிகூட பெரிய சொர்ணக் காவடி ஆயிடுது.

**மணி :** ஐயா, தாங்களும் எங்களுடன் வருகிறீர்களா?

**கிழவர் :** ஓ, வர்றேன். நானும் நடிப்பேன். அடாடா, நானு அந்தக் காலத்திலே சந்திரமதி, கண்ணகி, வேஷம் கட்டிகினு ஆடினா, சனங்க கண்ணீர் சிந்தி அழுவாங்க. என் மனைவியைப் பார்த்துட்டுப் பிறகு போகலாம். *(பிச்சைக்காரியிடம்)* குட்டி, வா குட்டி, உன்பாடு யோகந்தான் நாடகமாடப் போவலாம்.

**பெண் :** நடிக்கக் கூடாது, நாடகம் பார்க்கக் கூடாதுன்னு நீங்களே முன்னே சொல்லு வீங்களே தாத்தா!

**கிழவர் :** ஆமாம் அப்போ ஏதோ வெறுப்பிலே சொன்னேன். பணமில்லாமே நீயும் நானும் நாடகம் ஆடினா அது தெருக்கூத்து. தவறு - கேவலம். ஆனா, பெரியவங்க ஆடினா, அது கலை. அதெல்லாம் அந்தக் காலம். இப்போ காலம் மாறிப்போச்சு. எவ்வளவு பெரிய ஆளுங்கல்லாம் நாடகம் ஆடி நாட்டை ஆட்டிப் படைக்கிறாங்க, அனாதையா கிடந்த நாடகம், அரங்கத்துலே ஏறிடிச்சு. குறைச்சலா பேசப்பட்ட நாடகம், கோட்டை வரைக்கும் போயிட்டுதே. வாங்க. வாங்க.

**(காட்சி 5 முடிவு)**

## காட்சி - 6

**இடம் : மாளிகை**

**காலம் : மாலை**

*(அன்பு நாட்டின் தலைநகர் வீரசிம்ம வேந்தனது உல்லாச அரண்மனை. கலையின் பெயரால் காமத் தோட்டத்தைச் செழிப்பாக வளர்க்கும் கலைவாணி ஊர்வசி. தனது பருவக் களிப்பினாலும், உருவ நெளிப்பினாலும், காண்பவர் கண்களைக் கவர்ந்து ஆடுகிறாள். தன்னை மறந்த போதை வெறியுடன் நாட்டியக் கலையின் முழுத் திறமையையும், சபையிலே அள்ளி வீசுகிறாள். முழுமதியின் நிலவொளி வீசும் நீர்த்தடங்களெல்லாம் நிலாக்கதிரின் காந்தியைப் பெற்று ஒளிர்வது போல ஊர்வசியின் முகத்தொளியால், முன்னமர்ந்திருந்த சபையினர் ஒவ்வொருவர் முகமும் புத்தம் புதியதொரு வனப்புடன் விளங்குகிறது. வைரத்தில் இல்லாத பிரகாசம் கண்ணாடித்துண்டித் தெரிவது போல, அங்கிருந்த மனிதக் கண்ணாடித் துண்டுகள் தங்களை வைரங்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தன. வீரசிம்மன், இளவரசி மேனகை, சேனாதிபதி சுகதேவன், அவன் தங்கை கனிமொழி மற்றும் துணையதிகாரி, வேலைக்காரன் கார்மேகன்; பெருங்குடி மக்கள் அனைவரும் அமர்ந்திருக்கின்றனர்)*

---

**ஊர்வசியின் பாடலும் ஆடலும்**

மின்னல் விழி பாயவே மண்மேல்
மாந்தரெல்லாம் எந்தன் பொன்னடி வீழ்வார் *(மின்)*

பெண்ணில் அழகியெனைப் போல எவர் இங்கே?
விண்ணகத் தோரும் வேட்கை கொள்வா ரென்மேல் *(மின்)*

கள்ளை வெல்லும் அமுத கோவையிதழ் திறந்து
கன்னல் சொல்லைப்புகலக் கூவும் குயில் அழியும் *(மின்)*

வெள்ளச் சுழல்விழியில் வீழ்ந்தவர் வாழ்வதில்லை
தெள்ளியதேன்சுவையில் திளைத்தவர் மீள்வதில்லை *(மின்)*

*(ஒலியொடு ஒளிபெருக்க, ஜதியொடு மிதி நடக்க, இசையொடு இதயம் நிற்க, கண்வழி செய்கை பாய, சுரத்திலே துரிதம் துள்ள, மார்பிலே ஆசை விம்ம மயங்கியே ஆடலுற்றாள். உதட்டிலே ஊறிப் பாயும் உன்னதக் காமப் பழமது! அத்தனையும் அனுபவித்தோர், அரசனும் சர்வாதி காரியுந்தான். கலைமானைக் கண்டு உவகை துள்ளும் காட்டுப்புலியைப் போல் சர்வாதிகாரி, அவள் மேனியின் மின்னலிலே கண் சிவக்க வீற்றிருந்தான். வீர சிம்மனோ என்றால், மூச்சுக் கூட விடமுடியாத நிலையில் தனது பாச மனைவி யின் நாட்டியப் பாத தூசியிலே சரணாகதி யடைந்து சவமெனச் சாய்ந்திருந்தான். நாட்டியம் முடிந்ததும் அரசன் மெதுவாக எழுந்து பேசுகிறான்.)*

**வீரசி** : *(ஊர்வசிக்கு மாலையிட்டு)* அவையோர்களே! அழகுமணித் தெய்வம் ஆடல் கண்டு மகிழ்ந்தோம். இக்கலை விழாவைப் பற்றி நம் குருதேவர் சில மொழிந்தருளுவார்.

**சர்வா** : *(எழுந்து சிரமப்பட்டு)* பெருங்குடி மக்களே! ரசிக சிகா மணிகளே! கலையின்பம் என்னவென்று, வாழ்வைப் பூரணமாக ருசிக்கும் உங்களுக்கே நன்கு தெரியும். கலைஞானம் மிகமிகப் புனித மானது, அதிலும், பரத சாத்திரம் மிகக் கடின மானது. அக்கலை நமது மகாராணி ஊர்வசி தேவியிடம் பூரணம் பெற்று விட்டது. இங்கே ஜதியோடு லயம் எழுந்தது! சுருதியோடு சுகம் பிறந்தது! இசையோடு இதயம் சென்றது! அசைவோடு அழகுயர்ந்தது! விழியோடு விதி விளைந்தது! முழவோடு மூச்சுயிர்த்தது! குழலோடு குரல் குழைந்தது! உலகக் கலைஞர் எல்லாம் ஒருங்கே போற்றி சகலகலா வல்லரசி, நாட்டிய வல்லி, மெல்லரசி, சரஸாம்ருத ஞான சரஸ்வதி

என்ற பட்டங்களை நம் மகாராணிக்கு அளித்துள்ளார்கள். நமது புண்ணியப் பெருந் தவத்தின் பயன்களெல்லாம் ஒருங்கே திரண்டு, ஒருருவாய்த் திகழும் நமது மகாராணியார், அரோக திடகாத்திர சௌந்தர்ய வதனியராய், சுக சாரீர சுகுண சம்பன்னையாய், சர்வ சௌபாக்கி யவதியாய், சகலகலா வாணியாய், சரசியாய், அரசியாய் விளங்கி, நம்மையாள நாமெல்லாரும் துணை புரிவோமாக. மகாகாளி மகாகாளி! சதாசிவம்! சச்சிதானந்தம்!

*(அரசிக்கு மாலை தந்து அமர)*

**வீரசி** : அடுத்தபடியாக, நமது சேனாதிபதியும் சிறை மந்திரியுமான சுகதேவர் பேசுவார்.

**சுகதே** : *(கம்பீரமாக எழுந்து)* பெரியோர்களே! கலை, உலக ஒற்றுமைக்கு வழி காட்டுகிறது. ஆனால் அது இதுவரை அரண்மனைகளிலும் மாளிகைகளிலுமே அடைபட்டுக் கிடக்கிறது. பொது மக்களிடம் பரவ வழியின்றி நாம் கலையைத் தடுத்து வைத்திருக்கிறோம். மக்களுக்கோ ஒண்டக் குடிசையில்லை, ஒதுங்க நிழலில்லை. குடிக்கக் கூழில்லை. முதலில் ஏழை மக்களது சீர்குலைந்த வாழ்வை மேம்படுத்த நாம் முன்வரவேண்டும். அதுவே ஒரு பெருங்கலை. கலைகள் எல்லாம் எல்லோர்க்கும் பரவிப் பயன்பட வேண்டுமானால், மக்களை மேல் நிலைக்கு உயர்த்த நாம் பாடுபட வேண்டும். நாம் பெற்ற இன்பம் இவ்வையமும் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணம் நமக்கு வேண்டும். மேலும், ஏழை மக்கள் எவ்வாறு கலையின்பத்தை நுகர முடியும் என்று நம்மில் சிலர் ஐயுறலாம். அதற்கு எடுத்துக்காட்டாக, நேற்று நம் நகரிலே, ஒரு ஏழை நாடக மன்றத்தார் நடத்திய நாடகத்தைப் பார்த்தேன். அச்சிறுவர்களது உழைப்பிலே கலை யின் உயர்வு

செழித்து விளங்குகிறது. அந்த அரிய கலையைக் கண்டு மகிழ்ந்த பின்னர் இந்த அரண்மனை நாட்டியத்தை எல்லாம் ஒரு பெரிய சாதனையாக எண்ணி நாம் இறுமாந்துவிட முடியாது. கலையை வளர்ப்பவர்கள் முதலில் அடக்கமும் நன்னடத்தையும் உள்ளவர்களா யிருத்தல் வேண்டும். ஒழுக்கமும் விழுப்பமும் கலைஞர்களின் உயிர் நாடிகள். ஆதலின், இக்கலை விழாவின் பயனாக நாம் அதை அகண்ட செல்வமாக்க முயல் வோமாக. உண்மைக்கு உழைக்கும் நல்லோர்கள் வாழ்வார்களாக. வணக்கம்.

*(ஊர்வசியின் சீற்றம். ராஜகுருவின் தடுமாற்றம்! அவை, பாராட்டிக் கை தட்டுகிறது. அரசன் வீரசிம்மன் சமாளித்து எழுந்து)*

**வீரசி** : சபையோர்களே! இந்நாள், வாழ்வில் ஒரு புனித நாளாகும். எனதழைப்புக்கிணங்கி வந்து சிறப்பித்த உங்களுக்கு வணக்கம், சென்று வரலாம்.

*(அனைவரும் வணங்கி மெதுவாக வெளியேறல்)*

**சர்வா** : வீரசிம்மா! சற்று என்னுடன் வா!

*(சர்வாதிகாரியின் பின் வீரசிம்மன் வெளியேறல். சுகதேவனும் மெதுவாக வெளியேறல். அவனைப் பின்பற்றி செல்ல எழுந்த கனிமொழியை இளவரசி மேனகா தடுத்து)*

**மேனகை** : கனிமொழி, பொறு. போகலாம்.

**கனிமொழி** : மேனகை, நான் போகவேண்டும். அதோ, என் அண்ணாகூடப் போய்விட்டார்.

**மேன** : பரவாயில்லை, இரு. நான் கொண்டுபோய் விடுகிறேன். என்றைக்கோ ஒருநாள் மின்னலைப் போல் வந்தவுடனே போய் விடுகிறாய். வா, என் அறைக்குப் போய், சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம்.

**கனி** : அண்ணா கோபித்தால்...

**மேன** : நான் சமாதானம் சொல்லுகிறேன்.

*(அழைத்து ஒருபுறம் போகிறாள் - மற்றொரு திரை விழுகிறது)*

*(ஊர்வசி தனித்து, தனக்கே உரிய கலைக் கர்வத் துடனும் சீற்றத்தோடும் பசியுற்று பாம்பு போல் அலைகிறாள் - உலவுகிறாள். தன் நடனத்தைக் குறை சொன்ன சுகதேவனை எண்ணிக் கொதிக் கிறாள். அடுத்த ஓர் இடத்திற்கு வந்து நிற்கிறாள். தங்கை கனிமொழி வராததைக் கண்டு அவளை அழைத்தேகத் திரும்பியும் அங்கு வருகிறான் சுகதேவன். அவனைக் கொன்று மென்று விடுவது போல் பார்த்து உறுமுகிறாள் ஊர்வசி.)*

**சுகதே** : மகாராணி, எங்கே என் தங்கை கனிமொழி?

**ஊர்வசி** : உமது தங்கை கனிமொழியா! அவள் இளவரசி மேனகையுடன் பேசிக் கொண்டிருக்கிறாள்!

**சுகதே** : சரி, நான் போகிறேன். விரைவில் சேவகருடன் அரண்மனைக்கு வரச்சொல்லுங்கள்.

*(செல்ல முயல, ஊர்வசி தடுத்து)*

**ஊர்வ** : உம் நில்லுங்கள்! தளபதியவர்களே, தாங்கள் நாட்டிய சாத்திரத்தைப் பூரணமாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட்டீர்கள் போலிருக்கிறதே.

**சுகதே** : அம்மையே, மனிதன் கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு! எதிலும் எவரும் பூரணத் தேர்ச்சி பெற்றவர்கள் யார் இருக்கிறார்கள் இங்கு?

**ஊர்வ** : பின் எதனால் என் கலையில் குற்றங்காட்ட முன் வந்தீர்?

**சுகதே** : உங்கள் கலையில் நான் ஒரு போதும் குற்றம் சாட்டவில்லையே!

**ஊர்வ** : ஓகோ! குற்றம் சாட்டவில்லை, குறைதான் கூறினீர்களோ, உம். அடக்கமும் நடத்தையு மில்லாதவர்களெல்லாம் கலையைக் கொலை செய்கிறார்களென்று சற்று முன்னதாகச் சபை யில் நீர் பேசவில்லை?

**சுகதே** : மகாராணியாகிய தாங்கள் அடக்கமும் நடத்தை யும் கொள்ளவேண்டுமென்று நான் கூற வில்லையே, அம்மா!

**ஊர்வ** : பின் யாருக்காகச் சொன்னீர்கள்?

**சுகதே** : நடத்தையிலே நம்பிக்கையுள்ள கலைஞர்களுக்கு.

**ஊர்வ** : அப்பொழுது நான் கலைவாணியில்லையா?

**சுகதே** : இல்லையென்று நான் ஒருபோதும் சொல்ல வில்லையே, அம்மா. வருந்தி முயன்றாலும் வான்கோழி வண்ண மயில் ஆவது கடினம், மகாராணி.

**ஊர்வ** : உம்; என்னைவிடக் கயில் தேர்ச்சி பெற்ற வர்களை உமதனுபவத்தில் வேறு யாரையேனும் கண்டதுண்டா?

**சுகதே** : விபரீதமான - வேண்டாத இக்கேள்விக்கு விடை கூற என்னால் முடியவில்லை.

**ஊர்வ** : கேட்ட கேள்விக்கு விடை கூற முடியாத வீரர் நீர், கலைகளைப் பற்றி மிகத் தெரிந்தவர் போல் பேசி, என் கண்ணியத்தைக் குறைக்க முயன்றீரோ?

**சுகதே** : மகாராணி, ஒரு பெண்ணிடம் கோபத்தைக் காட்டுவது கேவலம் என்பதால், உம்மிடம் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறேன். உம்மைப் பற்றி உமக்குத் தெரிய வேண்டுமானால், நம் நகரில் நடக்கும் ஒரு நாடகத்துக்குச் சென்று பாரும். அவர்கள் பாடும் ஒரு பாடலைக்

கேட்டால்கூடப் போதும். அங்கு உமது கேள்விக் கேற்ற விடையைப் பெறலாம். (இதற்குள் கனிமொழி இளவரசியுடன் வர)

கனிமொழி! எங்கேயம்மா சென்று விட்டாய்? உன்னால் அல்லவா இவ்வளவு நேரம் வீணாகப் போய்விட்டது.

**கனி** : இளவரசியுடன் பேசிக் கொண்டிருந்தேன், அண்ணா! மகாராணி, வருகிறேன். (சுகதேவும் கனிமொழியும் போக)

**மேன** : சின்னம்மா, ஏன் சிலை மாதிரி நிற்கிறீர்கள்? சேனாதிபதி ஏன் சினத்தோடு போகிறார்?

**ஊர்வ** : மடையன். மகா மேதையைப் போல் பேசி என் மனத்தைப் புண்ணாக்கி விட்டான். இவ்வுலகில் இதுவரை என் அழகையோ, நடனத்தையோ குறை கூறிப் பிழைத்தவர் எவருமில்லை. உன்மத்தன் போல் உளறி விட்டான். உம். மேனகா, நீ போய் உன் தந்தையை இங்கு வரச் சொல்லிவிட்டுப் போ. (இளவரசி மேனகா போக ஊர்வசி தனியாக)

உம் சுகதேவ்! இதனால் ஏற்கெனவே உனக்கிருக்கும் அபாயத்தை அதிகமாக்கிக் கொண்டாய். உம். இளவரசியைக் கலியாணம் செய்து கொள்ள மறுத்த அன்றே உன்னைப் பழி முடிக்காமல் போனது என் குற்றம். உம்... என்னைப் பாடும் குயிலென்று எண்ணி ஏளனம் செய்தாயா? இந்த ஊர்வசி பாயும் புலியென்பதை நிரூபித்து விடுகிறேன்.

**வீரசி** : (வந்து) கண்ணே ஊர்வசி என்ன? இங்கேயே தனித்து மரம்போல் நிற்கிறாய்?

**ஊர்வ** : கொடி போலக் குழைய வேண்டாம். கோபமா யிருக்கிறேன்!

**வீரசி** : கோப்பையே கொதித்தால் குளிர் மது போவ தெங்கே, ராணி!

**ஊர்வ** : *சகிக்க முடியாத சதி நடக்கிறது! சர்வநாசம் விளையப் போகிறது!*

**வீரசி** : *சாபம் வேண்டாம். சங்கதி என்ன? இப்போது என்ன நடந்து விட்டது?*

**ஊர்வ** : *(வஞ்சக நகையொலிக்க)* வேறென்ன நடக்க வேண்டும்? பெருங்குடி மக்களெல்லாம் கூடி யிருக்கையில் என்னை அவமானப்படுத்தி விட்டானே. ஆகா! அச்சிறுவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் முள்போல் என் இதயத்துள் பாய்ந்து வேதனை செய்கிறதே!

**வீரசி** : *(முகம் சுளித்து)* எரிந்து பேசாதே என் பரிமளப் பதுமையே! என்ன அப்படிப் பிரமாதப்படுத்திக் கொள்ளுகிறாய்?

**ஊர்வ** : *சுகதேவ் தீராப் பகையை உண்டாக்கி விட்டான்.*

**வீரசி** : *பகை! அது கணத்தில் மறையும் புகை! அதை மிகைப்படுத்தினால் அது நம்மை நகைப்படுத்தி விடும்! அந்தப் பகையை உன் புன்னகைக்கு இரையாக்கு, கண்ணே!*

**ஊர்வ** : *போதும் சமர்தானம். உமது தெய்வத்தை - கலைவாணியை - குறை கூறிக் குத்தலாகப் பேசிப் பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்ற அச் சிறுவன் சுகதேவைத் தாங்களாவது மறுத்துப் பேசினீர்களா?*

**வீரசி** : *மறுத்துப் பேசினால் அவன் வார்த்தைக்கு மெருகு கொடுத்தது போலாகும். அதனால்தான் ஒரு விதமாகப் பேச்சை மாற்றிப் பேசி, மழுப்பிக் குழப்பி ஒருவாறு மறைத்து மறந்து மன்னித்து விட்டேன். எப்படி?*

**ஊர்வ** : *அக்கயவனை எவ்விதத்திலும் பழி வாங்கியே தீருவேன்.*

**வீரசி** : அதற்கு வழி இதுவல்ல, கண்ணே! என் இனிய ஊர்வசி! வீணாகச் சுகதேவைப் பகைத்துக் கொள்வதால் பயனில்லை. அவனிடம் மக்கள் எவ்வளவு மதிப்பும் உள்ளன்பும் வைத்திருக்கி றார்கள் தெரியுமா? பெருங்குடி வணிகரிடம் அவனுக்கு அளவற்ற செல்வாக்கு இருக்கிறது! அதனால்தான் அவன் இன்று சிறை மந்திரி யாகவும், சேனாதிபதியாகவும் இருப்பது.

**ஊர்வ** : மூடுங்கள் வாயை. என் ஒளி வீசும் பாதங்களிலே ஒட்டிய தூசு பெறாத சிறுவனைப் பற்றிப் புகழுரை படிக்க ஆரம்பித்து விட்டீர்கள். அவன் என்னைக் குறித்துக் குறை கூறிக் கொட்டின வரை மொழிக்குப் பரிகாரம், அவனது உயிர்தான்.

**வீரசி** : உன்னைப் பற்றி யார் எப்படிக் கூறினால் தானென்ன? காலத்தை வென்று நிற்கும் உனது ஈடு இணையில்லாத இனிமை. இளமையின் மென்மை, கலையின் திறமை. காலப்பெருமை யால் குறைந்து விடப் போகிறதா? அகிலமறிந்த அழகரசி நீ! அனுபவமற்ற சிறுவன் அவன்! அதற்காக நீ இப்படி வருந்தலாமா? ஊர்வசி, திராட்சை ரசத்தைப் பருகினால்தான் மயக்கம். உன்னைப் பார்த்தாலே மயக்கம்! உன் கலை யழகை ரசிக்கும் முறையறியாமல் அம்முரடன் குறை கூறிவிட்டதை மன்னித்து விடு. கத்தி யெடுக்கும் போர்வீரன்தானே அவன்? மேலும், கலியாணமாகாத இளங்காளை, பெண்களின் பெருமையை அவன் என்ன கண்டான்?

**ஊர்வ** : உம். வேந்தே! இந்தத் தெய்வத்தின் வனப்பிலே, அழகின் இனிப்பிலே, ஆசையின் களிப்பிலே, இளமையின் நெருப்பிலே வேட்கை கொண்டு, ஈடுபட்டுப் பிச்சைக்காரர்களான பேரரசர்கள் எத்தனை பேர்? இந்த மன்மத மாளிகையின் கனவிலே கலங்கிச் சிதறுண்ட சாம்ராஜ்யங்க

ளெத்தனை? மாய்ந்த மன்னர்களெத்தனை? கால தேவனைவிட வேகமாகச் சுற்றும் என் கனல் விழியில் கரிந்து போன காவலர்கள் எத்தனை? அனைத்தையும் மறந்து, விரிந்த தங்கள் அன்பிலே சிறந்திருக்கிறேன். அத்தகைய என்னை இன்று கேவலம், ஒரு சேனாதிபதி சிறுமைப் படுத்துவதா? முடியாது. ஒருக்காலும் இதை மன்னிக்க முடியாது! அக்குற்றவாளியை இந்த ஊர்வசி உற்றபடி தண்டித்த பின்னரே ஆறுத லடைவாள்.

**ஊர்வ** : சரி, என் செல்வமே, வா. அதற்கானவற்றை நான் செய்கிறேன். இப்பொழுது கோபந்தணி. வாடாத என் வாழை மரமே! சலிக்காதே சந்தனச் சிலையே! முனியாதே முக்கனித்தேனே! பதறாதே என் பவளப் படிவமே! படித்தறிந்த காவியமே! பார்த்தறிந்த ஓவியமே! தொகுத்தளித்த இலக்கி யமே! சிரிக்கும் சிலையே! சிங்கார மலையே! ஆகா! சினத்தால் உன் மெல்லிய மலர் மேனி கொதிப்புற்று வாடிவிடும். இதோ பார், மின்னும் உன் சிவந்த முகம் கன்னிய பழம் போல என்ன பாடுபடுகிறது? கண்ணாடியைப் பார். அதுகூடக் கருத்துவிடும் ஊர்வசி. கண்ணே வா. வன மாளிகைக்குப் போவோம் நாம்.

**ஊர்வ** : உம் வீரசிம்ம வேந்தே! இந்த ஊர்வசியை அடைய நீர் அன்று செய்த கொலைகள் ஒன்றும் பெரிதல்ல.

**வீரசி** : உஸ்.... நமது அகப் பொருளின் ரகசியத்தைப் புறப்பொருளாக்கி அரங்கிலே பேசாதே, ராணி. என் இசையரசி வசையரசி யாகலாமா?

**ஊர்வ** : ஆம், நானும் உமது உறவுக்காக நடத்திய சதி நாடகங்கள் மிகப்பல. ஆனால், இச்சிறுவன் சுகதேவைப் பழி வாங்குவதில் பின்னடைந்தீரா னால்... ஆமாம் எச்சரிக்கை. உம்...

**வீரசி** : *ஊர்வசி என்ன இவ்வாறு கூறிவிட்டாய்? இருபது ஆண்டுகளாக இவன்' அனுபவித்து வரும் உன் சொர்க்கானுபவத்தை ஒரு விநாடி நேரம் எண்ணினால் போதாதா? பின்வாங்கவும் மனம் இடந்தருமா கண்ணே! என் பேசும் பொற் சிலையே! உனது இன்பத்துக்காக மூன்று உலகங் களும் நாசமானாற்கூட அதை நான் மனமார வரவேற்பேன். காலகாலமாக உருவாகும் என் காதல் காவியத்தின் கடைசி ஏடு நீ! நீ வாடினால் என் உயிர் வாடும். உம். புறப்படு! காமனின் சிறப்பிடம் செல்வோம்!*

**ஊர்வ** : *சரி, ஏதோ ஒரு ரசமான நாடகம் நகரில் நடப்ப தாகக் கூறினானே, அதை நான் பார்த்துவிட வேண்டும்.*

**வீரசி** : *யாரது? அடே, கார்மேகா! (காவலன் வர) நீ உடனே போய், அரசரும் ராணியும் நகரிலே நடக்கும் ஒரு ரசமான நாடகத்தைக் காண வேண்டுமெனவும், அதற்கான ஏற்பாட்டை உடனே செய்யச் சொன்னதாகவும் அதிகாரியிடம் கூறிவிடு. கார்மேகா நீ போ! ஊர்வசி நீ வா!*

*(அரசன் அரசியை இழுத்துச் செல்லக் கார்மேகம் தனித்து)*

**கார்மேகம்:** *என்ன இது? ரசமான நாடகமா? இது என்ன நாடகமய்யா இது! உம். ரசமான நாடகம்! குழம்பான நாட்டியம்! சரி என்ன இழவோ? நமக்கெதுக்கிது? போய்ச் சொல்லிவிடலாம்.*

**(காட்சி 6 முடிவு)**

# காட்சி - 7

இடம் : நாடக மேடைக்குள் ஒரு சிறு நாடக மேடை.

காலம் : இரவு

*(இரவு ஊர்வசியும், அரசரும் பெருங்குடிகளிற் சிலரும் வீற்றிருத்தல். எதிரில் சுகதேவும், கனிமொழியும் அமர்ந்து ஆர்வத்தோடு பார்த்தல். மேடையுள்ளிருந்து ஒரு கூட்டப் பாடல் கேட்கிறது)*

*கூட்டமுதப் பாடல்*

வான்மதி கதிர்ஒளி
 வாரிதி புயல் புவி
காரணம் வாழியவே - கலைக்
 காரியம் வாழியவே! *(வான்)*

சூழ்இருள் விலக்கிடும்
 சுழன்றிடும் அறிவொடு
 ஏழிசை இயலொடு
 எழில் தரும் மயலொடு
நாடகம் வாழியவே - நம்
 நாட்டெழில் வாழியவே!

## முதற்காட்சி

*('ஏழை நாடக மன்றம்' என்ற பெயர்ப் பலகை தொங்குகிறது. ஒரு தடாகப் பின்னணித் திரை. முருகன் - வள்ளி வேடந்தரித்த இருவரும் ஒருமயமாகி நிற்கச் சூத்திரதாரன் தோன்றிப் பேசுகிறான்)*

**சூத்திரதாரன் :** *கருணைக் கடவுளே! அழகின் சிகரமே! கலைகளின் பிறப்பிடமே!* இன்று நாங்கள் நடத்தப் போகும் 'கனவு' என்ற இந்த நாடகம் யாதொரு குறைவுமின்றி நடைபெற அருள்புரிய

வேண்டுமெனப் பணிவுடன் வேண்டிக் கொள்ளு கிறோம்.

**முருகன்:** அவ்வாறே ஆகட்டும். கலைகளின் கண்ணியத்தைக் காப்பாற்றி வெற்றி பெறுவீர்களாக!

## நாடகத்தின் அடுத்த காட்சி

(மாயா, வேதம், வாணி)

**வேதம் :** வாணி! இப்பொழுது அடிக்கடியும் கலா மன்றத்துக்கு நான் வரமுடிவதில்லை. நாட்டியப் பயிற்சியை நடத்த என் மாளிகைக்கே வர வேண்டும். இது என் கட்டளை.

**வாணி :** வேதம், வேண்டாம்! கலைப் பயிற்சிக்கு உகந்த காலம் இதுவல்ல. நாடு இருக்கும் நிலையில் நாட்டியம் ஒரு கேடா நமக்கு?

**வேதம் :** அப்படியானால் வரமுடியாதென்கிறாயா?

**வாணி :** நம் போன்ற பெண்கள் நாட்டியமாடிப் பொழுது போக்குவதை விட்டு நாட்டுப்பணியில் ஈடுபட வேண்டும். நெருக்கடி நிறைந்த காலம் இது! நாட்டுப் பஞ்சம் தீரட்டும்! நல்ல பரதம் கற்கலாம்.

**வேதம் :** சரி, வா மாயா, போகலாம்! இவளை அழைத்ததே தவறு. கவியரசனைக் கலியாணம் செய்து கொண்டோம் என்ற கர்வம்.

**வாணி :** இந்த கர்வம் எல்லாம் எனக்கில்லை, வேதம். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படு கின்றன. காரணமில்லாமலே வெறுப்பை உண்டாக்கிக் கொள்வது தவறு, வேதம்.

**வேத :** உபதேசம் செய்ய இதுவும் நாடக மேடையல்ல.

**வாணி :** வாழ்க்கையின் நிழல்தான், வேதம், நாடகம், அதை அலட்சியப்படுத்தாதே.

**மாயா** : வேதம்! இங்கு இனியும் நின்றுகொண்டே இருந்தால் உன் மதிப்பு தற்கொலை செய்து கொண்டே போய்விடும்! வா போகலாம்.

**வாணி** : வருங்கால மகாராணியாகிய வேதத்துக்கு இவ்வளவு முன்கோபம் கூடாது, மாயா.

**வேத** : என்ன துணிச்சல்! என்னைச் சர்வ முட்டாளாக்கு கிறாயே?

**வாணி** : உன்னை வேறு ஒருவரால் ஒருபோதும் முட்டாளாக்க முடியாது, வேதம்.

**வேத** : அப்படியானால் நான் ஏற்கெனவே முட்டாளா?

**வாணி** : அடடா! என்ன இது? இல்லாத குறையை வலிய வரவேற்கிறாய். பொறாமைக்கு இடம் கொடுக் காதே. நீ ஒரு கலைப்புறாவாக இருப்பதையே விரும்புகிறேன்.

**வேத** : ஓகோ! நான் ஒரு காட்டுப்புறா. நீ ஒரு கான மயிலாக்கும்! எவ்வளவுதான் பழகினாலும் உன் குல வழக்கம் போய்விடுமா? ஆயிரந்தான் கற்றாலும் உன் அற்பகுணம் போய்விடுமா? கவியின் மனைவி என்ற கர்வம்!

**வாணி** : வேதம், நானும் ஒரு பெண்தான் என்பதை மறந்து பேசுகிறாய். குலத்தைக் காட்டி என் குலையை நடுங்க வைக்காதே. பிறப்பை வைத்து என் பொறுமையைப் பழிக்காதே. மண்ணைத் தங்க மாக்குவது போல், நானும் என் வாழ்வைத் திருத்திக் கொண்டேன். வீணாக வையாதே.

**வேத** : வைதால் என்ன செய்து விடுவாய்?

**வாணி** : நான் உன்னை என்னம்மா செய்ய முடியும்? உன் வாய் வலிக்குமே என்று வருத்தப்படுவேன். சத்தம் அதிகமானால் செவிகளை மூடிக் கொள்வேன்.

**வேத** : ஆகா! புத்தரின் மறு அவதாரந்தான். மகா பதிவிரதை! அகலிகையின் அடுத்த வாரிசு.

*(மாயாவும், வேதவல்லியும் கோபத்துடன் சென்று விடுகிறார்கள்)*

**வாணி** : கண்ணாடிக்கும், கல்லுக்கும் பேதம் தெரியாத குருட்டுப் பெண்கள். நான் போகிறேன்.

**வேத** : *(மீண்டும் வந்து)* உம். இருட்டு நேரமாகி விட்டது. வாணி! ஆற்றில் புதுவெள்ளம். இங்கேயே தங்கி விட்டுக் காலையில் போகலாம்.

**வாணி** : இல்லை. அவரும், குழந்தை சாந்தியும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் போய்த்தான் ஆக வேண்டும்.

**வேத** : *(சூழ்ச்சிப் பார்வையோடு)* படகுக்காரர்கள் கூடப் போய்விட்டார்கள் போலிருக்கிறதே!

**வாணி** : பரவாயில்லை. எனக்கும் படகோட்டத் தெரியும். வருகிறேன்.

*(அவள் போக, வேதம் மாயாவிடம் ஏதோ பேசுகிறாள். பழியுணர்ச்சியோடு பரிகாசமாகப் பயங்கரமாகச் சிரிக்கிறாள்!)*

*பின்னணி - ஓடப்பாட்டு! ஓடும் நதிவெள்ளம்!*

**( நிழற்காட்சி )**

*(ஓடம் நிழற்காட்சியின் சுழலில் சிக்கிச் சுழலும் போது)*

**வாணி** : *(அஞ்சி)* சாந்தி! சாந்தி! சாந்தி!

**கவி** : வாணி! வாணி! வாணி!

**சாந்தி** : அம்மா! அம்மா! அம்மா!

*(கவிஞன் நதியில் பாய்ந்து வாணியை மீட்க முயலுகிறான். அதற்குள் படகு கவிழ்ந்து விடு*

*கிறது. வாணி, நதியின் சுழல் வகுத்த விதிக்கு இரையாகி விடுகிறாள். 'வாணி, வாணி' என்ற கவிஞனின் அவலக்குரல் வானமெங்கும் எதிரொலிக்கிறது)*

*(ஓடப்பாட்டு தூரத்திலே பின்னணியில் கேட்கிறது)*

**வேதம் :** மாயா... அந்த வாணி! இனி ஆகாச வாணி ஆகிவிடுவாள். படகோட்டிகளை நான்தான் வேண்டுமென்றே போகச் சொன்னேன். ஆற்றிலே புதுவெள்ளம் சுழல் விட்டுப் பாய்கிறது. படகும் ஓட்டைப் படகு! என் கலைமன்னனை விட்டு வாணி பிரிந்தால்... அழகின் ராணியாகிய என்னை அந்தக் கவி மன்னன் விரும்பியே தீருவான். அந்தக் கவியரசனுக்காகச் சிறு வயதிலிருந்தே காத்திருந்தேன். பருவம் வந்துவிட்டது. எனக்கு இடையூறாக இதுவரை இருந்துவந்த வாணி, இனி நதிமயமாகி விடுவாள்! நானும் விதியை வென்று நிற்பேன். தனிமை, கலைகளின் விரோதி. எப்படியும் வாணியைப் பிரிந்த கவிமன்னனின் மதி, என் விதியிட்ட கட்டளைக்கு இனிப் பணிந்தே தீரும். *(சிரிக்கிறாள்)*

**மாயா :** ஆனால், மன்னன் விடமாட்டானே! உனக்குக் கவியின்மேல் ஆசை. புவியாளும் இளவரசனுக்கோ உன்மேல் காதல். இது எங்குப் போய் முடியுமோ?

**வேதம் :** மாயா! எதையும் சமாளிக்கும் வலிமை எனக்கு உண்டு. பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் வந்தால் என்ன? நான் வற்றாத காமதேனு - கற்பக விருட்சம். என் திருவடிகளை அர்ச்சிக்காத ஆண்களில்லை. ஆனால், கவியரசன் மட்டும் என்னைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை! அந்தக் கனவும் இனி நனவாகிவிடும். இளவரசனின் ஏவலால் அவனைக் கொண்டே, அரசனைக் கொல்வேன்.

மகாராணியும் ஆவேன், கவியரசைக் கொண்டு உலகக் கலையரசியும் ஆவேன். இது உறுதி!

*(இச்சமயத்தில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த அரசி ஊர்வசிக்கு மனம் குழம்பி மயக்கம் வரும் போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.)*

**ஊர்வ** : *(மன்னனிடம்)* நான் அரண்மனைக்குப் போக வேண்டும். தலைவலி... மயக்கம்!

**வீரசி** : *(பயத்தை மறைத்து)* ஏன், நாடகம் ரசமாயிருக்கிறதே....

**சுகதே** : வேந்தே! மகாராணியம்மையாருக்கு நாடகம் பிடிக்கவில்லை போலிருக்கிறது. இனியொரு நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே.

**ஊர்வ** : இல்லை. எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருக்கிறது. நேற்று முழுவதும் நாட்டியமாடிய களைப்பு...!

*(இதற்குள் நடிகர் தலைவன் மணிவண்ணனும் அவன் தங்கை சாந்தியும் மாலையுடன் வந்து)*

**மணி** : எங்கள் பாக்கியம் தாங்கள் வந்தது. ஆனால், முழு நேரமும் இருந்து நாடகம் முழுவதையும் பார்க்க முடியாமல் மகாராணியாருக்கு இடையூறு நேர்ந்துவிட்டது! வருந்துகிறோம். எமது அன்புக்குரிய இம்மாலைகளை மன்னருக்குச் சூட்டுகிறோம்.

**வீ.சி** : மகிழ்ந்தோம். நடிப்பும் நடனமும் மிக அழகு. மற்றொரு நாள் வருகிறோம்.

*(சுகதேவன் புன்முறுவல். மாலை போட்டுக் கொண்டு மன்னரும் அரசியும் புறப்பட்டுப் போதல். சுகதேவன் தனித்து)*

**சுகதே** : மணிவண்ணரே, மன்னரை மாளிகைவரை கொண்டுபோய் விட்டு வந்துவிடுகிறேன். அது

*வரையில் நாடகத்தை நிறுத்தி வையுங்கள். வந்தபின் தொடரலாம். மிக ரசமான பகுதி.*

**கார்மேகன் :** *எசமான், ரசமான பகுதி - ரசமான நாடகம்னா என்னாங்க? ரசம் ரசம்னா என்னாங்க?*

**சுகதே :** *போடா, முட்டாள்! ரசம் என்றால் மனசைத் தன் வசமாக்கும் கலைநயம்!*

**கார் :** *ஆமாங்க!*

**சுகதே :** *கனிமொழி, நீ இங்கு இரு. இதோ வந்து விடுகிறேன்.*

*(வெளியேறுகிறான்)*

**சாந்தி :** *(கனிமொழியிடம்) தங்கள் பெயர் கனிமொழியா?*

**கனி :** *ஆமாம். என்பெயர் கனிமொழி. அண்ணாவின் பெயர் சேனாதிபதி சுகதேவர்.*

*(மணிவண்ணனிடம்)*

*தாங்கள் இப்படி உட்காருங்கள். தங்கள் நாடகத்தால் நாட்டுக்கு நல்ல பலன் உண்டாகும் என்பது என் நம்பிக்கை.*

**மணி :** *புகழுரை எதற்கம்மா...! ஏதோ எம்மாலான தொண்டு.*

**கனி :** *தாங்கள் உட்காருங்கள் தயவு செய்து...*

*(கனிமொழியின் விழிகள் அடிக்கடி மணி வண்ணன் விழிகளைச் சந்திக்கின்றன.)*

**(காட்சி 7 முடிவு)**

# காட்சி - 8

**இடம் : அரண்மனை அந்தப்புரம்**

**காலம் ; நள்ளிரவு**

*(சர்வாதிகாரி மேனகையுடன் இருக்கிறான். கண்டாகர்ணன் ஓடிவந்து)*

**கண்டாகர்ணன்** : *சாமி! அவசரம்! அந்தப் பனிநாட்டுத் தூதுவர்கள் தங்களைப் பார்க்கக் குகையில் காத்திருக்கிறார்கள்.*

**சர்வாதிகாரி** : *சந்தர்ப்பம் தெரியாத மடையர்கள். கண்டா கர்ணா! ஆராய்ச்சிக்குரிய பொருள்; அரசியல் பெரியதா? அந்தப்புரம் பெரியதா? ஆம்; சுவாமி யோகத்தில் இருப்பதாகப் போய்ச் சொல்! பிறகு பார்க்கலாம். பனிநாட்டு ஐந்தாம் படைகளைப் பொறுத்திருக்கச் சொல்!*

**கண்டா** : *ஆகட்டுங்க! அந்தப்புரத்தைவிட இந்தப்புரந் தாங்க பெரியது.*

*(மேனகை வந்து கண்களை மூட)*

**சர்வா** : *ஆகா...! என் அன்பைப் பெருக்கும் கல்வியில் மிகத் தேர்ந்துவிட்டாய். நீ சகல கலைகளிலும் தேறவேண்டும்.*

**மேன** : *நீங்கள் சொல்லிக் கொடுத்தபடிதான் நடந்தேன். உங்களுக்கு என்மீது பிரியமே இல்லை.*

**சர்வா** : *சென்றதற்குச் சிந்தை செய்யாதே. உன் தந்தையும் சிற்றன்னையும் நாடகத்திற்குப் போய் விட்டார் களா?*

**மேன** : *என்னைக்கூடத்தான் அழைத்தார்கள். ஆனால், உடம்பு சரியில்லை, நீங்கள் போங்கள் என்று சொல்லிவிட்டேன்.*

**சர்வா** : *எவ்வளவு பெரிய பொய் சொல்லியிருக்கிறாய் நீ!*

**மேன** : *ஏன்? என்ன பொய்? நீங்கள்தானே அப்படி சொல்லச் சொன்னீர்கள்?*

**சர்வா** : *உன் உடம்பு மாத்திரந்தான் சரி இல்லையா? அப்படியானால் உன் உள்ளம்...? அதுவும் சரி இல்லையா?*

**மேன** : *சரி, நாளைக்கு அப்படியே சொல்லிவிடுகிறேன்.*

**சர்வா** : *மேனகா நீ கிளிபோலவே இருக்கிறாய். குயில் ஆவதெப்போது? (சிரிப்பு)*

**மேன** : *போங்க சாமி! குயில் கருப்பு; கிளிதான் பச்சை. நான் கிளியாகவே இருப்பேன். இதோ மலர் மாலை....*

**சர்வா** : *அடடா! வாழும் இருவர் வாடும் மலரைத் தொடக்கூடாதே!*

**மேன** : *அடடா, இதை முன்பே சொல்லி இருக்கக் கூடாதா? இந்த நேரத்தில் வாடா மலரை எங்கே தேடுவது?*

**சர்வா** : *அது நந்தவனங்களில் மலராது கண்ணே!*

**மேன** : *பின் எங்கே?*

**சர்வா** : *சொல்கிறேன். (அருகழைத்து) நீ தான் அந்த அழகு மலர்க்கொடி! இதோ, உன் அழகிய இதழே அந்த வாடா மலர். இதனுடைய நறுமணம் இல்லா விட்டால், கடல் சூழ்ந்த இவ்வுலகமே பசுமையற்ற பாலைவனமாகிவிடும் கண்ணே!*

**மேன** : *சாமி, பறப்பது போல் இருக்கிறது. ஆனால், பயமாகவும் இருக்கிறது...*

**சர்வா** : இன்பச் சிறகுகள் ஏற்கெனவே நமக்கு முளைத்து விட்டன, கண்ணே.

*(இச்சமயம் உள்ளிருந்து கார்மேகம் 'நாடகமே உலகம்' என்று பாடி வரல், கேட்டுத் தூர விலகிச் சர்வாதிகாரி திகைக்கிறான்.)*

**கார்** : ஓ.... நீங்களா! கும்பிடுங்க!

**சர்வா** : கார்மேகம், நாடகம் முடிந்துவிட்டதா?

**கார்** : அந்த நாடகத்தில் ரசமே இல்லிங்களாம்.... ஆகையினாலே அரசரும் அரசியும் எழுந்து வர்ராங்க, வந்துடுவாங்க வந்திருப்பாங்க வந்துட்டாங்க. அதுக்குள்ளே இங்கே எல்லாம் சரியாயிருக்குதான்னு பார்க்க வந்தேனுங்க.

*(தனக்கேற்பட்ட கூச்சத்தைச் சாமர்த்தியமாக மறைக்கிறான்)*

**சர்வா** : அடே, ராஜகுமாரிக்கு உடம்பு நலமில்லை. மருந்து கொண்டு வந்தேன்.

**கார்** : சரிதானுங்க.

**சர்வா** : அடே, இது எதிர்பாராமல் வரும் புது வியாதி, அரசர் வந்ததும்...

**கார்** : சொல்றேனுங்க!

**சர்வா** : சரி... நீ போ, மேனகா....! கார்மேகம், நாடகம் எப்படி?

**கார்** :- சே, கழுதை! நாடகமா சாமி அது? அவ்வளவும் நாட்டிலே நடக்கறதுங்க. என்ன நாடகம் இது? வெறுங்கல்லுக்கும் விநாயகர் சிலைக்கும் வித்தியாசம் தெரியாத வெட்டிப்பசங்க! பாறாங் கல்லுக்கும் பராசக்திக்கும் பேதம் தெரியாத

பரதேசிப் பசங்க! என்னமோ நாடகமுங்கிறாங்க. எனக்குப் பிடிக்கலிங்க. நாடகமுன்னா எப்படி இருக்கணும்? *(ஒரு பாட்டுப் பாடி)* இப்படி இருக்கணும்.

*(சர்வாதிகாரி போகிறான். மேனகையும் போகிறாள்... அரசியும் மன்னவனும் வருகிறார்கள்.)*

**ஊர்வ** : ஆ...! பிசாசு...! பேய்... நிழல்கள்...! ஆ...! சுகதேவன்... பொறு. உன்னைப் பொசுக்கி விடுகிறேன்!

*(மது மயக்கத்தில்)*

**வீ.சி** : ஊர்வசி, இவனை நாசமாக்கி விட்டாலும் உடலற்ற எண்ணப் பேய்கள் நம்மை வாழ விடாவே!

**ஊர்வ** : சரி. விடிந்ததும் சர்வ வல்லமையுள்ள சர்வாதிகார குருதேவரிடம் சென்று விமோசனம் தேடுவோம்.

**வீ.சி** : அடே, கார்மேகம்!

**கார்** : எல்லாம் இந்த காத்து பண்ற கோளாறுங்க! பயப்படாதீங்க. நானிருக்கப் பயமேனுங்க... அரண் மனையிலே நடக்கற அத்தனைக்கும் காவல் நானிருக்க அச்சம் எதுக்குங்க? கண்ணை மூடித் தூங்குங்க - கவலையை மறங்க. கனவு காணாமல் உறங்குங்க - விடிஞ்சா சரியா போகுங்க - இந்தக் கார்மேகம் சொல்றேங்க. காலைக்கதிரவன் வந்தா கட்டாயம் இருட்டு போயிடுங்க - இந்தாங்க *(மதுக் கோப்பையைத் தந்து)* - கவலைக்குக் கை கண்ட மருந்துங்க. விதிக்கு விருந்துங்க! சும்மா அருந்துங்க.

**(காட்சி 8 முடிவு)**

# காட்சி 9

இடம் : மலைச்சுரங்கம்

காலம் : இரவு

*(சுரங்கத்திற்குள் ஒரே இருட்டு. பனிமலையின் திபெத்திய நாடோடிகளைப் போல உடையுடுத்திய ஒருவன் தங்க நாணய மூட்டையைத் தருகிறான்)*

**ஐந்தாம் படை** : *ஷாஸ்மி - ஷாஸ்ஷி - மாஸ்ஷி.*

**சர்வா** : *மாங்ஹி - மாங்ஹி. ஆசீர்வாதம். இது எவ்வளவு?*

**ஐ.ப** : *சக்காங்ஷி - மகாங்ஷி - சிகாங்ஷி - விகாங்ஷி.*

**சர்வா** : *இன்னும் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் விரைவில் வேண்டும். பெருங்குடிகளுக்குத் தருவ தாக வாக்களித்து விட்டேன். லஞ்சம் தருவதில் பஞ்சம் இருக்கக் கூடாது.*

**ஐ.ப** : *காங்கி - மாங்கி - தாங்கி - சாங்கி - ஈங்கி - ஊங்கி - ஏங்கி - ஓல்க்கி - பங்கி - பால்கி - யாங்கியாங்.*

**சர்வா** : *அதாவது, பரமபிதா நதிவரையில் நம் பெருமை பரவி இருக்கிறது! இங்கும் வஞ்சவிதை விதைத்து விட்டேன். எங்கும் நமது ஐந்தாம் படைப் பயிர். விரைவில் அறுவடையை எதிர்பார்க்கலாம்.*

**ஐ.ப** : *பாஷ்.... பாஷ்.... கீஷ்.... கோஷ்...*

**சர்வா** : *ஆம். விரைவில் இந்த மக்களின் மொழியை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் மொழியைக் கற்றுக்கொண்ட ஒருவனுக்குத் தங்கள் தாய் நாட்டையே தானம் கொடுத்துவிடும் தர்மப்பிரவுக்கள் இவர்கள்!*

**ஐ.ப** : *பாங்ச்.... போஹங்...*

**சர்வா** : *ஆமாம், எவ்வளவு பற்று! சரி... பாஷையைச் சொல்லித் தர மேலும் பத்துப் பண்டிதர்களை அனுப்பித் தருகிறேன். முதலில் நீர் பேசக் கற்றுக் கொள்ளும். இனி ஐந்தாம் படையல்ல. ஆறாம் படையின் தளபதி நீ! சரி, போய்ச் சாப்பிடும். உமக்கு வேண்டிய பல்லி, பாம்பு, நண்டு, வண்டு, தவளை - எல்லாம் உள்ளே இருக்கும்.*

**ஐ.ப** : *வெள... வெள... நாங்... மாங்..... பாங்... சீங்.... பீங்...*

**சர்வா** : *இந்த நாட்டு மாடு ருசியாக இருக்கிறதா! சரி, தின்னும். நிறைய போடச் சொல்லுகிறேன்! முதலில் சோறு, பிறகுதான் நாடு, போம். இந்தாடா கண்டாகர்ணா! பார்த்தாயா, அவ்வள வும் தங்கக் கட்டிகள்! வைரங்கள்! நமது அறிவின் திறமைக்கு அவர்கள் தரும் பரிசு!*

**கண்டா** : *இதைப் போய்த் துரோகம்னு சொல்றாங்களே!*

**சர்வா** : *துரோகமல்ல, அரசியல் ஞானம் தந்த செல்வம். கொண்டு போய் வை. கொள்கை மாறுவது குற்றமல்ல. அனுபவித்தவரை சுகம். அடைந்த வரை வெற்றி.*

*(ஏதோ சத்தம் கேட்க, அவர்கள் போகிறார்கள். கண்டாகர்ணன் வர, விளக்குகள் அணைக்கப் படுகின்றன)*

**(காட்சி 9 முடிவு)**

# காட்சி 10

**இடம் : சர்வாதிகாரியின் மந்திராலயம்**

*(பயங்கர மந்திரவாதியைப்போல் காட்சி தருகிறார் சர்வாதிகாரி)*

---

**கண்டா :** சர்வாதிகார தேவர் வாழ்க! அண்ணலே, இது என்ன மாற்றம்?

**சர்வா :** கண்டாகர்ணா, நீ முட்டாள்... யோகத்திலிருந்த சாமியின் ஞானநிலை பல படிகளைக் கடந்து இப்போது வானத்தின் உச்சிக்கே போக இருக்கிறது. யோகம் வேகமாக எத்தனை போக மாக வேலை செய்கிறது. தெரியுமா?

**கண்டா :** தெரியுமே!

**சர்வா :** ஆமாம்! கண்டவர்கள் விண்டதில்லை; விண்ட வர்கள் கண்டதில்லை. தெய்வத்தின் பெயரைச் சொல்லியே இந்த மக்கள் மந்தையைக் கொல்ல முடிவு செய்துள்ளோம்.

**கண்டா :** அப்படியே செய்வோம்! தேவரீர் விருப்பம். மூச்சுவிடாமல் பேசுவோம். பிரச்சாரப் படைக்கு ஆணையிடுங்கள். பேச்சுவண்ணம் படைத்த நாம் வைத்ததுதானே நீதி! எதை, எவன், எங்கே, எப்படிச் சொன்னாலும் அதை, அங்கே, அப்படியே, அவ்விதமே நம்பிவிடக்கூடிய அப்பாவி மக்கள் இருக்கும்வரை, நாம் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். அண்ணலே! ஆமாம், தெய்வத்துக்கு ஆயிரம் உருவம், பதினா யிரம் பெயர்கள் உண்டே! இந்த மக்களுக்காக எதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

**சர்வா :** *பெரும்பான்மை மக்கள் நம்புகின்ற பெருந் தேவியைக் காட்டியே இவர்களை ஈடேற்றப் போகிறேன். இனி நீயும் மாற்றத்துக்குத் தக்கவாறு பேச வேண்டும்.*

**கண்டா :** *அதுக்கென்னங்க. நான் வேடத்திற்கேற்றபடி நடிப்பேனுங்க. நான் ஒரு பிறவி நடிகனுங்க.*

**சர்வா :** *(சிங்காசனத்தில் அமர்ந்து) கண்டாகர்ணா!*

**கண்டா :** *அண்ணலே!*

**சர்வா :** *எது இன்பத்துக்கு வழிகாட்டுவது?*

**கண்டா :** *தங்கள் மாண்புமிக்க மணிமொழி.*

**சர்வா :** *மகா துரோகமென்பது எது?*

**கண்டா :** *தங்கள் இஷ்டத்துக்கு மாறாக நடப்பது.*

**சர்வா :** *கண்கண்ட தெய்வம்?*

**கண்டா :** *தாங்கள்தான், வள்ளலே!*

**சர்வா :** *யார் நரகத்துக்குப் போவார்கள்?*

**கண்டா :** *நீங்களும் நானுந்தான் அண்ணலே.*

**சர்வா :** *ஏனடா அப்படி?*

**கண்டா :** *அதையும் சுத்தப்படுத்திச் சொர்க்கலோகமாக்கும் சக்திவாய்ந்த புண்ணியவான் நீங்கள்; அடுத்தபடி நான்...*

**சர்வா :** *அடே... மகாதேவிக்கு மகாபிரசாதங்களை நைவேத்தியம் செய்தாயா? அன்னையின் மனம் திருப்தியாகவுள்ளதா?*

**கண்ட :** *ஆகா! தங்கள் மனம் திருப்தியுற்றால் அன்னை யின் மனமும் அப்படித்தான். இந்தாருங்கள் அவிப்பிரசாதம். உண்ணுங்கள், குருதேவா! காய்ச்சிய பாலும் காரமான மாமிசமும், காராம் பசுவின் நாக்கு!*

**சர்வா** : இந்த சடத்துக்கு எதுக்கடா பால்...? நேற்று நடந்த மகாயக்ஞத்துக்கு ஆடுகளை உதவியவர் யார்?

**கண்ட** : நேற்று ஆடுகள் தந்தது மகாசகாய வணிகர் அண்ணலே...

**சர்வா** : ஆடு, என்று அசிங்கமாகச் சொல்லாதே அஜம் என்று அழகாகச் சொல்லேன்டா!

**கண்ட** : சரி. அஜம்.

**சர்வா** : சரி, நாளை...?

**கண்ட** : பத்து மாடுகள் தருவதாக ஒப்புக்கொண்டார்.

**சர்வா** : பசு மாடுகள் எதற்கு பாவம்! அதன் மடிகளே போதும் யாகத்திற்கு!

**கண்ட** : சுவாமி யாகம் எதற்கு?

**சர்வா** : யாகம் - யோகம் - இவை போகபாக்கியங்களுக்கு வழிகாட்டி! சரி. ஆ...! சிஷ்யா, வியப்படையாதே கொள்கை மாறுவது குற்றமல்ல, பக்தன் ஆகி விட்டால் பிரபுக்கள் நம்மை ஆதரிப்பார்கள். பெண்களும் வெறுக்க மாட்டார்கள். பேச்சு அழகாயிருந்தால் வாலிபர்கள் நம்மைச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். இந்நாட்டு மக்களுக்குப் பேச்சென்றால் பிரியம் அதிகம். மூச்சிருக்கும் வரை பேசுவோம். சேனாதிபதி சுகதேவனை நாம் ஒழித்துக்கட்டி நாம், வாழ இது ஒரு புது வழி, அரசியல் நெறி! அதில் நீ ஒரு நரி!

*(இரு வணிகர்கள் ஏதோ பொன்மூட்டை காணிக்கை தாங்கி, குருதேவர் பாதபூஜைக்கு வந்திருக்கின்றனர்)*

**கண்ட** : வாருங்கள் பெருங்குடி மக்களே, என்ன விசேடம்?

பெருங்குடி : சர்வாதிகாரி தம் கொள்கை மாறி, பக்தராகி, குருவாகி விட்டதைப் பாராட்ட வந்தோம். குருதேவரது பாத பூசைக்கு வந்திருக்கிறோம்.

கண்ட : ஆகா! கொள்கை மாறியதும் குவிகிறதே பொன் மூட்டை. சரி குருமூர்த்தியார் படீர் என்று பக்த ராகி திடீரென்று தீர்க்க சமாதியில் லயித்திருக் கிறார்... சற்றுப் பொறுங்கள். சடீர் என்று எழுந்திருப்பார்.

சர்வா : கண்டாகர்ணா, யரோ அடியார்க்கடியார் வந்திருப்பதாக ஞானதிருட்டியில் தெரிகின்றதே!

கண்ட : ஆகா! என் குருவே, என்ன ஞானதிருஷ்டி. இது தூரதிருஷ்டியைவிடப் பெரிசாயிருக்கே! பெருங் குடி மக்களே கண்டுகொண்டீர்களா எங்கள் குருதேவர் புதிய பெருமையை!

பெ.குடி : ஆகாகா கண்டுகொண்டோம்.

சர்வா : இந்தக் கட்டை பொன்னைத் தீண்டுவதில்லை. எல்லாம் அன்னைக்கே நடக்கட்டும்.

கண்ட : இந்தக் கட்டை பொன்னையும் தீண்டும் - மண்ணையும் தோண்டும்.

சர்வா : அடே, மகாசகாயா! உன் மாளிகையில் நான் ஒரு புதிய சித்து விளையாடச் சலவைக்கல் அறை தயார்தானே?

பெ.கு 1 : ஆகா!

சர்வா : நாளை புதிய யாகத்துக்கு இருபது குடம் நெய்யும் பத்து ஆடுகளும் தேவையல்லவா?

பெ.கு 1 : ஆகா! தருகிறேன்.

சர்வா : நீ செய்த பாவந்தீர, எனக்குத் தானமாகத் தர வேண்டிய தங்க நிதி, தங்கப் பசு தயாரா?

பெ.கு 1 : ஆகா. தயார், சுவாமி!

சர்வா : சரி. போய் வா!

*(சிறிது தூரம் செல்ல)*

கண்ட : மகா சகாயரே, அடியேனுக்கு ஒரு தங்கக் கமண்டலம் தேவை. தாகசாந்தி செய்து கொள்ள.

பெ.கு 2: ஏன், சாதாரண மண் கமண்டலத்திலே நீர் பருகினால் தாகம் தீராதோ?

கண்ட : அடே, அஞ்ஞானியே! சபிப்பேன். நீ செய்த பாவத்துக்குப் பரிகாரம் வேண்டுமானால் கொடு கமண்டலத்தை.

பெ.கு 1: அதற்குத்தான் சாமிக்குத் தங்கப் பசுவே தருகிறோமே!

கண்ட : அது நீ இதுவரை செய்த பாவத்துக்கு. தங்கக் கமண்டலமோ, இனிமேல் நீ செய்யப் போகிற பாவத்துக்கு. அதாவது, அது, வந்தபின் காப்பு - இது, வருமுன் காப்பு! தெரியுமா. சரி போய் வருக, இதுவே உங்களுக்கு ஆப்பு!

*(அவர்களுடனே வெளியேறி மீண்டும் வந்து)*

கண்ட : மகாராஜாவும் மகாராணியம்மையாரும் வருகிறார்கள், அண்ணலே.

சர்வா : அப்படியா, வரட்டும்.

*(இருவரும் வர)*

வருக, வேந்தே! மகாராணி! சர்வமங்களமும் உண்டாகுக! கண்டாகர்ணா, சற்று உள்ளே போ.

கண்ட : அப்படியே!

*(போகையில் அங்கிருந்த கார்மேகனை)*

அடே உள்ளே வா!

*(அழைத்துப் போதல், ஊர்வசி சர்வாதிகாரியிடம்)*

**ஊர்வ** : சுவாமி, ஆபத்து!

**வீரசி** : ஆம், குருதேவரே! நாடகம் பார்க்கச் சென்றிருந் தோம். அது ஒரு பயங்கர நாடகம்! பரபரப்பான நாடகம்!

**சர்வா** : அதென்ன அப்படிப்பட்ட நாடகம்?

**வீரசி** : அவர்கள் என் வாழ்க்கையின் இரகசியங்களை யெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கி விடுவார்கள் போலிருக்கிறது.

**ஊர்வ** : ஆம். இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த அதே கூக்குரலை, நேற்று நாடகம் பார்த்ததிலிருந்து, எங்கள் படுக்கையறையில் கேட்கிறோம்.

**வீரசி** : விரைவில் மாளிகையைக்கூட மாற்ற வேண்டும்.

**சர்வா** : முதலில் மன அதிர்ச்சியை மாற்றுங்கள். உம், நாடகம் முழுவதையும் பார்த்தீர்களா?

**வீரசி** : இல்லை. அக்கொலைக் காட்சி நடைபெற்றதும் அச்சமும், உணர்ச்சியும் மேலிட்டமையால் எழுந்து வந்துவிட்டோம்.

**ஊர்வ** : அப்பா..! எவ்வளவு உணர்ச்சியோடு நடித்தார்கள்.

**சர்வா** : உம். நீங்கள் செய்ததைத்தானே நடித்திருப்பார்கள். இதற்கு அஞ்சுவானேன்?

**வீரசி** : அன்று ஏதோ செய்தோம். ஆனால், சுய நினை வோடு இன்று படுக்கையில் நமதுள்ளம் அவல உணர்ச்சியால் பீடிக்கிறது.

**சர்வா** : பயமறியா இதயங்களாகிய நமக்கும், அவல உணர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்?

**ஊர்வ** : அந்தச் சுகதேவன்தான் இந்நடிகர்களை ஆதரிக்கிறான்.

**சர்வா** : உம், அச்சிறுவனை முதலில் தீர்க்க வேண்டும்.

வீரசி : உம். என்ன, தாங்களும் இவ்வாறு பேசுகிறீர்கள்! அவனியெங்கும் போர் சூழ்ந்திருக்கும்போது, சேனாதிபதியான அவனைப் பகைப்பதால் பலனில்லை. எதிரிகள் படையெடுத்து வந்தால் யார் தடுப்பது?

சர்வா : அரசே! இப்படி நீர் துடிப்பது எனக்கும் பிடிக்க வில்லை.

வீரசி : ஆம்; நாடின்றி நாமில்லை, சாமி. நாடியின்றி உடம்பில்லை...

சர்வா : சரி. அந்த நடிகர் கூட்டத் தலைவனைக் கூப்பிட்டு ஏதாவத பட்டத்தைக் கொடுத்து, ஆத்தானக் கலைஞனாக்கி, அரண்மனைச் சுகபோகத்தில் வைத்து விடுவோமானால், பிறகு அவன் நாடோடியாக இருக்க விரும்ப மாட்டான். இதைப் பெருங்குடி மக்களும் மனப்பூர்வமாகச் சம்மதிப்பார்கள்; எப்படி என் யோசனை...?

ஊர்வ : செய்யலாம். இல்லையேல், இந்த நாடகமாடி களையே வைத்து நாடாளும் வலிமை பெற்று விடுவான் சுகதேவன்!

சர்வா : நாடகக்காரராவது, நாடாள்வதாவது! நடக்காத கனவு!

ஊர்வ : அலட்சியம் ஆபத்துக்கு அச்சாரம் தருவதாகும். அவர்களின் பேச்சையும் செயலையும் பார்த்தால் சாதாரண நாடகக்காரர்களாயில்லை.

சர்வா : பயப்பட வேண்டாம். பட்டம், பதவி தருவோம்! முதலில் அவர்கள் அரண்மனைக்குள் வரட்டும். பிறகு நமது கொலுப்பொம்மைகள்தானே! எண்ணியபடி ஆட்டலாம். இந்தக் கலைஞர் களும், கவிஞர்களும் கானலில் மயங்கும் கலை மான்கள்! கற்பனைக் குயில்கள்! கனக மாளிகை, கனிரச விருந்து, கயல்விழி மாதர், கவிதைக்

காட்சி - இவை போதும் இந்த அப்பாவிகளுக்கு! கற்பனைக் கடலின் கரை காணுவதாக எண்ணிக் கனவின் ஆழத்திற்கே போய்விடுவார்கள்.

**ஊர்வ** : ஆனால், இந்தக் கலைஞர்கள் நம் வலையில் விழும் கலைமான்களாகத் தெரியவில்லை, சுவாமி! அந்தப் பேய்களின் தொல்லையைப் போக்கப் புது முறை கண்டு பிடித்திருப்பதாகச் சொன்னீர்களே.

**சர்வா** : ஆமாம். உங்கள் சர்வாதிகாரியின் செயல் யாவுமே புதிதாகத்தான் இருக்கும். அறிவு நூல் பல கற்றேன். அறிவின் கரை கண்டுவிட்டேன். ஞானம், விஞ்ஞானம் எல்லாம் கலந்த மெய்ஞ்ஞானச் சங்கமாகி விட்டேன். இனி இதுவே நான் காட்டும் புதிய நெறி. இந்த நெறியில் மனித நரிகள் அச்சமின்றி நடமாடலாம். அச்சத்தை நீக்குவேன். ஆட்சியை ஆக்குவேன். அபயம் தந்தேன். அஞ்சற்க, மன்னா! நானிருக்கப் பயமேன்! நானே கடவுள்!

**(காட்சி 10 முடிவு)**

## காட்சி - 11

**இடம் : சுகதேவ் மாளிகையின் ஒரு பகுதி. உட்புறம்.**

**சுகதே :** *(கருணாலயரிடம்)* அச்சம் வேண்டாம். நண்பரே! அத்தனை சூழ்ச்சியும் அடக்கப்படும், இழந்த கௌரவம் மீட்கப்படும்!

*(கனிமொழி மலர்த்தட்டுடன் வர)*

**சுகதே :** கனிமொழி, என்னம்மா இது?

**கனி :** அண்ணா, அவர்கள் எங்கே?

**சுகதே :** அவர்கள் என்றால் யாரம்மா?

**கனி :** அவர்கள்தான்... சாந்தியும்...

**சுகதே :** ஓகோ! இப்பொழுதுதான் புரிந்தது. அவர்கள் என்பதற்கு அர்த்தம்.

**கனி :** என்ன அண்ணா. அவர்களை விருந்துக்கு அழைக்க நீங்கள் யாரையும் அனுப்பவில்லையா?

**சுகதே :** ஆமாம், அவர்களை வரச்சொல்லிவிட்டு இப்படி மாலையோடு நிற்கிறாயே. மலரும் மாலையுந்தான் அவர்களுக்கு உணவா?

**கனி :** அண்ணா, விருந்துக்கேற்ற உணவெல்லாம் சமைத்து விட்டேன்.

**சுகதே :** அடாடா! கனிமொழி, இன்றைக்கு நீயா சமைத்தாய்?

**கனி :** ஆமாம், அண்ணா!

**சுகதே :** அப்படியானால் மணிவண்ணரை வேறு ஒரு நாளைக்குத்தான் சாப்பிட வரச்சொல்ல வேண்டும்.

**கனி** : போங்கள் அண்ணா, எனக்கென்ன சமைக்கத் தெரியாதா?

**சுகதே** : அடாடா இதற்குள் கோபித்துக் கொண்டாயே! சரி. அழைத்துவரச் சொல்லியிருக்கிறேன். விரைவில் வந்துவிடுவார்கள். எங்கே மலர்கள்? தந்தையாருக்குச் சூட்டுவோம்.

*(தட்டிலிருந்த மலர் மாலையைத் தன் தாய் தந்தையர் படத்துக்கும், காலஞ்சென்ற சக்கரவர்த்தியார் படத்திற்கும் போட்டு வணங்குதல். அச்சமயம் மணிவண்ணனும் சாந்தியும் வந்துவிடுகிறார்கள். வந்த வீரர்கள் வெளியேறுகிறார்கள்)*

**சுகதே** : வருக கலைமணியே! வணக்கம்.

**மணி** : வணக்கம். தங்களது வரவேற்பு எங்களைத் தலைகுனியச் செய்கிறது. இப்பெருஞ் சிறப்புக்கு எவ்வகையில் உகந்தவர்கள் என்று என் மனம் திகைக்கிறது. தாங்களோ நாட்டின் வீரதிலகம்!

**சுகதே** : தாங்கள் நாட்டின் கலைஞர் திலகம். அமருங்கள். அன்பின் பீடத்திலே வேற்றுமையில்லை. தங்களது கலைஞானம் இந்நாட்டின் புதிய செல்வம். அதைப் பெருமைப்படுத்துவது எமது கடமை. இப்படி அமருங்கள்!

**மணி** : இத்திருவுருவம் யாருடையது?

**சுகதே** : இதுதான் எனதருமைத் தந்தையின் உருவம். நாட்டின் மாசற்ற சேனாதிபதி. சத்யதேவர் என்பது இவர் பெயர். இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் எதிரி நாட்டுப் படைகளின் வஞ்சகத்தால் உயிர் துறந்தார். தாயும் அவரைப் பின்பற்றினார். நாங்கள் இருவரும் எஞ்சிப் பிழைத்தது ஒரு துறவியினால். இதோ இப்படம், காலஞ்சென்ற ஆத்மநாத மன்னருடையது. அவரும் அப்படித் தான் அகால மரணத்தால் ஆவி துறந்தார்.

**மணி** : உம்.... என்ன செய்வது! மலைக்காட்டில் பிடித்த பெருநெருப்பு, கனி மரங்களென்றும், காய்ந்த மரங்களென்றும் வேற்றுமை பார்ப்பதில்லை. அதே போலத்தான் மரணமும் ஒரு பொறுப்பற்ற நாசக்கருவி. நல்லவர், தீயவர் என்று பாராமல் எல்லோரையும் கொள்ளை கொண்டு போய் விடுகிறது.

**சுகதே** : இவரது தம்பி வீரசிம்மர்தான் தற்போது வேந்தர் பதவியிலிருப்பது. எனினும், மக்களின் மனத்தில் நிலைத்திருப்பது இவரது அன்புருவந்தான். அருள் தங்கிய வேந்தர்.

**மணி** : வருந்திப் பயனென்ன? 'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும். பிறப்பு' அறியாமை இல்லாவிட்டால் நாட்டு மக்கள் எல்லோருமே இந்நாட்டு மன்னர்கள்தாம். உழைப்பும் உறுதியும் பெருகினால் இந்த உலகிலேயே நம்நாடு உயர்பெற்று விளங்கும். பொய்மைக்குப் பணியாத வாய்மையும், புரட்டுக்கு அஞ்சாத ஆண்மையும் இருந்தால் இந்நாட்டு மக்கள் இணையற்ற வீரர்களாவார்கள்.

**சுகதே** : நண்பரே! தங்களுக்கு அரசியல் ஞானமும் நன்கமைந்துள்ளது.

**மணி** : மன்னியுங்கள். உணர்ச்சியில் ஏதேனும் உளறியிருப்பேன்.

**சுகதே** : உண்மையிற் கூறுகிறேன். வெறும் புகழ்ச்சியல்ல; தங்களது முதிர்ந்த அறிவின் எழுச்சியைத் தங்கள் நாடகங்களிலே காணுகின்றேன்.

**மணி** : நாடகத்தின் பெருமைக்கு நான் மட்டும் காரணமல்ல. அதை எழுதிய அமர கவிஞருக்கும், உடன் ஒத்துழைக்கும் ஏழைச் சோதரர்களுக்குமேதான் முழுப்பெருமையும்.

**சுகதே** : எப்போதும் ஆடும் மயிலுக்கு அதன் அழகு தெரிவதில்லை.

**கனி** : அதே போல்தான் பேசும் நண்பர்களுக்கும் பசியின் அருமை தெரிவதில்லை. ஏன் அண்ணா, வந்தவர்களை மெதுவாகப் பேசியே அனுப்பி விடலாமென்று எண்ணினீர்களா? வாருங்கள், உணவருந்திய பிறகு பேசலாம்!

**சுகதே** : ஓகோ! அவர்களுக்கென்று சிறப்பாக நீயல்லவா சிரமப்பட்டுச் சமைத்திருக்கிறாய்... வாருங்கள்... உணவு கொள்வோம்.

**மணி** : இப்போது பசியில்லை...

**சுகதே** : சரி, பசித்தபோது புசிப்போம். ஒரு வேண்டுகோள். தாங்கள் வரலாற்று நாடகங்களையே அதிகமாக நடத்தவேண்டும். எடுத்ததற்கெல்லாம் மக்கள் கற்பனை வாழ்வையே நம்பி, கண் காணும் வாழ்க்கையை உதாசீனப்படுத்துகிறார்கள். மக்கள் வரவரச் சோம்பேறிகளாகி வருகிறார்கள். அவர்களுக்கு சுவர்க்கம், நரகம் முதலிய கற்பனைகளைச் சொல்லிக் காட்டுவதைவிடச் சேவையின் தலை வாசலைத் தெளிவு படுத்திக் காட்ட வேண்டும்.

**மணி** : தங்கள் கருத்தை அப்படியே ஒப்புக் கொள்கிறேன். பழைய நூல்களைக் கருவியாக வைத்துக் கொண்டு மக்களின் மனத்திலே பல தூய எண்ணங்களை வெகு எளிதாகப் புகட்ட வழியிருக்கிறது. புதிய நாடகங்கள் பலவற்றையும் நடத்த முயல்கிறேன்.

**சுகதே** : ஆமாம். நாடகத்தில் புதுமைக் கருதுக்கள் பழம் புலமையுடன் விளக்கப்பட வேண்டும்.

**கனி** : 'கனவு' என்ற அந்த நாடகத்தை எழுதிய ஆசிரியர் யார்?

**மணி** : அப்புண்ணியாத்மாவை நேரில் பார்த்ததில்லை.

**சுகதே** : ஏன், தேடிப் பார்க்கவில்லையா?

**கனி** : இல்லாத மனிதரை எங்கே சென்று தேடுவது?

**சுகதே** : ஆசிரியர் இவர்தான் என்று எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

**மணி** : அந்த நாடக ஏட்டின் முடிவில் 'கவி அமரன்' 'அகண்ட உலகம்' என்று எழுதப்பட்டிருந்தது.

**சுகதே** : அதுவும் புனைபெயர்தான் போலிருக்கிறது.

**மணி** : ஆமாம். அப்படித்தான் தோன்றுகிறது.

**சுகதே** : அந்த ஆசிரியர் எங்கிருப்பினுமென்ன! அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அழியா வரம் பெற்ற அறிவின் சுடர்கள்! ஆமாம், இந்தச் சிந்தனையாளர்கள், கவிஞர்கள் இவர்களுக் கெல்லாம் எப்போதுமே ஆயுள் குறைவுதானோ!

**மணி** : ஆமாம்! அமைதியற்ற இந்த அநித்திய உலகிலே ஆயுளை நீட்டிக்கொள்ள அவர்கள் விரும்புவ தில்லை! மேலும், ஓயாது சிந்தித்து உள்ளத்தை எரிமலையாக்கிக் கொண்டு அதற்கு அவர்களே இரையாகி விடுகிறார்கள். அறிஞர்கள் விளக்கைப் போன்றவர்கள். உலகுக்கு வெளிச்சம் காட்ட அவர்கள் உள்ளத்தையும், உடலையும் எரித்துக் கொண்டு மடிகிறார்கள்.

**சுகதே** : உங்கள் சொந்த ஊர்?

**மணி** : நாங்கள் அனாதைகள். தாய் தந்தை எல்லோரும் நாங்கள் குழந்தையாய் இருக்கும்பொழுதே காலமாகி விட்டார்கள், நானும் என் தங்கையும் ஒரு ஏழை நாடோடிப் பாடகரால் வளர்க்கப் பட்டோம். அவரிடம் எங்கள் தாய் தந்தையர் யாரென்று கேட்டோம். காலம் வரும்போது சொல்லுகிறேன் என்றார். ஆனால், சொல்லா

மலே காலமாகி விட்டார். பெற்ற தாய் தந்தையும் இல்லை, உற்ற தாய் தந்தையும் இல்லை. உலகமே எம் தாய் தந்தை, என்ன செய்வது? நாங்கள் அனாதைகள் அய்யா...! *(கண் கலங்குதல்)*

**சுகதே** : நண்பரே! மன்னிக்க வேண்டும் வேண்டாத கேள்விகளைக் கேட்டுவிட்டேன். உங்கள் உள்ளத்தில் மறைந்திருந்த துயர உணர்ச்சியைத் தூண்டி விட்ட குற்றத்தைச் செய்து விட்டேன். இதைப் பற்றி நான் கேட்டிருக்கவே கூடாது. இனி நீங்கள் அனாதைகள் அல்ல. நாட்டின் கலைஞர்கள் - சேனாதிபதி சுகதேவனின் நண்பர்கள்.

**மணி** : ஆமாம், அன்று நாடகம் முடிவதற்குள் அரசியும் அரசரும் ஏன் அண்ணா எழுந்து போய் விட்டார்கள்?

**சுகதே** : ஏதேனும் அவசர அலுவல் இருந்திருக்கலாம். மேலும், அவர் இருந்து நாடக முழுவதையும் பார்த்திருந்தால்கூட அதில் போரைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் விளக்கியிருந்த பகுதிகள் அவருக்குப் பிடித்திருக்காது.

**மணி** : ஏன், வேந்தர்க்கும் வீரத்திற்கும் வெகு தூரமோ?

**சுகதே** : அவர் நல்லவர்தான். அவரது நல்வாழ்வுக்கு இடையூறு செய்ய சர்வாதிகாரி ஒருவர் இருக்கிறார். வேந்தர் முன்னேற்றத்திற்கு அவர் ஒரு பெரும் முட்டுக்கட்டை. முரட்டு ஜென்மம். அநியாய சூரன்; அறிவிலே பெரியவன்... ஆனால், அவ்வளவும் விஷம். இதயமற்றவன்,

*(ஒரு சேவகன் நுழைந்து வணங்குதல்)*

**சுகதே** : என்ன?

**சேவகன்** : கலைஞர் மணிவண்ணரை, அரச அவைக்கு அழைத்து வரும்படி வேந்தர் ஆணை அனுப்பியுள்ளார்.

**சுகதே** : *ஆம்... மறந்து விட்டேன்! சேனாதிபதியே அழைத்து வருவதாகக் கூறு! (சேவகன் போகிறான்)*

**கனி** : *எதற்காக அண்ணா அழைத்திருக்கிறார்?*

**சுகதே** : அவையிலேயே பாராட்ட விரும்புகிறார்கள் போலிருக்கிறது. *அரசி ஊர்வசி,* தனிவாழ்வில் எப்படி இருப்பினும் கொஞ்சம் நல்ல கலா *ரசனையுள்ளவர்.*

**மணி** : நாடகத்தில் தவறு ஏதேனும் கண்டிருப்பாரோ.

**சுகதே** : அவ்வளவு திறமை அவருக்கு இல்லை.

**சாந்தி** : அண்ணா அப்படி ஒருவேளை *தங்களை அரசர்* குற்றவாளியாக்கி விட்டால்...?

**மணி** : எந்நாளும் காக்கும் இறைவன் துணையிருக்கி *றான் அம்மா!*

**கனி** : சாந்தி! எங்கள் அண்ணா உடன் போகிறார்!

**சுகதே** : ஆமாம். அஞ்ச வேண்டிய அவசியமில்லை. சரி, உணவருந்தியவுடன் பிறகு புறப்படுவோம்.

*(உள்ளே செல்லல்)*

**(காட்சி 11 முடிவு)**

## காட்சி - 12

**இடம் : அரண்மனை மண்டபம்**

**காலம் : முற்பகல்**

*(இராணி, ஊர்வசி, வீரசிம்மன், சர்வாதிகாரி, அதிகாரிகள்)*

*(அனைவரும் அமர்ந்திருத்தல். வீரர்கள் அரச வணக்கம் கூறியபின்)*

---

**வீரசி** : *எங்கே சேனாதிபதி?*

**சர்வா** : *அவர் எப்பொழுதும் தாமதமாகத்தான் வருவார். ஏனென்றால், தாங்க முடியாத பெரும் பதவிகளை எல்லாம் வேண்டுமென்றே ஏற்பவரல்லவா?*

*(சுகதேவன் மணிவண்ணனோடு வந்து, அரசனை வணங்கியபின் தனது இருப்பிடத்தில் அமர, மணிவண்ணன் வணங்குகிறான்)*

**வீரசி** : *வருக கலைமணியே, அமருக! துணைவர்களே பெருங்குடி மக்களே! நமது நகரிலே அழகிய பல நாடகங்களைக் கலையின்பத்துடன் நடத்தி வரும் இக்கலைஞரை நமது ஆத்தானக் கலைஞராக்கவும், அவருக்குக் 'கலைமணி' என்ற பட்டத்தைச் சூட்டவும் இசைந்துள்ளோம், அவையோர் எண்ணமென்ன?*

**எல்லோரும்** : *அவ்வாறே செய்வோம். வாழ்க கலைமணி (மூன்று முறை)*

**வீரசி** : *கலைமணியே உமது வரவு நல்வரவாகட்டும்... அமருங்கள், அன்று தங்களைக் கண்டதிலிருந்து உம்மோடு உரையாட வேண்டுமென்ற ஆவல்*

எனக்குண்டு. நான் தங்களைச் சில கேள்விகள் கேட்கலாமோ?

**மணி** : மன்னர் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற விடையைத் தரும் ஆற்றலை இறைவன் தந்தருள் வானாக!

**வீரசி** : தங்கள் பெயர்?

**மணி** : மணிவண்ணன்.

**வீரசி** : பிறப்பிடம்?

**மணி** : அறியேன்.

**வீரசி** : பெற்றோர்?

**மணி** : அனாதை.

**வீரசி** : தொழில்?

**மணி** : கலைத்தொண்டு.

**வீரசி** : இதற்குமுன்?

**மணி** : நாடோடி.

**வீரசி** : உடனிருப்பவர்?

**மணி** : தெருப்பாடகர்கள்.

**வீரசி** : உறவினர் உண்டா?

**மணி** : ஒரே ஒரு தங்கை.

**வீரசி** : பெயர்?

**மணி** : சாந்தி.

**வீரசி** : நீங்கள் நடத்திய 'கனவு' என்ற நாடகத்தின் இலக்கிய கர்த்தா யார்?

**மணி** : அப்புண்ணியாத்மாவை நேரிற் கண்டறியோம்.

**வீரசி** : காவியத்தைப் பெற்ற விதம்?

**மணி** : கஞ்சியடுப்புக்குக் கரியாக்கிக் கொண்டிருந்த ஒரு ஏழை உழவர் தந்தது.

**வீரசி** : தாங்கள் கலாசாலையில் பயின்றதுண்டா?

**மணி** : பார்த்ததுகூட இல்லை, மன்னவா?

**வீரசி** : ஏன், பார்க்க அவகாசமில்லையா?

**மணி** : ஏழைகளின் கண்ணுக்கு எட்டாத கட்டிட மல்லவா, கலாசாலை?

**வீரசி** : கலைஞானியாயிருந்தும் கல்லூரியை விரும்பாதது ஏன்?

**மணி** : பணமற்ற எளியவரை அது ஏற்றுக் கொள்வ தில்லையே.

**வீரசி** : உம்.. நாட்டின் ராணி, கலைவாணி உம்மைச் சில கேள்விகள் கேட்கப் பிரியப்படுகிறாள்...

**மணி** : விடை கூற முடிந்ததற்குப் பதில் கூறத் தயங்க மாட்டேன்.

**ஊர்வ** : தாம் கலாசாலையில் பயிலவில்லை என்று கூறுவது உண்மைதானா?

**மணி** : எதற்கும் எங்கும் நான் பொய் கூறப் போவ தில்லை. தாயே, வாய்மையே எமதுயிர் - உண்மையே எமதுடல்,

**ஊர்வ** : உங்கள் திறமையைப் பார்த்தால் கல்லூரியில் பட்டம் பெற்ற புலவர் போலக் காணுகின்றதே.

**மணி** : மானிடர்க்கு இயற்கையறிவு பிறப்பிலேயே உண்டு.

**ஊர்வ** : மறுக்கவில்லை. என்றாலும், அதை ஒளி பெறச் செய்வது கல்விச்சாலைதானே?

**மணி** : இந்த உலகமே ஒரு எல்லையற்ற கலாசாலை. இதில் நாம் சந்திக்கும் அனுபவங்களே நாம் கற்கும் பாட நூல்கள்.

**ஊர்வ** : *உம்மை ஒரு கலைமணி என்று புகழ்ந்து கொள்வதில் பெருமையடைகின்றீர் அல்லவா?*

**மணி** : *இல்லை. ஒரு கலைத்தொண்டன் என்று கூறிக் கொள்வதில் பக்தியடைகின்றேன், தாயே!*

**ஊர்வ** : *கலையை ஏன் வளர்க்க வேண்டும்?*

**மணி** : *காலத்திற்கு அழகு செய்வதால்!*

**ஊர்வ** : *நாடகம் என்றால் பொருள்?*

**மணி** : *நாகரிகத்தின் அளவுகோல்.*

**ஊர்வ** : *கேட்கத் தகாதது எது?*

**மணி** : *தகுதியற்ற கேள்வியும் தெளிவில்லாத விடையும்.*

**ஊர்வ** : *சகிக்க முடியாத வேதனை தருவது?*

**மணி** : *பச்சைக்குழந்தையின் அழுகையும், பத்தினிப் பெண்டிரின் சாபமும்.*

**ஊர்வ** : *இன்பந் தருவது?*

**மணி** : *குழந்தைகளின் மழலை மொழி.*

**ஊர்வ** : *குணங்களிற் சிறந்தது?*

**மணி** : *குன்றாத அன்பு!*

**ஊர்வ** : *அதற்குப் பொருள்?*

**மணி** : *அளவற்ற பெரும் பொருள்.*

**ஊர்வ** : *அதன் பிறப்பிடம்.*

**மணி** : *அன்னையின் இதயபீடம்.*

**ஊர்வ** : *அனாதை என்றீரே, அன்னையின் அன்பை எப்படி அறிந்தீர்?*

**மணி** : *அனாதைக்கு உலகெங்கும் அன்னையர்கள், தாயே!*

**ஊர்வ** : *தாங்கள் பரத நூல் இலக்கணங்களை எங்குக் கற்றீர்கள்?*

**மணி** : *பெரியோர்கள் அரும்பாடுபட்டுக் கோயில்களிற் செதுக்கிய சிற்பங்களிலிருந்தும், கண்ணியமுள்ள கலைஞர் உழைப்பிலிருந்தும்.*

**ஊர்வ** : *எவன் கொலையாளியை விடக் கொடியவன்?*

**மணி** : *சுயநலங்கொண்டு மித்திரபேதம் செய்யும் படு பாவி.*

**ஊர்வ** : *நெஞ்சைப் பிளப்பது?*

**மணி** : *நண்பனின் பிரிவு.*

**ஊர்வ** : *நட்பின் அழகு?*

**மணி** : *இடுக்கண் களைவது.*

**ஊர்வ** : *துயரத்தின் காரணம்?*

**மணி** : *பேராசை.*

**ஊர்வ** : *எதிர்க்க முடியாத சக்தி?*

**மணி** : *தாயின் வேண்டுகோள்.*

**ஊர்வ** : *இன்பத்திற் சிறந்தது?*

**மணி** : *அமைதி இன்பம்.*

**ஊர்வ** : *அதனினும் சிறந்தது?*

**மணி** : *பெற்ற தாயும் பிறந்த பொன்னோடும்.*

**ஊர்வ** : *என்றும் நிலையானது?*

**மணி** : *சத்தியந்தான் தாயே!*

**ஊர்வ** : *அழகான மொழிகளை அடுக்கடுக்காய்ப் பேசுகின்றீர்கள்!*

**மணி** : *நம் தாய்மொழிக்கே வாய்த்துள்ள தனிச் சலுகையம்மா அது.*

| | | |
|---|---|---|
| *சர்வா* | : | *வேதாந்த தத்துவ விசாரசாகரமென்றால் என்ன கலைஞனே?* |
| *மணி* | : | *அரசே! இவர் யார்? மகாராணியார்தான் கேள்வி கேட்க விரும்புவதாகக் கூறினீர்கள்!* |
| | | *(அவையில் சிரிப்பு)* |
| *ஊர்வ* | : | *பராவாயில்லை! அவரும் பெரிய கலாரசிகர். பதில் சொல்லலாம்.* |
| *சர்வா* | : | *யாமும் ஒரு சில கேட்போம்.* |
| *மணி* | : | *யாமும் பல பகர்வோம்!* |
| *சர்வா* | : | *பூவா உவப்பு; புதுச்சுவை செப்பு?* |
| *மணி* | : | *புரிந்தது இப்பூ; பூமியின் உப்பு!* |
| *சர்வா* | : | *புலமையின் களிப்பு?* |
| *மணி* | : | *இல்லை - பொறுமையின் வனப்பு.* |
| *சர்வா* | : | *பிறப்பு என்பது?* |
| *மணி* | : | *ஈருயிர்த் தொகுப்பு ஓருடல் நகைப்பு.* |
| *சர்வா* | : | *பூ காய்த்துவிட்டது? இனி கனிகள் கனியட்டும்! மதிக்கத்தக்கது?* |
| *மணி* | : | *மாசிலா வீரம்.* |
| *சர்வா* | : | *மகிழத்தக்கது?* |
| *மணி* | : | *மாதரின் தீரம்.* |
| *சர்வா* | : | *மறக்கத் தக்கது?* |
| *மணி* | : | *மடையரின் மதிப்பு.* |
| *சர்வா* | : | *வணங்கத்தக்கது?* |
| *மணி* | : | *உண்மை உழைப்பு.* |
| *சர்வா* | : | *வாங்கத் தக்கது?* |

**மணி** : நல்லோர் ஆசி.

**சர்வா** : வழங்கத்தக்கது?

**மணி** : வறுமையின் உதவி!

**சர்வா** : அஞ்சத்தக்கது?

**மணி** : வஞ்சனைக் கும்பல்.

**சர்வா** : ஒழிக்கத்தக்கது?

**மணி** : ஓயாப்பேச்சு.

**சர்வா** : வல்லமைமிக்கது?

**மணி** : இளமையின் உள்ளம்.

**சர்வா** : மன்னுயிர் காப்பாது?

**மணி** : மாண்புறு வாய்மை; ஆம்; பயிர்கட்குப் பருவ மழை; உயிர்கட்குச் சத்தியம் தேவை. நாட்டிலே நாணயம் தேவை!

**சர்வா** : குறுக்கத் தக்கது?

**மணி** : கோணல் புத்தி; குதர்க்கப்பேச்சு.

**சர்வா** : வெறுக்கத்தக்கது?

**மணி** : துரோகிகள் உறவு; துன்பக்காடு! நாடே காடானால் வீடே நரகானால், நாமெல்லாம் ஏன் வாழ்கிறோம்? எதற்காக வாழ்கிறோம்? என்றே தெரியவில்லை. நாடெங்கும் அலைந்தேன் - சிற்றூரெங்கும் சுற்றினேன். மக்களோடு பழகினேன். நான் கண்ட கசப்பான அனுபவங்கள். அடேயப்பா எத்தனை தலைவர்கள்! எத்தனை ஆயிரம் பேச்சு! அத்தனைக்கும் நடுவேதான் அழிவு ஆனந்த நடனம் ஆடுகிறது. நல்லது உறங்குகிறது. தீமை படமெடுத்தாடுகிறது. உழைப்பு ஒடுங்குகிறது. சோம்பல் சுகமடைகிறது. உண்மை அகால மரணமடைகிறது. பொய்மை பொன்விழா

கொண்டாடுகிறது. அறிவு அடங்குகிறது. அன்பு தேம்புகிறது. ஆற்றல் அழிகிறது. நமது ஆத்மாவே நடுங்கி தற்கொலை செய்து கொள்கிறது. இதெல்லாம் ஏன்...? ஏன்... ஏன்...?

**சர்வா** : ஏன் என்ற கேள்விக்கு இது இடமில்லை. நேரமு மில்லை. அவசியமுமில்லை.

**மணி** : கலைமணியே கலக்கம் வேண்டாம். அமைதி பெறுங்கள். ஏன் என்ற இக்கேள்வி இமயம் போல் எழுந்து நம்முன் நிற்கிறது. தக்க விடை கூறும் தகுதியை விரைவில் மக்கள் பெறுவார்கள்.

**சர்வா** : பாவம் ஒரு கலையுள்ளத்தைத் தளபதியார் அரசியலோடு உரசிப் பார்க்கிறார். தவளையின் குரலைத் தத்துவமாகப் பார்க்கிறார். பசியிலே ருசியைப் பார்க்கிறார் பாவம்! பாதி கிணறு தாண்டும் பருவம்!

**சுகதே** : காளைக்குக் கொம்பு சீவ வேண்டாம். யானைக்குச் சூடு போட வேண்டாம். எச்சரிக்கை!

**ஊர்வ** : சரி... சரி... அறிவு மலைகள் மோதினால், எரிமலை களாகி விடுகின்றன. அது நாட்டுக்கு ஆபத்து.

*(வீரசிம்மன் சிரிக்கிறான்)*

**சர்வா** : சிரிக்க வேண்டாம் வேந்தே! சிந்திக்க வேண்டிய கட்டம்!

**வீரசி** : சிரிப்பு! அது வாழ்வின் சிறப்பு! எரிப்பதை விடச் சிரிப்பது நல்லது. அடிகளே! ஏதோ பொழுது போக்குக்காகத் துவங்கிய வாக்குவாதம் திடீ ரென்று பட்டி மண்டபமாக மாறி விட்ட தற்கு வருந்துகிறோம் உம். நேரமாகி விட்டது. கலைமணியே, வரும் பிறந்த தின விழாவுக்குத் தங்களைச் சிறப்பு விருந்தினராக வரவேற்று அழைப்புக் கூறுகிறோம். மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**மணி** : அரண்மனை விருந்துக்கு அடியேன் ஏற்றவன் அல்லேன். எனினும் அன்பின் அழைப்புக்கு இசைகின்றேன்.

**வீரசி** : அவை கலையலாம். *(அனைவரும் போக) (சுகதேவனிடம்)* அமைச்சரே! வேறு ஏதேனும் அலுவல்கள் உள்ளனவா?

**சுகதே** : பிறந்த நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நமது சிறைக்கைதிகளில் பலரையும் விடுதலை செய்ய வேண்டிய ஏற்பாட்டை விரைவில் செய்ய வேண்டும்.

**வீரசி** : இன்று மாலை நாம் இதைப் பற்றி யோசிப்போம். வடக்குப் போர்முனையில் படைகளின் அணி வகுப்பைப் பார்வையிட்டீர்களா?

**சுகதே** : இனிமேல் அச்சமில்லை அரசே! இறுதி வெற்றி நமதே என்பதற்கு ஐயமே இல்லை. ஆனால், ஒன்று மட்டும் தாங்கள் கவனிக்க வேண்டும். யாராயிருப்பினும் என் நிர்வாகத்துக்குட்பட்ட வேலைகளில் பிறர் குறுக்கிடுவதை என்னால் பொறுக்க முடியாது அரசே!

**வீரசி** : நான் கவனிக்கிறேன். எல்லோரும் வெற்றி விழாவில் சந்திப்போம்...

*(சுகதேவன் மணிவண்ணனுடன் அனைவரும் போக)*

**வீரசி** : *(ஆத்திரமாக)* கடைசியில் நம் காரியம் முடியவில்லையே.

**சர்வா** : நாடகத்தை எழுதிய அக்கவியின் பெயர் என்ன சொன்னான்?

**வீரசி** : அமரன்.

**சர்வா** : நம் பாதாளச் சிறையில் கூட ஒரு கவிஞன் உள்ளான்.

**வீரசி** : அவன் பெயர்?

**சர்வா** : ஆனந்தன். சில ஆண்டுகட்குமுன் சிறை செய்யப் பட்ட புரட்சிக்கூட்டத் தலைவர்களில் இவனும் ஒருவன், பைத்தியம் பிடித்தவன். சமயம் பார்த்து அவனைத் தீர்த்து விட்டால்...?

**ஊர்வ** : கூடாது, அவனிடம் பல இரகசியங்கள் இருக் கின்றன! *(பெருமூச்சுடன்)* ஒரு காலத்தில் அந்தக் கவிஞன் எவ்வளவு நல்லவனாய் - அழகனாய் இருந்தான் தெரியுமா?

**சர்வா** : காலத்தின் கனவுகள் - கவலையின் கதைகளாகும். ராணி! வருங்காலம் உங்களை எதிர் கொண்ட ழைக்கிறது. கலக்கமற்ற புதுமெருகு நமது வரலாறு. அவனைச் சிறையினின்றும் விடுவிக்கவே கூடாது. இதற்குத்தான் சிறை நிர்வாகமும் என்னிடமே இருக்கட்டுமென்று முன்பே சொன்னது.

**வீரசி** : பார்த்துக் கொள்வோம்.

**ஊர்வ** : சுவாமி! அப்பேய்களை எப்போது துரத்தப் போகிறீர்கள்.

**சர்வா** : நானிருக்கப் பயமேன்... நானே கடவுளின் தூதன்; அறிவின் ஆதவன், அமைதியின் தூதுவன் ஆத்திகத்தில் மாதவன்.

**(காட்சி 12 முடிவு)**

## காட்சி - 13

**இடம் : சிறை**

**காலம் : மாலை**

*(உதவி அமைச்சர் கருணாலயருடன் சுகதேவன் வருகிறான். பல கைதிகளை விடுதலை செய்து விடுகிறான். சில கைதிகளை நிபந்தனையின் பேரில் விடுதலை செய்கிறான். அவரவர்கள் மகிழ்வுடன் வெளியேறுகின்றனர்.)*

**சுகதே :** கருணாலயரே இங்கிருக்கும் கைதிகளை மிகவும் கண்ணியமாக நடத்தி வாருங்கள். அவ்வப்போது போர் முனைக்கு இங்கு நடக்கும் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டிருங்கள். நாளை மாலை நான் எல்லைப் போர் முனைக்குப் புறப்படுவ தாகத் திட்டமிட்டிருக்கிறேன்.

**கருணா :** தங்கள் சகோதரியார் கனிமொழி தேவியும் போர் முனைக்கு வருகிறார்கள் என்ற செய்தியே வருத்தத்தைக் கொடுக்கிறது.

**சுகதே :** அதைப் பற்றி ஏன் கவலை? இந்நாட்டில் பிறந்த பெண்களின் வீரச் சேவை, அவசியம் இச் சமயத்தில் நாட்டுக்குப் பயன்பட வேண்டும். மருத்துவப்படையின் பெரும்பகுதியைக் கனி மொழியே தலைமை கொண்டு நடத்த வேண்டும் என்பது என் கட்டளை. ஆருயிர் காக்கும் அறப் பணி! அன்னையர் திருப்பணி! அப்பணியைச் சரிவரச் செய்யும் ஆற்றல் என் தங்கைக்கு உண்டு.

**கரு :** தலைவரே! தங்கள் ஆணைகளைச் சிரமேற் கொண்டு அதற்கேற்ப நடப்பதே எமது கடமை.

*(கவிஞர் ஆனந்தர் வந்து பாட்டுப் பாடி ஆடுகிறார், கடைசியில்)*

**ஆன** : *வெள்ளை மயில் ஆடும், நீல மயில் அசையும், குயில் பாடும் கருடன் கழுகு முதலியவை சந்தோஷம் தாங்காது 'கை' என்று சத்தமிடும். வாணி! வாணி! சாந்தி!*

**சுகதே** : *கருணாலயரே, இவர் ஒரு கவிஞர்! தனிக் கவனத்துடன் காப்பாற்றப்பட வேண்டியவர்.*

**கரு** : *கட்டளை.*

**சுகதே** : *வருகிறேன். (போகிறான்)*

*(கவிஞர் மற்ற கைதிகளுடன் சேர்ந்து முன்னர் பாடிய அதே துயரப் பாடலைப் பாடுகிறார். அப்போது அரசு ஊர்வசி வருகிறாள்)*

**அரசு** : *கவிஞர் திலகமே! கலைகளின் களஞ்சியமே! என்னை நன்றாகப் பாருங்கள்! என்னைக் கூடவா தங்களுக்கு அடையாளம் தெரியவில்லை. நன்றாக எண்ணிப் பாருங்கள். நான் தான் உங்கள் ஊர்வசி, நான் கூறிய யோசனையைக் கேட்டிருந் தால் உங்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக் காது. அரண்மனை சுகபோகத்தில் அகில மகாகவி ஆகியிருக்கலாம்*

*(அமாவாசை இருட்டிலே அரைகுறையாக ஆடும் நிழல்களைப் போலக் கவிஞனின் உள் மனதில் கடந்தகால நிகழ்ச்சிகள் தோன்றி மறைகின்றன. உள் நாடகத்தில் நடிக்கப்பட்ட படகு கவிழும் காட்சியைத் திரும்பவும் காட்டலாம். உருவெளிக் காட்சி மறைந்ததும் பாடுகிறார்)*

**ஆன :**

**படைவீரப் பட்டாளம் பாய்ச்சிய ஈட்டிகள்**
**பாய்ந்ததென் நெஞ்சிலம்மா! - எந்தன்**
**பச்சைக் கிளிகளை பத்தினி தன்னையும்**
**பழிவாங்கி விட்டதம்மா - சூழ்ச்சி**
**பழிவாங்கி விட்டதம்மா - ஆட்சி**
**பட்டயம் தீட்டுதம்மா!**

கடிவாளம் இல்லாத காட்டுக் குதிரைக்குக்
கலைஞானம் தெரியாதம்மா - அது
காலால் உதைக்குமம்மா
அடையாளம் தெரியாது அறிவும் புரியாது
ஆண்டிக் கடிமையம்மா - இன்பம்
வேண்டிக்கிடக்குதம்மா - குழி
தோண்டிக் கனைக்குதம்மா.
வெள்ளைமயில் ஆடும் பிள்ளைக்குயில் பாடும்
கிள்ளையும் பேசுதம்மா - என்உள்ளம்
குளிருமம்மா அந்தப் பிள்ளைகளும்
இல்லை பேருலகம் இல்லை பித்தர்
பித்தர் உலகம் அம்மா - இதுமிக
எத்தர் உலகம் அம்மா.

**பேசுகிறார்:** *ஆம். வெள்ளை மயில் ஆடும். பச்சை மயில் அசையும். நீலமயில் ஓடும். குயில் பாடும், கிளி பேசும். கருடன் - கழுகு முதலானவை சந்தோஷம் தாங்காது 'கை' என்று சப்தமிடும். சாந்தி...*

**ஊர்வ** : *...அந்த கனவு என்னும் நாடகம்...?*

**கவி** : *(பலமாகச் சிரித்து) ஆ... நாடகம்... நாடகம்... நாட்டின் அகம்... நாடகம் - நாடகமே உலகம். நாளை நடப்பதை யாரறிவார். ஒரு நாடகமே உலகம். ஆ... வாணி... சாந்தி... மணிவண்ணா.*

*(என்று கூறி கவிஞர் மயங்கிவிழ மெதுவாக அரசி ஊர்வசி சிறையிலிருந்து போக முயற்சிக்க மேடையின் ஒளி மங்குகிறது)*

(காட்சி 13 முடிவு)

# காட்சி - 14

**இடம் : சோலை**

**காலம் : பின் மாலை**

**சீர்வா :** அகிலமெல்லாம் போர். மண்ணாசைக்காக ஓயாத சண்டை... அரண்மனையிலே பொன்னாசைக்காக சண்டை! *(உற்று நோக்கி)* அதோ, அவள் வருகிறாள் போலிருக்கிறதே சிந்தனை செய்வது போல் இருந்து காரியத்தைச் சாதிப்போம்.

*(கண்மூடி அமருகிறான். கண்டாகர்ணன் சந்தனக் கிண்ணத்தோடு)*

**கண்டா :** அடாடா! சந்தனம் கொண்டு வர்ரத்துக்குள்ளே சாமி சமாதி ஆயிட்டாரோ! சரி! கிளியைத் துரத்துவது போலச் சத்தம் போட்டா இளவரசி வாரதாக நெனச்சிட்டு எழுந்திடுவாரு... சோ.... சோ...

*(பெண் குரல் நடிக்கவும்)*

**சர்வா :** *(இளவரசியே என எண்ணி, விழித்து, ஏமாந்து வெகுண்டு)* நீயா காட்டெருமையே!

*(உதைத்துத் தள்ள)*

**கண்டா :** அண்ணலே! கோவிச்சுக்காதிங்க. பன்னீர் பீப் பாயை உடைக்க நேரமாயிட்டுதுங்க! சந்தனம் பூசட்டுங்களா?

**சர்வா :** சரி... சரி... பூசு. சூடு தீரப் பூசு *(இளவரசி மேனகா வர)* அடே கண்டா கர்ணா... நீ... போகலாம். இளவரசி, நீ நின்றால் என் கால்கள் வலிக் கின்றன. உட்கார்.

மேன : *நேற்றுத் தங்களைக் காண முடியவில்லையே?*

*சர்வா* : *அரசியற் பணிகள் மிகுந்துவிட்டன. நமது இன்பம் நீடிக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாயா?*

மேன : *அதில் சந்தேகமென்ன? நமதன்புதான் பயன் தரவும் தொடங்கி விட்டதே!*

*சர்வா* : *அப்படியானால் நான் சொல்வதைக் கேட்டுத் தான் ஆகவேண்டும்.*

மேன : *சொல்லுங்களேன். மரகதத் தீவிலுள்ள வசந்த மாளிகைக்குப் போக இரவே கப்பலேற வேண்டுமா?*

*சர்வா* : *அதல்ல நான் சொல்லப்போவது, கவனமாகக் கேள்! நமது கனி வனத்திலே கடந்த சில மாதங் களாக உன் தந்தையின் பாதுகாப்பில் வாழ்ந்து வரும் நடிகனைப் பார்த்திருக்கிறாயல்லவா?*

மேன : *யார்? ஓ அவனா? கலைமணி மணிவண்ணன் தானே?*

*சர்வா* : *ஆமாம். அவனைத்தான் சொல்லுகிறேன்.*

மேன : *அவன் தங்கைகூட ஒரு பெண் - சாந்தி என்ற பெயருடன் திரிந்துகொண்டே இருப்பாளே...*

*சர்வா* : *ஆமாம். அந்த நடிகன் இப்பொழுது வெளி யேறித் தன்னுடைய நாடகத்தைத் தொடர்ந்து நடத்தத் துடிக்கிறான். நாம் அதைத் தடுக்க வேண்டும்.*

மேன : *கலைமணி என்ற பட்டங்கொடுத்துமா ஓடப் பார்க்கிறார்கள். பாவம்! பாடும் குயில்கள் பறத்து போகட்டுமே.*

*ர்வா* : *நீ கலை ரசனையோடு பேசுகிறாய்! அவன் வெளி யேறினால் அதனால் நமக்கு ஏக இடையூறுகள் பெருகிவிடும். ஆதலால், நீ அவனைத் தற்காலிக மாக மணம் புரிந்துகொள்ள வேண்டும்.*

**மேன** : *ஐயோ! அதெப்படி? அப்படியானால் நமது காதல்!*

**சர்வா** : *காதலோ காக்கையோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ அவனை மணம் புரிந்துதான் ஆக வேண்டும்! அதுவே உனக்கு இப்போது எனது புதிய உபதேச மந்திரம். அரசியல் தந்திரம்.*

**மேன** : *போங்க சாமி, மந்திர தந்திர மாயஜாலம் எல்லாம் எனக்குச் சொல்லித் தரேன்னு ஏமாத்து நீங்க.... சொல்லிக் கொடுங்க.*

**சர்வா** : *உம் சொல்லித் தருகிறேன் கண்ணே! ஆயிரமா யிரம் மந்திரங்கள் சேர்ந்தாலும் உன் அரைக்கண் வீச்சுக்கு இணையாகுமா? உடனே புறப்படு. மணிவண்ணனைப் பார். வெண்ணெய் உருகுகிற மாதிரி என் உள்ளம் உருகுதுன்னு சொல்லு! கூச்சப்படுவது போல் நடி.*

**மேன** : *ஐயோ! எனக்கு நடிக்கத் தெரியாதுங்க.*

**சர்வா** : *நான் கற்றுத் தருகிறேன். நான் நடிப்பது போல் நடி. மந்திரம் கற்க வேண்டுமானால் முதல் படி நடிப்பு! இது பின்னால்தான் புரியும் உனக்கு. நீ என் சொற்படி நடக்காவிட்டால் கஷ்டம். வந்து விடும். நான் சொல்கிறபடி நடந்தால் இந்நாட்டு அரசியல் வரலாற்றில் உன் பெயர் புகழ் பெறும்; பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும்.*

**மேன** : *எனக்குப் புகழ் வருங்களா, சாமி?*

**சர்வா** : *ஆம் நீ தான் நாட்டின் ராணி என்று ஒவ்வொரு வீட்டிலும் ஆணி அடித்து உன் படத்தை மாட்டச் செய்வேன்.*

**மேன** : *அப்படின்னா சரிங்க, சாமி, எது வேண்டுமானா லும் செய்யறேன். புகழ் வந்தா போதும்.*

**சர்வா** : *சபாஷ் சங்கித மோகினியாய் இருந்தாய். இன்று சமயசஞ்சீவி என்ற பட்டத்தை உனக்கு நான்*

சூட்டுகிறேன். உலகுக்கு அவன்! உன் உள்ளத்திற்கு நான். காட்சிக்கு அவன்! காரியத்துக்கு நான். நமதின்ப நாடகம் தொடர்ந்து நடைபெறும். சரி, போ, நிற்காதே, அவனுக்குள்ள பொதுஜனச் செல்வாக்கை உன் அந்தப்புரக் கட்டிலின் கால்களில் கட்டிவைக்கப் போகிறேன்! என் சதுரங்கத்தின் வெட்டுக்காயாக்கி விட்டேன். இந்தத் திட்டமும் வென்றது. இந்திரப்பட்டம் நிச்சயம். மகாகாளி சச்சிதானந்தம்.

**மேன** : சாமி நீங்களும் ஏதோ கடபுடன்னு பேசிட்டீங்க! நானும் தலையாட்டி விட்டேன். ஆனால், அவன்...

**சர்வா** : அவன் என் மந்திரப் பொம்மை! சம்மதிப்பான். அதெல்லாம் என் பொறுப்பு நீ மணிவண்ணனிடம் செல்! கலைமயமான அவன். ஒளிமயமான உன்னில் லயமயமாகிப் பின்னர் ரசமயமாகி விடுவான். பிறகு பார்த்துக்கொள்வோம். என்ன செய்வது? அரசியல் சூதாட்டத்தில் அந்தப்புர அழகிகளின் உதவி அவசியம் தேவைப்படுகிறது. இதைப் போன்ற கட்டங்கள் இல்லாவிடில் சரித்திரப் பாடம் சாரமற்றதாகி விடுகிறது. ஆகவே, வரலாற்றின் வருங்கால வாழ்வை முன்னிட்டு நடக்கட்டும்! ரசமான காட்சிகள் தொடரட்டும்! சதாசிவம்! சச்சிதானந்தம்!

**(காட்சி 14 முடிவு)**

# காட்சி - 15

**இடம் : கனிவன மாளிகை**

**காலம் : நள்ளிரவு**

**பாத்திரங்கள் : கலைமணி, மணிவண்ணன் இருப்பிடம்**

*(மணிவண்ணன் சோகமாகத் தனது வினோதமான வாழ்க்கை மாற்றத்தைக் குறித்துச் சிந்திக்கிறான். முடிவொன்றும் தோன்றாமல் துயரப்பாட்டுடன் உலவுகிறான். இளவரசி மேனகா, மையல் வெட்டும் கண்களுடனும் திராட்சை ரசத்தையுண்ட மயக்கத்துடனும் வந்து)*

**மேன :** நாட்டின் கலைமணியே! வணங்குகின்றேன்.

**மணி :** அம்மா! நீங்கள் நாட்டின் இளவரசி. வேந்தரின் புதல்வி, நானோ, ஏழை நாடோடி வணங்குதல் முறையல்ல.

**மேன :** ஆம்; தாங்கள் நாடோடிதான். நாடு தங்களை நோக்கி ஓடோடி வருவதால் தாங்கள் நாடோடி என்பதை ஒப்புக்கொள்கிறேன். உலகம் புகழும் ஒரு கலைஞரை வணங்குகின்றேன்.

**மணி :** இங்கு ஏது வந்தது இவ்வேளையில்?

**மேன :** இங்குக் காற்று மிக நன்றாக வீசுகிறது.

**மணி :** எங்குமுள்ள காற்றுத்தான் இங்குமிருக்கிறது.

**மேன :** சில இதுகள் இடத்திற்கேற்றவாறு மாறுவது இயற்கையல்லவா!

**மணி :** மாற்றம் காண்பதற்கு மனந்தான் காரணம்.

**மேன :** நல்லாச் சொன்னீங்க. அதனால் புதுமையை நாடி வந்த என்னைக் குற்றவாளியாக்கக் கூடாதல்லவா!

**மணி** : *அரசகுமாரியின் செயலில் ஒரு போதும் குற்றம் நேரக் கூடாது.*

**மேன** : *வருங்கால ராணின்னு சொல்லுங்ன்னா!*

**மணி** : *வந்த செய்தி.*

**மேன** : *நான் தினமும் ஒரு புதுமையை நாடி இங்கு வந்து கொண்டே இருக்கிறேன். ஆனால், அது விலகிப் போய்க்கொண்டிருக்கிறது. (நெருங்கிப் பேசுகிறாள்)*

**மணி** : *என் தங்கை சாந்திக்கு உடல்நிலை சரியில்லை. நான் போக வேண்டும்.*

**மேன** : *உடம்பு சரியாயில்லையா! என் மதனியாருக்குச் சுகவீனமா! ஐயையோ! ஏன்? என்ன, எப்படி, எப்போது, எதனால்? அரண்மனை வைத்தியர் ஆயிரம் பேர் இருக்க என் அண்ணிக்கு ஆபத்து வரலாமா? நான் போய் அழைத்து வரவா?*

**மணி** : *வேண்டாம். இந்தப் பாழும் அரண்மனை வாசம் எங்கள் அமைதியையே கெடுத்துவிட்டது.*

**மேன** : *என்ன? கனக மாளிகை போன்ற இந்தக் கட்டிடமா பிடிக்கவில்லை?*

**மணி** : *சிறையின் சுவர்கள் இரத்தினக் கற்களால் இழைக்கப்பட்டிருக்கிறதென்று கைதிகள் இரத்தின விழாக் கொண்டாட முடியுமா?*

**மேன** : *நீங்கள் இங்கு கைதியைப் போலவா இருக்கி றீர்கள்? விரும்பும் போது விடுதலை பெறலாம்.*

**மணி** : *இல்லை. அரசர் எம்மை விடுவிப்பதாக தெரிய வில்லை.*

**மேன** : *ஆமாம். உங்களைத் தனியாகவிட அவருக்கு விருப்பமில்லை. அழகான ஒரு துணைவியுடன் தான் அனுப்ப எண்ணம். (தன்னையே சுட்டிக் காட்டி)*

**மணி** : *தங்கள் பேச்சில் நேர்மை வேண்டும்.*

**மேன** : *நேர்மை மட்டுமல்ல உங்களோடு பேச, புத்திக் கூர்மையும் வேண்டும்.*

**மணி** : *பாவம்! ஏதோ புரியாத பேச்சுக்கள்! பெருமூச்சின் ஏக்கங்கள்.*

**மேன** : *புரியாத பேச்சில்தான் சலியாத இன்பம் இருக்கும்.*

**மணி** : *நிலைக்காத வானவில் வளைவுகள்!*

**மேன** : *சபாஷ்! நல்லாச் சொன்னீங்க! வளையாத உடலுக்கு வடிவழகு கிடையாது, நாணற் பள்ளி யில் நாட்டியம் பயின்றவள் நான்! தென்றலில் அசைவேன்! தேவதை போல் இசைப்பேன் புயலடித்தால் கூடப் பூப்பந்தாடுவேன்.*

**மணி** : *நாட்டியத்தை மட்டும் கற்றுப் பயனில்லை; நாணத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும். முடிந்தால் நாணயத்தையும் கற்க வேண்டும்.*

**மேன** : *நான் அழகாயிருக்கிறேனா?*

**மணி** : *கண்ணாடியைப் பார்த்தால் அது உன் அழகைப் பற்றி ஆயிரம் கதை சொல்லும்! அறுக்கும் ஒலி யில் சிரிக்கும் தாயே!*

**மேன** : *அந்த நிலைக்கண்ணாடியைக் காணத்தானே வந்திருக்கிறேன். களங்கமற்ற கலைக்கண்ணாடி நீங்கள்... நான்...*

**மணி** : *ஆனால், காற்றாடியின் உருவம் கண்ணாடியில் தெரியாதம்மா.*

**மேன** : *அறிவுக்கு அமைதி தர, இந்த அழகு ஆடக் கூடாதா?*

**மணி** : *அழகின் செருக்கு அழிவுக்கு வழிகாட்டிவிடும், அம்மா.*

**மேன** : *நிலையான வழி தேடி வந்தேன்.*

**மணி** : அதோ, நீ போக வேண்டிய வழி...

**மேன** : நான் கேட்பது அவ்வழியல்ல; என் செவ்விழி சொல்லுமே என் இதய மொழியை. நான் அழகி... தாங்கள் அழகர்.

**மணி** : புரிகிறது. நீயாகப் பேசவில்லை. யாரோ பேசக் கற்றுக் கொடுத்த பச்சைக்கிளி நீ... உன் அறிவின் திறமையை விரைவில் அரங்கேற்றம் செய்து விடலாம். அதுவரை பொறுத்திரு.

**மேன** : பொறுத்திருக்கச் சொல்லி என் கழுத்தை அறுத் தெரிக்கச் சொல்லுகிறீர்களா?

**மணி** : பெண்ணே! உன் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. உடலும் ஆடிக்கொண்டே இருக்கிறது. மன மயக்கமா? மது மயக்கமா?

**மேன** : மயக்கமில்லை; தயக்கமில்லாத ஏதோ ஒரு இயக்கம். அதோ, ஆற்றைப் பாருங்கள்! இரு கரைகளையும் அணைத்துச் செல்கிறது.

**மணி** : ஆறு வற்றிவிடும்! கரையும் கரைந்துவிடும்...

**மேன** : அதோ, இணைபிரியாத கவரிமான்கள்.

**மணி** : மானத்தோடு வாழ்கின்றன.

**மேன** : வெறுக்குந் துறவிபோல் பேசுகின்றீரே!

**மணி** : தகுதியற்றப் பொருளை வெறுப்பதே தர்மம்.

**மேன** : இதெல்லாம் தங்கள் நடிப்புத் திறமைதானே?

**மணி** : எனது நடிப்பு மேடையோடு நின்றுவிட்டது போ.

**மேன** : தங்கள் கலையின் திறமையிலே ஒரு பாசம், பரிவு, பக்தி, பிரியம், பைத்தியம் எல்லாம்.

**ணி** : என் கலையின் திறமை உங்கள் கண்ணின் எரிச்ச லிலே காணாமல் போய்விட்டது. போய் விடு.

*(உள்ளே போக முயல, இளவரசி குறுக்கிடுகிறாள். சற்றுப் பின்புறம் இக்காட்சியைச் சர்வாதிகாரி, வீரசிம்மனுக்குக் காட்டி, அவர்களிருவரும் உண்மையில் நேசிப்பதாகவும், அவர்கள் காதலை அனுமதிக்கும்படியும் நடிப்பால் கூறிச் செல்கிறான் மன்னன் முன்னால் வந்து)*

**வீரசி** : *கலைமணியே!*

**மணி** : வேந்தே! மன்னிக்க வேண்டும். மனத்தால் எண்ணவும் முடியாத இச்சம்பவத்துக்கு நான் காரணமல்ல.

**வீரசி** : *உங்கள் உள்ளன்பை இன்றே அறிந்தேன். இனி நீங்கள் தம்பதிகளாவதே என் இன்பம்.*

**மணி** : *அரசே! நான் உண்மையாக...*

**வீரசி** : கொண்ட அன்பைப் பாழாக்க மாட்டேன்...

**மணி** : வேந்தே! *தாங்கள்* உண்மையாகவா பேசுகிறீர்கள்?

**வீரசி** : இதில் விளையாடுவேனா?

**மணி** : முதலில் இந்த மாளிகை வாசமே பிடிக்கவில்லை.

**வீரசி** : மணமானதும், வேறு மாளிகை கட்டிவிடலாம். நான் வருகிறேன். ஏதாவது குறையேற்பட்டால் உடனே சொல்லியனுப்புங்கள்... மேனகா! வா - செல்வோம்.

*(தந்தையும், மகளும் செல்கிறார்கள்.)*

**மணி** : அடக் கடவுளே! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டு விட்டதே.

**கர்மேகன்** : *(அங்கு வந்து)* எசமான்! எசமான் இளவரசியம்மா இங்கு வந்தாங்களா...?

**மணி** : இல்லை இல்லை.

**கார்** : என்ன எசமான், பெரிய தொல்லை, எளவா இருக்குது! மகராசா இவ்வளவு நல்லா, அரண் மனை கோட்டை கோபுரமெல்லாம் கட்டிக் கொடுத்திருந்தும் இந்த இளவரசியம்மா, எப்போ பார்த்தாலும், குளம், குட்டை, புதர், பூச்செடி இதுகளிலேயே ஒளிஞ்சி விளையாடி எனக்குப் பெரிய தொல்லை தர்றாங்க; காலையிலே எழுந்திருச்சா - எங்கே இளவரசி! மாலையிலே என்னாடான்னா - எங்கே இளவரசி! சாமியாரு என்னாடான்னா பாடம் படிக்கணும்னு தேடறாரு - மகாராணி அலங்காரம் செய்யத் தேடறாங்க... தேடித் தேடி என் காலும் ஒஞ்சி போச்சு, போங்க எசமான். எப்போ பார்த்தாலும் ஒரு ஆம்பிள்ளைக்கு ஒரு பொம்பளையைத் தேடித் திரியறது தானா வேலை? வெளியே சொல்லவே வெக்கமாயிருக்குது. சொல்லாம யிருக்கவு முடியல்லே - இந்த வேலைக்குத்தான் அரண் மணையிலே சம்பளந் தர்ராங்க. போங்க எசமான் - ரசமில்லாத வேலை.

**மணி** : அப்பா, நீ தயவு செய்து போ...

**கார்** : எசமான்! நீங்க எதுக்காகங்க வருத்தப்படறீங்க? பொறுத்தது பொறுத்தீங்க. இன்னும் பத்து நாள் பொழுது பொறுத்துக்கோங்க. அப்புறம் உங்களுக்கும் எளவரசிக்கும் கலியாணமாயிடும். எனக்கும் தேட்ற உத்யோகமும் நின்னுடும் - சரிங்க, இதோ இப்படிப் போயிட்டு வர்ரேன். (போகிறான்)

*(மாளிகைச் சிறை வாசத்தாலும், கனிமொழியின் பிரிவாலும், கலைவாழ்வின் சீர்குலைவாலும் பெரிதும் பீடிக்கப்பட்ட சாந்தி நலிந்த உடல் நிலையுடன் வந்து)*

**சாந்தி** : அண்ணா! நாள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?

**மணி** : *ஏன் அம்மா இங்கு வந்தாய்? என்ன கேள்விப் பட்டாய்?*

**சாந்தி** : *இளவரசியை மணந்துகொள்ளத் தாங்கள் சம்மதித்து விட்டீர்களாமே. வேந்தரும் ஒப்புக் கொண்டாராமே.*

**மணி** : *சாந்தி! நீயுமா என் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்ட வேண்டும்.*

**சாந்தி** : *இளவரசியை மணந்துகொண்டு, அரண்மனையில் சுகமாயிருங்களண்ணா இந்த உயிரை மாய்த்துக் கொள்ளத்தானா வழியில்லை?*

**மணி** : *ஐயோ! சாந்தி! உன் அண்ணனை நீ அறிந்த அழகு இவ்வளவுதானா? உன்னைக் கேட்காமலா இசைவேன்?*

**சாந்தி** : *அண்ணா, அரசர் சொற்படி தாங்கள் இள வரசியை மணந்தால், போர்முனையிலிருக்கும் சேனாதிபதியும், கனிமொழியும் நம்மீது கொண்ட நம்பிக்கை என்ன ஆகும்? அந்நியப் படைகள் நாட்டை ஆக்கிரமிக்கும் இச்சமயத்தில், நமது உயிருக்குயிரான மக்கள், உயிரைத் துரும்பாக எண்ணிப் போர் புரிகையில் நமக் கேனண்ணா இந்த அரண்மனை வாசமும் அரச சம்பந்தமும்? விரைவில் இங்கிருந்து தப்பி ஓடி விடுவோம், அண்ணா!*

**மணி** : *திருடர்கள் போல் தப்பி ஓடலாமென்றாலும், சர்வாதிகாரியின் காவலர்கள் இராப்பகலாக ஓயாது காவல் புரிகிறார்கள். பார்க்கலாம்... நம்மால் ஆனவரை முயல்வோம்... காலவோட்டத் திலே விதியை எதிர்க்க முடியாமல் மிதந்து செல்லும் தண்ணீர்க் குமிழிகள் தானே நாம்.*

*(இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த)*

**கார்** : *எசமான்! உங்க நிலைமை ரொம்பப் பரிதாபமா இருக்குதுங்க, உங்களுக்கு ஏதாவது உதவி*

செய்ய முடியும்னு நெனைக்கிறேன். சொல்லுங்க. என்னடா பைத்தியம் மாதிரி இருக்கானேன்னு யோசிக்காதீங்க. காரியத்திலே இந்தக் கார்மேகன் பெரிய சூரன்.

**மணி** : அப்பா, சேனாதிபதி சுகதேவர் அவர்களைத் தெரியுமா?

**கார்** : என்னாங்க, இப்படிக் கேட்டுட்டிங்க? அவர் நம்ம கடவுளுங்க. கதாநாயகருங்க.

**மணி** : அவருக்கொரு கடிதம் தருகிறேன் - பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பாயா?

**கார்** : கொடுங்க உடனே. ஆனால், நான் திரும்பி வர்ரவரை நீங்க மட்டும் சாக்குரதையாயிருங்க.

**மணி** : சரி வா; தருகிறேன்.

*(கடிதம் எழுதிவர உள்ளே போக)*

**(காட்சி 15 முடிவு)**

## காட்சி - 16

இடம் : பாசறை - படை வீடுகள்

காலை : மாலை

*(வீரவுள்ளம் கொண்ட சுகதேவ் நேர் நின்ற எதிரிகளை எதிர்த்ததால் ஒருகை முறிந்துள்ளது. அதற்குப் போட்ட கட்டு அவிழ்க்காத நிலையில், மீதியுள்ள படை வீரர்களைத் துணை சேனாதிபதி உக்கிரசேனர் தலைமையில் துணிவுரை கூறி அனுப்புகிறான். வீரர் அணிவகுத்து நிற்கின்றனர். வெற்றிக்கனல் கொழிக்கும் விழியோடு, வீரச்சுடர் பரப்பும் மொழிகளைப் பொழிந்து நிற்கிறான்.)*

**சுகதே :** *நாட்டைக் காக்கும் நல்லன்பர்காள்! மந்திரத்தால் மாங்கனிகள் வீழ்வதில்லை! எதிரிகள் தந்திரத் தால் நம் வீரம் தளர்வதில்லை. உயிர் வெறுத்து வந்திருக்கும் வீரத்தின் தோழர்காள்! சொந்தத் தால் சில வார்த்தை சொல்லுகின்றேன், கேளுங் கள்! மலர்கள் தோன்றி மறைவது கண்டோம்! மக்களாய்ப் பிறந்தோம்! மடிவது திண்ணம்! தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடும் எதிரிகள் மாய்ந்திடும் வரை நாம் மறப்போம் சுகத்தை; மானமொன்றின்றி மாற்றார் கொடியில் ஈன முற்றிருக்க எவனோ விரும்புவான்? தாய், பிறன் கைப்படச் சகிப்பவனாகி, நாயென வாழ்வதை விழைவது நன்றோ! புன்புலால் யாக்கையைப் போற்றியே, தாய் நாட்டன்பிலா உயிரைத் துரும்பென எண்ணுமின்! அன்னையர் வந்து அழைப் பினும், அவர்தம் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடினும், போர்முனை இதனை விட்டகலாத பேற்றினை நீங்கள் பெரிதென எண்ணி இருப்பவர், என்னுடனிங்கு இருமின்!*

*வெற்றியே அன்றி வேறெதும் வேண்டேன் வெற்றிக்கீதத்தை வானளாவப் பகர்மின்...! பகைவ ரெனின் பாம்பெனப் பாய்மின்.*

*(வழிநடைப் பாட்டை உணர்ச்சியுடன் வானோங்கப் பாடி அணிவகுத்துச் செல் கின்றனர். அடுத்தபடியாகத் தலைநகரிலிருந்து கருணாலயர் வருகிறார்)*

**கருணா :** வாழ்க நம் சேவை!

**சுகதே :** வளர்க நம் வெற்றி! வருக கருணாலயரே! தலைநகரில் வேந்தரும் மற்றையோரும் நலந் தானே?

**கருணா :** இளஞ்சிங்கம் சேனாதிபதி அவர்களின் பாதுகாப் பிருக்கும் வரை நாட்டின் நலத்துக்கு யாதொரு குறையுமில்லை, அண்ணலே!

**சுகதே :** சிறை நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தியிருப்பீர் களென நம்புகிறேன்.

**கருணா :** தலைவரின் புகழைக் காப்பாற்றுவதே என் வாழ்வின் இலட்சியம். கைதிகளின் தண்டனை யைப் படிப்படியாகக் குறைத்தே வருகிறேன். சர்வாதிகாரி மேலும் மேலும் அரசரின் பெயரால் குற்றவாளிகளைத் தூக்குத் தண்டனை கொடுத்து அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்.

**சுகதே :** அப்படியா! நான் போர் முடித்துத் திரும்பி வரும்வரை மரண தண்டனைகளை நிறைவேற்ற வேண்டாம்... ஆமாம்! பித்தர் சிறை முகாமில் ஆனந்தர் என்ற பெயருடன் ஒரு கைதி அடை பட்டுக் கிடந்தாரே! அவருக்கு நான் கூறியபடி சிகிச்சை செய்து பார்த்தீர்களா? ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா அவர் நிலையில்?

**ணா :** மாறுதல் எதுவுமில்லை அடிக்கடி 'சாந்தி... சாந்தி' என்று கதறி அழுது அங்கலாய்க்கிறார்.

*'சாந்தி, ஒரு கனவுதானா' என்று அலறி விடுகிறார்.*

**சுகதே :** *அப்படியா கூறுகிறார்?*

**கருணா :** *ஆம்.*

**சுகதே :** *சரி, தலைநகருக்கு வந்ததும் கவனிப்போம். சர்வாதி காரியின் கொட்டம் சிறைக்குள் வந்திருக்கா தென்றே நினைக்கிறேன்.*

**கருணா :** *சிறைக்குள் வர அஞ்சுகிறான். ஆயினும் இப் போரில் தாங்கள் வெற்றி பெறாதிருக்க அவன் செய்யும் இடையூறுகள் மிக அதிகரித்து விட்டன.*

**சுகதே :** *இருக்கட்டும். அவ்வஞ்சக மிருகம் விரைவில் வீழ்வது உறுதி! வெளிப் பகையைவிட இந்த உட்பகையே வலிமை வாய்ந்தது. ஆமாம், அரண் மனையில் அடைபட்டுக் கிடந்தார்களே மணி வண்ணனும் அவர் தங்கையும்...*

**கருணா :** *அவர்களைப் பற்றித்தான் ஒரு துயரமான செய்தி.*

**சுகதே :** *என்ன, துயரமான செய்தியா!*

**கருணா :** *ஆமாம். அரசரின் ஆணைப்படி, பெருங்குடி சபையும் சம்மதிக்க, விரைவில் மணிவண்ணனுக் கும் இளவரசி மேனகாவுக்கும் திருமணம் ஏற்பாடாகி விட்டது. இதோ, அழைப்பிதழ் கொண்டு வந்துள்ளேன்.*

**சுகதே :** *(ஓலையைப் பார்த்து வருந்தி) அரசருக்குத் தான் அறிவு மழுங்கியிருந்தாலும், மணிவண்ணா! நீ சிறந்த கலைஞனல்லவா? உன்மீது முழு நம்பிக்கை யும் வைத்து, என் மனத்தில் இடம் தந்தமைக்கு நீ செய்த கைம்மாறு இதுதானா? கருணாலயரே! எதிர்பாராமல் கிடைத்த அரச வாழ்வை விடுவது எப்படி என்றெண்ணி அநியாயமாக ராஜகு*

மாரியின் மோக வலையில் வீழ்ந்துவிட்டான். பார்த்தீர்களா! ஆனால், இதெல்லாம் அந்தப் பரதேசி சர்வாதிகாரியின் மோச வலையென்பதை அவனுக்கு யார் அறிவிக்கப் போகிறார்கள்? உம்! சரி, தாங்கள் சென்று இளைப்பாறுங்கள். பிறகு சந்திப்போம்!

*(கருணாலயர் ஒருபுறம் போக, சுகதேவன் தன் பாசறைக்குள் இளைப்பாறச் செல்லல். மற்றொரு பாசறையிலிருந்து கனிமொழி கையில் சித்திரப் பலகையும், வண்ணத் தூரிகையுமேந்தி ஆடும் சிலையென வந்து)*

**கனி** : அண்ணா வரவர ரொம்ப நேரமாகத் தூங்கி விடுகிறார். பாவம்! அவரும் எத்தனை பணி கள்ளைத் தான் கவனிப்பது? சரி, இதுதான் சமயம். அவரது உருவத்தை எழுதி முடித்து விடுவோம்.

*(அன்புப் பாட்டுடன் மணிவண்ணன் - சாந்தி இருவர் உருவங்களையும் எழுதிப் பிறகு)*

**கனி** : சாந்தியின் முகம் நன்றாய் அமைந்துவிட்டது. மணிவண்ணருடைய முகம் சரியாக அமைய வில்லையே...! மஞ்சள் வண்ணம் அதிகமாகி விட்டதோ! கொஞ்சம் சிவப்பு கலக்கலாமா...? அப்பா...! அவர் முகம் தாமரை மலரைப் போலல்லவா இருக்கும்...

*(பின்புறம் வந்து நின்று பார்த்த சுகதேவன் இரக்கத்துடன்)*

**சுகதே** : கனிமொழி! இனி நீ எந்த வண்ணத்தைச் சேர்த் தாலும் மணிவண்ணனது உருவத்தை அழகு படுத்துவதென்பது இயலாத காரியமம்மா...

**கனி** : இல்லையண்ணா *(படத்தை மறைத்து நாண முடன்)* சாந்தியின் படத்தைத்தான் வரைந்தேன்!

பக்கத்தில் சும்மா அவர் படமும் இருக்கட்டுமே என்று எழுதிப் பார்த்தேன்.

**சுகதே** : உம்! என்ன செய்வது? உனது கபடமற்ற இந்த அன்பை அந்த நாடோடிகள் அறிய முடியாதபடி ஆண்டவன் செய்துவிட்டானே!

**கனி** : ஏன் அண்ணா! 'உன்னுடைய' என்று ஒருமையில் கூறுகின்றீர்கள். உங்களுக்கு மட்டும் அவர்கள் மேல் அன்பில்லையா?

**சுகதே** : ஒரு காலத்தில் இருந்தது உண்மைதான். ஆனால்...

**கனி** : அவர்கள் அரண்மனைக்குள் போனதிலிருந்து மறைந்துவிட்டதா?

**சுகதே** : இன்றுவரையில் நீடித்திருந்ததம்மா!

**கனி** : இனிமேல் அதை மாற்றிவிடப் போகிறீர்களா?

**சுகதே** : அடியோடு மறந்துவிடப் போகிறேன், கனி மொழி!

**கனி** : அவர்கள் செய்த அப்பேர்ப்பட்ட பெருங்குற்றம் என்னண்ணா?

**சுகதே** : *(கையிலிருந்து ஓலையைத் தந்து)* கனிமொழி! பொறுமையோடு படித்துப் பார்.

**கனி** : *(படிக்கிறாள்)* 'அழகுமணி நாட்டின் மகர குண்டல முடியரசும், சக்கரவர்த்தியுமான வீர சிம்மனின் புதல்வி இளவரசி மேனகா தேவிக்கும், நாட்டின் கலைமணி மணிவண்ணருக்கும், அடுத்து வரும் முழுமதி நாளில் திருமணம் நடத்தப் பெருங் குடிகள் அவை தீர்மானித்து விட்டது. அன்று தாங்களும் வந்து எமது அழைப்பைப் பெருமைப் படுத்த அழைக்கிறோம். இங்ஙனம் உங்கள் வேந்தன் வீரசிம்மன் - கலைவாணி ஊர்வசி 'சர்வாதிகாரி' *(பெருகி வரும் கண்ணீரைத்*

*துடைத்து) அண்ணா, உண்மை அன்புக்கு உலகில் இடமே இல்லையா, அண்ணா?*

**சுகதே** : *கொடிய உலகத்தைக் குழந்தைகள் போல நம்பி மோசம் போனது நமது குற்றம் அம்மா. நீ வருந்தாதே. நீ அவர்கள்மீது வைத்த அன்பை மீட்டுக் கொள்ளும் சக்தியை இறைவன் உனக்குத் தருவானாக!*

**கனி** : *ஆம்! அழியும் மனிதர்கள்மீது வைக்கும் ஆசையை ஆண்டவன்மீது வைத்தாலாவது ஆத்மசாந்திக்கு வழி உண்டண்ணா.*

**சுகதே** : *கலங்காதே. கனிமொழி! நிராசை ஏற்படும் போது தானம்மா நாம் துணிவை விடாமல் வளர்க்க வேண்டும்.*

**கனி** : *(யோசித்து) மணிவண்ணர் ஒருகாலும் இந்த அடாத பழிக்குக் காரணமாயிருக்க மாட்டா ரண்ணா!*

**சுகதே** : *யார் காரணமாயிருந்தாலென்ன? அரச குடும்பத் தின் சூழ்ச்சிக்கு இவனையும் ஒரு கருவியாக்கிக் கொண்டார்களே!*

**கனி** : *எல்லாம் அந்த ராணியம்மையின் சூழ்ச்சிகள்!*

**சுகதே** : *அவளுக்கும் தலைவன் ஒருவனிருக்கிறானம்மா.*

**கனி** : *அரசர் வீரசிம்மரா?*

**சுகதே** : *அவர் ஒரு பொம்மை! ஆடும்பாவை! பாவம்! ஆட்டுவிப்பவன் சர்வாதிகாரி. அம்முரடன் விரைவில் என் வாளுக்கு இரையாவது திண்ணம்.*

**கனி** : *அரண்மனையின் கோபம் நமக்கெதற்கண்ணா? மகா கொடியவர்கள்.*

**சுகதே** : *கனிமொழி! பாம்புகூடக் கொடியதுதான். அதற் காகப் பருந்து பறக்காமலிருக்க முடியுமா?*

**கனி** : ஞானமடைய விரும்பாதவர்களை நாம் எப்படியண்ணா திருத்துவது?

**சுகதே** : ஆந்தைகள் வெளிச்சத்தை விரும்பவில்லை என்பதற்காக, ஆதவன் உதயமாகாமலிருக்க முடியுமா? போர்முனை வேலை முடிந்த அன்றே அவனும் முடிவுறுவான்... இருக்கட்டும்.

**கனி** : சர்வாதிகாரி! அடிக்கடி கொள்கை மாறி உலகை ஏமாற்றி நாட்டைக் கெடுப்பதை அறிந்திருந்தும், பாமர மக்கள் அவனுக்கு இசைந்து தானே ஆடுகிறார்கள்.

**சுகதே** : என்னம்மா! நீகூட இப்படிச் சொல்லுகிறாய். அறியாமையிலே உழலும் மக்களுக்கு என்ன தெரியும்? அவர்கள் பண்டிதர் பேச்சையும் கேட்பார்கள், பைத்தியக்காரன் சொல்வதையும் செய்வார்கள். இருவருக்குமுள்ள வேறுபாட்டை அவர்கள் அறிந்த மறுகணமே இப்பித்தர் வாழ்வெல்லாம் பறந்து போகாதா!

*(கனிமொழி அழுகிறாள். ஒரு சேவகன் வணங்கி)*

**சேவ** : வாழ்க நம் வெற்றி! தலைநகரிலிருந் ஒரு தூதன் வந்திருக்கிறான்.

**சுகதே** : வரவிடு.

*(போக - கார்மேகன் நுழைந்து)*

**கார்** : எசமான்! வணங்கறேன்.

**சுகதே** : அடாடா. கார்மேகம், நீயா? என்னப்பா? எங்கு வந்தாய்?

**கார்** : எசமானைப் பார்த்து ரொம்ப நாளாயிடிச்சில்லே! பார்த்துட்டுப் போகலாமுன்னு வந்தேனுங்க.

**சுகதே** : செய்தி ஏதேனும் உண்டா?

**கார்** : நெறைய உண்டுங்க, எசமான். அரண்மனையிலே கனிவன மாளிகையிலே சதா அழுதுகிட்டே - இல்லீங்க - அவர்தானுங்க, அந்த நாடகக்கார அய்யா...

**சுகதே** : ஆமாம் - மணிவண்ணனும் அவன் தங்கையும்.

**கார்** : அவங்கதானுங்க இந்த ஓலையை உங்ககிட்டே கொடுத்துட்டு வரச்சொன்னாங்க! *(கனிமொழி வாங்க)* சதா உங்க நினைவாகவே இருக்காங்க, எசமான்!

**கனி** : *(ஓலையைப் பிரித்துப் பார்த்து)* அண்ணா, அவர் தான் உங்களுக்கு எழுதியிருக்கிறார். இதோ பாருங்கள் -

**சுகதே** : *(அலட்சியமாக)* உம். இனி என்ன எழுதியும் என்ன பலன்! முறிந்த மனம் ஒன்றுகூடப் போவதில்லை. படி, படி.

**கனி** : *(படிக்கிறாள்)* "அன்புமிக்க நண்பரே! எமது விதியின் பயணம், எதிர்பாராத பாலை நிலத்துக்கு இட்டுச் செல்லப்படுகிறது. சூதும் சூழ்ச்சியும் நிறைந்த சோதனை நரகிலே அமைதி யின்றி வாழ்கிறோம். செயலற்ற சவங்களாகி விட்டோம். தப்பும் வழிக்கும் சர்வாதிகாரி தடை செய்கிறான். திருமணத்திற்குமுன் ஒலிக்கும் வாத்தியங்கள் எம் காதில் மரணகீதம் போல் பாய்கின்றன. தங்கள் உதவியால் மீள விரும்பும் மணிவண்ணன் - சாந்தி"

**சுகதே** : *(கவனித்துக் கொண்டே, வெகுண்டு)* வெட்கங் கெட்ட வேலை! இளவரசியின் திருமணத்தை, சபையறிய, பெருங்குடி மக்கள் ஆமோதித்து, அழைப்பிதழ்களும் அனுப்பப்பட்டு விட்டன. இனிமேல் நான் இதில் தலையிட்டால், சுகதேவன் சுயநலங்கொண்டவன் என்று நாடே இழிவு படுத்தும் நாளை. மேலும், பகைவனின் படைகள்

எல்லைப்புறத்திலே முற்றுகையிட்டுள்ளன. இச் சமயத்தில் நான் போர்க் களத்தைவிட்டு நகர் செல்வேனாகில், எனது வீரர்கள் சிதறுண்டு போவார்கள். உம் நடப்பன நடக்கட்டும். விதிக்கு வேலி போட யாரால் முடியும்?

**கனி** : (பெரிதும் வருத்தத்துடன்) சாந்தியையாவது மீட்பது நம் கடமையல்லவா...? அவர் அரச குமாரியை மணந்தபின், பாவம், திக்கற்ற சாந்தி யின் கதி என்னண்ணா ஆவது?

**சுகதே** : அதற்கு நாமென்னம்மா செய்வது? எனது நிலை நீ அறியாததா? நான் இப்போது போர் முகத்தை விட்டுப் போக முடியாதம்மா!

**கனி** : உண்மை.... தாங்கள் போக முடியாதுதான்...

**சுகதே** : ஓ... அப்படியானால் நீ போய் வரலாம் என்று எண்ணுகிறாயா?

**கனி** : ஆம்! சாந்தியை மீட்டு வருவேன்.

**சுகதே** : கனிமொழி! உன் எண்ணப்படியே நீ தலைநகர் சென்று வரலாம்.

**கனி** : அண்ணா...

**சுகதே** : முடியுமானால் எனக்குப் பதிலாக, திருமண மண்டபத்துக்கும் நீ சென்று வருகிறாயா?

**கனி** : ஓ! அச்சமின்றிப் போவேன்!

**சுகதே** : சரி. உலக வழக்கப்படி நானும் ஒரு வாழ்த்துத் தருகிறேன். கொண்டுபோய்ப் படித்துக் கொடு. ஆனால், எச்சரிக்கை! வழியிலே உளவுப் படை களின் இன்னல் பல இருக்கும். நமது சிறையதி காரி கருணாலயரைத் துணையாக அழைத்துக் கொண்டு போ... வழி நெடுக சர்வாதிகாரி பலவித ஐந்தாம் படைகளைக் கொண்டு நாச வேலைகள் பல செய்வதாக அறிகிறேன்.

**கனி** : *ஆகட்டுமண்ணா.*

**கார்** : *எசமான்! அந்தப் பயலுடையு ஐந்தாம் படை வேலையையெல்லாம், நான் கண்டுபிடிச்சிட்டு தான் வர்றேனுங்க - நீங்க நகரத்துக்கு வந்த அடுத்த நாளே அவன் நரக சரித்திரம் முடிஞ்சு போவுமுங்க...*

**கனி** : *ஆகட்டும்! விரைவில் எல்லாம் நடைபெறும்.*

**கார்** : *நான்கூடப் பட்டாளத்திலே வந்து சேர்ந்துட றேன், எசமான்!*

**கனி** : *அடுத்த போரில் சேரலாம். சரி! போய்வா... கனிமொழி! இதோ என் வாழ்த்திதழ்!*

**(காட்சி 16 முடிவு)**

## காட்சி - 17

இடம் : கனிவன மாளிகையின் உப்பரிகை மீது.

காலம் : இரவு

*(மணிவண்ணனும் தங்கை சாந்தியும் கண்ணீர் பெருக விதியை நொந்து நிற்கிறார்கள். போர் முகத்திலிருந்து சுகதேவனின் உதவியை எதிர்பார்த்து ஏங்குகின்றனர்)*

**மணி** : சாந்தி... அழாதே, அம்மா! எப்படியும் நமது கடிதத்தைப் பார்த்ததுமே புறப்பட்டு விடுவார்கள்... எங்கும் தீவட்டிகள் சகிதம் காவலர்கள் உறங்காமல் நடமாடுகிறார்கள்.

**சாந்தி** : அண்ணா! அதோ பாருங்கள். யாரோ ஒரு முகமூடி வீரன் நம் மாளிகையை நோக்கி ஓடி வருவதை ஆ! வீரர்களோடு சண்டை போடுகிறான்...

*(இதற்குள் இருவீரர்களை எமனுலகு அனுப்பி விட்டு, கனிமொழி முகமூடியுடன், கையிலிருந்த ஒரு நூலேணியை உப்பரிகையின் மீது வீசியெறிந்து)*

**கனி** : உம். சீக்கிரம் - இறங்கி வாருங்கள்...

*(மணிவண்ணனும் சாந்தியும் இறங்கி வர)*

**மணி** : உஸ்.. பேச வேண்டாம் புறப்படுங்கள். நதிக்கரையில் குதிரைகள் தயாராகின்றன.

*(மூவரும் தப்பித்து ஓட, சர்வாதிகாரியின் வீரர்கள் விழித்துப் பின்தொடர்கிறார்கள். சர்வாதிகாரியும் ஓடுகிறார். அடுத்த காட்டில் காவலர்களையும் சர்வாதிகாரியையும் கனிமொழி எதிர்த்துச் சண்டையிட்டு முடியாமல் கடைசி*

*யாக வேறு புறத்திலிருந்துவந்த காவலர்கள் மணிவண்ணனையும், சாந்தியையும் பிடித்துக் கொண்டதால், முகமூடியோடு ஓடிவிடுகிறாள்.)*

**சர்வா** : *(மணிவண்ணனை விழித்துப் பார்த்து)* ஏன், மாப்பிள்ளையவர்களே! விடிந்தால் ராஜகுமாரி யின் பக்கலில், இந்திரன் போல் வீற்றிருக்க வேண்டிய நீ ஏன் இந்த இரவில் இப்படித் தப்பியோடப் பார்க்கிறாய்? ஏன், இளவரசியை மணக்கக் கசப்பாயிருக்கிறதோ? வா! தாலிக் கயிறும் தூக்குக் கயிறும் கைக்கு வருவது விதி வசத்தால்...

**மணி** : அய்யா! தமக்கு ஏனோ இப்பாவ மூட்டைகள்!

**சர்வா** : பேசாதே! தெய்வ சம்மதம். அதை நிறைவேற்று வது என் கடமை. உன்னைக் காக்க வந்த முகமூடி வீரன் யார்?

**மணி** : அது யாரோ...

**சர்வா** : எல்லாம் நானறிவேன். புறப்படு... எல்லாம் சுகதேவன் சூழ்ச்சிகள்; முதலில் அவனைத் தொலைக்கிறேன்.

**(காட்சி 17 முடிவு)**

# காட்சி - 18

இடம் : திருமண மண்டபம்

காலம் : காலை

நிகழ்ச்சி : அவசரத் திருமணம் - எதிர்பாராத புரட்சி

**வீரசிம்மன் :** நம் குருதேவரே விவாகத்தைத் தமது திருக் கரங்களால் நடத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

*(மாலையை எடுத்து மணிவண்ணனிடம் தர)*

**பெருங்குடி :** அரசே! சற்றுப் பொறுக்க வேண்டும். சேனாதி பதி சுகதேவர் வர இயலாததால், அவரது தங்கை கனிமொழிதேவியை அனுப்பியுள்ளார்கள்! அவர் கள் வந்ததும் விழாவை ஆரம்பிக்கலாம்.

**சர்வா :** கண்டவர்களுக்காகக் காலம் காத்திருக்குமா?

*(சர்வாதிகாரி தந்த மாலை மணிவண்ணனின் கையிலிருந்து கீழே விழுகிறது. இச்சமயத்தில் மாங்கல்யத்தையும் தருகிறான். மணிவண்ணனும் சாந்தியும் கண்கலங்கி நிற்கும் போது, கனிமொழி கையில் மாலைகளுடனும் வாழ்த்திதழுடனும் வருகிறாள். எதிர்பாராத இச்சம்பவத்தைக் கண்ட மணிவண்ணன் மாங்கல்யத்தையும் கீழே விட்டு விடுகிறான். சபையோரின் பார்வை, கனிமொழி யின் மீது திரும்பிய தருணத்தில் சர்வாதிகாரி மாங்கல்யத்தை இளவரசியின் கையில் போட்டு விட்டு அவரச அவரசமாக)*

**சர்வா** : உம். சரி. வேந்தே! திருமணம் முடிந்து விட்டது. நாட்டிய மண்டபத்துக்குப் புறப்படலாம். நீங்கள் ஆகவேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

*(வேந்தன் போகிறான்)*

**கனி** : *(துயரமும் துணிவும் கோபமும் சேர்ந்தெழ)* நில்லுங்கள் வேந்தே! பெரியோர்களே! போர் முகத்தில் எனது தமையனார் உங்கள் சேனாதிபதி, நெருக்கடியான நிலையில் எதிரிகளைச் சமாளிக்கிறார். அவர் வர இயலாமைக்குத் தம் வருத்தத்தைக் கூறச் சொன்னார். இதோ, அவரது வாழ்த்திதழ்... "பகைவர்களது கொடியைப் பார்த்த வண்ணம் எழுதுகிறேன். இளவரசியார் திருமணம் இனிது நிறைவேறட்டும். அவசரத் திருமணம் அழகாக வாழ்க! சேனாதிபதி சுகதேவன்"

*(வாழ்த்திதழை இளவரசியின் கையிலும், இரு மாலைகளை மணிவண்ணன் கழுத்திலும் போடுகிறாள். சபையில் சிரிப்பு. மணிவண்ணன் மற்ற மாலைகளைக் கீழே தள்ளிவிட்டுக் கனிமொழி தந்த மாலையை அன்புடன் போட்டுக் கொண்டதைக் கண்ட, ஊர்வசியும் சர்வாதிகாரியும் வெகுண்டு)*

**சர்வா** : பெண்ணே! அனுபவமற்ற சிறுமி என்பதை உன் அற்பத்தனத்தால் காட்டிவிட்டாயே!

**ஊர்வ** : பெரிய விபரீதத்தைச் செய்துவிட்டாளே!

**கனி** : என் கடமையை நான் செய்தேன். எனது இலட்சியம் நிறைவேறிவிட்டது.

**சர்வா** : சேனாதிபதியின் தங்கை என்பதால் உன்னை மன்னித்தேன்.

கனி : இல்லாவிட்டால் என்னை என்ன செய்ய முடியும்?

**சர்வா** : கத்திக்கு இரையாக்க முடியும்!

**கனி** : மக்கள் கத்திரிக்காய்கள் அல்ல.

**சர்வா** : முறைதவறி நடந்து சபையின் கண்ணியத்தைக் குறைத்துவிட்டாய். கட்டுப்பாட்டை மீறிவிட்டாய். இதற்கேற்ற தண்டனையை நீ பெற்றே ஆக வேண்டும்.

**ஊர்வ** : இவள் ஒரு சூனியக்காரி.

**கனி** : நீ ஒரு அநியாயக்காரி.

**சர்வா** : ஆ! ராஜத் துரோகம்.

**கனி** : நீ செய்தது ராணித் துரோகமா! அடே, வேஷக்காரா!

**சர்வா** : குருத்துரோகி! உன் பல்லைப் பிடுங்கி விடுவேன்.

**கனி** : அதற்கு முன்பே உன் தலை கிள்ளப்படும்; உயிர் கொய்யப்படும்; பொய்மை வெல்லப்படும்.

**சர்வா** : இங்கு உன்னை அழைத்தது யார்?

**கனி** : உன்னைவிட இங்குவர எனக்கு அதிக சுதந்திரமுண்டடா. மடையனே!

**சர்வா** : வெறிபிடித்த நாயே!

**ஊர்வ** : சனிபிடித்த பேய்! கோழி போல் கொக்கரிக்கிறாளே!

**கனி** : ஆம்! என் நாட்டுக்கு நான் விசுவாசமுள்ளவள். உறங்கிக் கிடக்கும் மக்களைக் கூவி எழுப்புவதே என் வேலை... மக்களே - பிரபுக்களே - இவனை நம்பாதீர்கள். உறங்காதீர்கள் - இவன் மகா அற்பன்.

**ஊர்வ** : பைத்தியக்காரி!

**கனி** : சுயநினைவுடன்தான் பேசுகிறேன்.

**சர்வா** : ஆ... இவள் வாயைக் கிழித்தாலும் குற்றமில்லை.

**கனி** : இதுதானடா துறவியின் வேலை?

**சர்வா** : மகாதேவி! சச்சிதானந்தம்!

**கனி** : அடே மடையா, புதிய பக்தா! மகாதேவி பெயரைக் கூறத் தகுதியற்றவனே! நயவஞ்சகப் பேயே! எம் நாட்டையே கெடுத்தாய் - வேட்டைப் புலியே, கொடிய மிருகமே! அடே, உன் கொடுமைக் காட்டில் எங்கள் துயர் நெருப்புப் பற்றிக்கொண்டது. அடே! இந் நாட்டையே நாசமாக்க வந்த ஐந்தாம் படையின் தலைவன் நீ என்பதை நன்றாக அறிந்து கொண்டோம். அயல்நாட்டின் உதவிபெறும் தேசத் துரோகி நீ!

**சர்வா** : பைத்தியம் முற்றிவிட்டது. ஆகா! அட! வீரர்களே! இந்த அடங்காப் பிடாரியைப் பாதாளச் சிறையில் கொண்டுபோய்த் தள்ளுங்கள்!

**கனி** : அடே! விரைவில் நீ முடிந்து போவாய். மக்களே! நாட்டின் கலைமணியையும் சாந்தியையும் காப்பாற்றுங்கள்.

*(வீரர் இழுத்தேக)*

**மணி** : அக்கிரமம்...

**பெருங்குடிகள்** : மோசம்.

*(உள்ளே சென்ற மன்னன் திரும்பி வந்து, நடந்தது ஒன்றும் புரியாமல் திகைக்க, கலவரத்தில் காட்சி முடிகிறது. எல்லோரும் போக, கார்மேகன் தனித்து)*

**கார்** : *(ஒருவனிடம்)* டே, நான் இங்கிருந்து பிரயோசனமில்லை. உடனே போர்முனைக்கு ஓடிச் சேனாதி

பதியை அழைத்து வரணும். கனிமொழியம்மா சிறையிலே இருக்கிறதினாலே ஆபத்தொண்ணு மில்லே - கருணாலய மகாப்பிரபு பாதுகாத்துக் கொள்வாரு! அடே கார்மேகம் நீயும் பார்த்துக்கப் போ, சிறைக்குப் போ ஆகட்டும். அடே, சர்வாதிகாரி! நீ சாகற வரையிலும் நான் சயனிக்கறதில்லை. இது சத்தியமான சபதம்...

*(ஓடுகிறான்)*

(காட்சி 18 முடிவு)

## காட்சி – 19

**இடம் : மணிவண்ணன் மாளிகை**

**காலம் : இரவு**

*(மணிவண்ணன் கலக்கத்துடன் உலவுகிறான்)*

**மேன :** *(வந்து)* உங்கள் எண்ணப்படிதான் கலியாணம் நடந்துவிட்டதே. இனியும் என்னைப் பார்க்க என்ன வெட்கம் உங்களுக்கு?

**மணி :** பெண்ணே! உன்னைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது.

**மேன :** சரி. வாருங்கள், துணைவரே! என் இளமை...

**மணி :** சீ! நானல்ல உன் கணவன். சர்வாதிகாரியின் சதி நீ. என் தங்கை சாந்தி எங்கே?

**மேன :** சாந்தி என் அறையில் இருக்கிறாள்.

**மணி :** கனிமொழி எந்தச் சிறையிலிருக்கிறாள்?

**மேன :** நானிருக்கையில் அவளை நினைப்பது பாவமல்லவா, நாதா?

**மணி :** சீ! குடிவெறியில் உளறாதே! கண்களைப் பார்.

**மேன :** கண்ணைப்பற்றிக் கவலையென்ன! ஆட்டின் கண்கள் அழகாயில்லை என்பதற்காக, அதை உண்ணாமலா விட்டுவிடுகிறார்கள்?

*(நெருங்குகிறாள். அவன் தள்ளுகிறான்)*

**மேன :** ஓகோ! அரசிளங்குமரியாகிய நான் இவ்வாறு நெருங்கி வந்தும் அலட்சியமா செய்கிறீர்!

**மணி** : *இனியும் நீ வம்பளந்தால் விபரீதம் விளைந்து விடும்.*

**மேன** : *நல்ல கதை ஒன்று சொல்லுங்கள். எது பெரிது - மதுவின் விழியா? மங்கையின் மொழியா?*

**மணி** : *இப்போது இந்த இரண்டையும்விட நீ தான் பெரியவள். போய்விடு.*

**மேன** : *மிரட்டாதே! நான் சட்டப்படி உன் மனைவி.*

**மணி** : *சீ! போய்விடு.*

**மேன** : *எச்சரிக்கை! மாவலிமையுள்ள மன்மதனின் படையை அழைத்து வந்திருக்கிறேன்.*

**சர்வா** : *என்ன தம்பீ! புறப்படு, தம்பதிகளை எதிர்பார்த்து இன்பக் கப்பல் காத்திருக்கிறது.*

**மணி** : *மூடத்தனத்தின் மொத்த உருவமே! அடி மடத் தனத்தை என்னிடம் காட்டாதே!*

*(மணிவண்ணன் ஒரு வாளை எடுத்துத் தாக்க, சர்வாதிகாரி போரிட்டு விலகி)*

**சர்வா** : *ஓ, வீரர்களே! கலைமணி கத்தி ஏந்தும் வீரராகி விட்டார். கடுஞ்சிறையில் போடுங்கள். உம். (கட்டி இழுத்துப் போகிறார்கள்)*

**(காட்சி 19 முடிவு)**

## காட்சி - 20

இடம் : புது மடாலயம்

காலம் : நள்ளிரவு

*(அரசனும் அரசியும் பேய்களை ஒழிக்க, சர்வாதிகாரியின் தேவி மடத்தில் பூஜை ஜெபித்து, குருவின் எதிரில் அமர்ந்திருக்கிறார்கள். வெளியே வாயிற்படியருகே கண்டாகர்ணன் காவல் புரிகிறான். இவர்கள் செயல் எல்லாவற்றையும் மேற்பார்வை புரிய அங்கு வந்துள்ளான் கார்மேகம். அவன் போர்முனைக்குச் சென்று, சுகதேவைக் கிளம்பும்படி செய்தபின், இங்கும் சாந்தியின் மீட்சிக்காக வந்து, தயாராயிருக்கிறான், ஒன்றும் தெரியாதவன் போல் கண்டாகர்ணனிடம் பேசுகிறான்.)*

**கார்** : ஏன் சாமி, சர்வாதிகாரி என்ன செய்யறாரு?

**கண்டா** : பேய்களை ஓட்றாரு.

**கார்** : எந்தப் பேய்களை?

**கண்டா** : ராசாப் பேயையும் ராணிப் பேயையும்.

**கார்** : இவங்க ஏனிப்படி ரெண்டு பேரும் பேயானாங்க...?

**கண்டா** : சர்வாதிகாரிக்கு வேலை வேணுமில்லே!

**கார்** : பேயின்னா என்ன நிறம்?

**கண்டா** : உன்னைப் போல கருப்பான பொருள்.

**கார்** : அடடா! உம்மைப் போலச் சிகப்பா இருக்கு முன்னில்லே நெனச்சேன்.

**கண்டா** : சரி பேயெல்லாம் இந்தப் பக்கந்தான் வருமென்றும், மடத்துக்குள்ளே வராமல் தடுக்கும்படியும் இந்த மந்திரக்கோல் தந்து, என்னை நிறுத்தியிருக்கார்.

**கார்** : பேய் இந்தப் பக்கமாவா வரும்? ஐயோ... பய மாகுதே!

**கண்டா** : பயப்படாதே...

*(சற்று தூரத்திலிருந்து தலைவிரி கோலமாகக் கருப்புச் சேலையோடு வந்த இளவரசியைப் பார்த்து)*

அதோ வருது, ஆமா வருது, ஆகா, மோகினி போல அழகாக ஓர் பேய் வருது.

**கார்** : சாமி, வந்துடுச்சிங்க, ஒரு மோகினிப் பிசாசு, அதோ பாருங்க! கருப்புப் பேய்! கரும்பூதம்! காட்டுப் பிசாசு!

**கண்டா** : சாமி - வரட்டும், வரட்டும். ஆமாம், மாயா மோகினிப் பிசாசு.

**கார்** : இளவரசி மாதிரி நடந்து வர்ர மாயத்தைப் பாருங்க.

**கண்டா** : அதுக்கெல்லாம் நானா ஏமாறுவேன். ஏ, பேயே! மரியாதையாகப் போயிடு - இங்கு வராதே.

**கார்** : வந்தே நீ தீய்ந்தே...

**கண்டா** : சொன்னா கேக்கமாட்டே! நீ வா...

*(ஓடி வந்த இளவரசியைக் கண்டாகர்ணன் தடி கொண்டு நன்கு தலையில் தாக்க, இரத்தம் பீறிடக் கீழே கதறி விழுகிறாள். ஊர்வசியும், சர்வாதிகாரியும் மன்னனும் உள்ளிருந்து வந்து)*

**சர்வா** : ஆ! அடே முட்டாள், இளவரசியடா!

**கண்டா** : மோகினிப் பேயின்னு நெனச்சேன், சாமி!

**ஊர்வ** : ஆ! என் கண்ணே! யார் உன்னைத் தாக்கியது?

**மேன** : அப்பா! அவன்தான்... மணிவண்ணன். நாடோடி நடிகன். அவன் என் கணவனல்ல - திருடன். கொலை செய்ய வந்தான். அவன் திருடன்.

**சர்வா** : கண்டாகர்ணா! உடனே ஓடு. அந்த நடிகனைக் கட்டி இழுத்துக்கொண்டு வா. சரி, ஊர்வசி! நீ குழந்தையை அழைத்துக்கொண்டு போ. *(போகிறாள்)* வீரசிம்மா! விரைவில் நமது தேவிக்கு, அச்சிறுமி சாந்தியைப் பலியிட்டு இந்தப் பேய்களை ஓட்டிவிடுகிறேன், அஞ்சாதே!

**வீரசி** : ஐயோ! கொலையா! அதுவும் பெண் கொலையா!

**சர்வா** : பேசாமலிரு! அன்னை கேட்கிறாள்!

*(கண்டாகர்ணன் மணிவண்ணனைக் கட்டி இழுத்து வர)*

**சர்வா** : அடே! நாடோடி நாயே! எங்கள் இளவரசியை உன் மனைவியென்றும் பாராது கொலை செய்ய வந்தது ஏன்?

**மணி** : சீ! கொடுமையின் பிரதிநிதிகளே! உங்கள் கொடுமையினின்றும் தப்ப வேண்டும் அல்லது உயிர் துறக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். எங்கே என் தங்கை சாந்தி? பிசாசே...! வீணனே...!

**சர்வா** : அடே! *(சவுக்கால் அடிக்க, இடையில் கார்மேகம் குறுக்கிட)* அடே, கண்டாகர்ணா! இவனையும் விரைவில் பாதாளச் சிறைக்கே கொண்டு போ.

**வீரசி** : ஐயோ, தேவரே! வேண்டாம்!

**சர்வா** : உஸ்... வேந்தே! உனக்கொன்றும் தெரியாது! போ! தேவி என்னை அழைக்கிறாள். பிறகு வா, பேசலாம்.

*(வேந்தன் போகிறான். கண்டாகர்ணன் மணி வண்ணனை இழுத்துப் போக, கார்மேகன் தொடர்ந்து சென்று விடுகிறான். சர்வாதிகாரி பூஜையில் அமர்ந்து கண் மூடுகிறான். சற்று நேரத்தில் கண்டாகர்ணன் தலைதெறிக்க ஓடி வந்து)*

**கண்டா :** *சுவாமி! வந்தது ஆபத்து! ஆபத்து...!*

**சர்வா :** *என்ன அது?*

**கண்டா :** *சேனாதிபதி சுகதேவன் யுத்தகளத்திலேயிருந்து இங்கே தலைநகருக்குப் புறப்பட்டு விட்டாராம். நம்ம இரகசியப் படையையும் கைது செய்து, நமது சுரங்கத்தின் சூழ்ச்சிகளையெல்லாம் கண்டு பிடிச்சுட்டாராம்! என்ன... என்ன செய்றது... ஐயோ சீக்கிரம் எழுந்திருங்கோ...*

**சர்வா :** *உம்... சரி (யோசித்து) தேவி! அடே, கண்டா கர்ணா! அந்த அறையில் உள்ள அந்தப் பெண் சாந்தியைத் தூக்கி வா.*

*(கண்டாகர்ணன் உட்சென்று மயக்கமாயிருந்த சாந்தியைத் தூக்கி வர, சர்வாதிகாரி பார்த்து)*

**சர்வா :** *ஆ! மயங்கியிருக்கிறாள். சரி. இந்தப் பெண்ணை சுகதேவன் மாளிகைக்குப் பின்புறத்திலுள்ள குளத்தில் போட்டுவிடுவோம். அவனைக் கொலை காரன் என்று பிரபுக்களிடையே பிரசாரம் செய்ய வசதியாயிருக்கும்.*

**(காட்சி 20 முடிவு)**

# காட்சி - 21

**இடம் : சோலை குளக்கரை**

**காலம் : பின்னிரவு**

*(சர்வாதிகாரி சாந்தியைக் குளத்திலே போடுகிறான். ஓடிவந்த சுகதேவன் தூரத்திலிருந்து இக்காட்சியைப் பார்த்து வந்து, குளத்திற்குள் குதித்து விடுகிறான். அதுதான் சமயமென்று சர்வாதிகாரி ஒரு பெரிய கல்லைத் தூக்கி அவன் தலையில் போடப்போகும் தருணத்தில், கார் மேகன் பின்புறமாக ஓடிவந்து கல்லைப் பிடுங்கி எறிகிறான். கண்டாகர்ணனும் சர்வாதிகாரியும் கார்மேகத்துடன் சண்டைப் போட்டுக் கொண்டு இருக்கையில் குளத்திலிருந்து சாந்தியை மீட்டுக் கொண்டு சுகதேவன் கரையேறி, இருவரையும் வாளெடுத்துத் துரத்திவிட்டுச் சாந்தியைக் கவனிக்கிறான்)*

---

சுகதே : *ஆ! கார்மேகம்! இப்பெண் மணிவண்ணனின் தங்கை சாந்தியல்லவா!*

கார் : *ஆமா, எசமான்! மயக்கம் கொடுத்திருக்காங்க. இதோ மூலிகை கொண்டு வர்ரேனுங்க! பயப் படாதீங்க! எப்படியும் பிழைக்க வச்சுடலாம்.*

சுகதே : *சீக்கிரம் மாளிகைக்குப் போய், சிகிச்சை செய்தபின், விரைவில் சிறைக்குப் போய்த் தங்கை கனிமொழியைக் காண வேண்டும்.*

கார் : *பயப்படாதீங்க, எசமான்!*

**(காட்சி 21 முடிவு)**

## காட்சி - 22

இடம் : சிறைச்சாலை - பாதளக்காவல்.

காலம் : மாலை

*(பின்னணி - கைதிகள் சோகக் கீதத்தை ஒலிபரப்பியபடியே பாடுகிறார்கள். ஒரு பகுதியில், மணிவண்ணனும் கனிமொழியும் அமர்ந்திருக்கிறார்கள். மணிவண்ணனது காயங்களுக்குக் கனிமொழி சிகிச்சை செய்து கொண்டிருக்கிறாள். ஏற்கெனவே சிறை நிர்வாகம், சுகதேவன் பிரதிநிதி கருணாலயன் வசமிருந்த தால், அங்கு கனிமொழிக்குச் சகல உரிமைகளோடு கைதிகளை நிர்வகிக்கும் பொறுப்பும் கிடைத்திருக்கிறது. கனிமொழியும் மணிவண்ணனும் கைதிகளை மகிழ்வூட்டப் பாடுகிறார்கள்)*

**(விருத்தம்)**

**மணி :** மனமே உன்வாழ்வே
இனிதாக வேண்டும்
மதியால் விதியை
வெல்வோம் நீ வாராய்
வீண்துயர் வேண்டாம்...

*பாடல்*

**கனி :** இன்பம் எங்கே இன்பம் எங்கே
**மணி :** என ஏங்காதே துன்பத்திலே
**கனி :** அன்பில் இன்பம் உயர்பண்பில் இன்பம் - ஆசை
தியாகத்திலேதான் அழியாத இன்பம் காண்பாய்
(இன்பம்)

*கருணா : (வந்து) அம்மா! உணவு முடிந்ததா...? மணி வண்ணருக்கு உடம்பு எப்படியிருக்கிறது?*

*கனி : அவருக்கு வேறொன்றும் குறைவில்லை. தங்கை சாந்தியைக் காணவேண்டுமென்ற ஏக்கந்தான் பெரிதாயிருக்கிறது!*

**கருணா :** இதோ, நான் சென்று சகல விவரங்களையும் அறிந்து வருகிறேன். *(முன்வந்து)* வீரர்காள்! ஜாக்கிரதை. சர்வாதிகாரியை எக்காரணம் பற்றி யும் சிறைக்குள் நுழைய விடாதீர்கள்.

**வீரர் :** ஆணை அண்ணலே! *(வணங்கிப் போதல்)*

**மணி :** *(எழுந்து)* கனிமொழி! என் பொருட்டு எவ்வளவு சிரமப்படுகிறாய்?

**கனி :** நமதிருவரது இன்னல்களும் வெவ்வேறு என்ற எண்ணம் இன்னும் நீங்கவில்லையா தங்களுக்கு?

**மணி :** கனிமொழி! சாந்தியை நாம் காணமுடியுமா?

**கனி :** அதிவிரைவில் காண முடியும். சரி, நான் மேற் புரத்திலுள்ள சிறைக்குச் சென்று, அங்கு நோய் வாய்ப்பட்ட கைதிகளுக்கு மருந்தளித்து வருகி றேன். அதுவரையில் இங்கு இருங்கள். விரைவில் கருணாலயரும் வந்துவிடுவார்.

**வீரன், நரசிம்மம் :** *(வந்து)* அம்மா! சாந்தியம்மா விரைவில் வந்து உங்களைச் சந்திப்பார்களென்று சொல்லச் சொன்னார்கள்.

**கனி :** பார்த்தீர்களா! நமக்கு ஒரு குறையும் வராது. நான் வரட்டுமா...?

**மணி :** போய் விரைவில் வா, கனிமொழி...!

*(ஒருபுறம் போகிறாள்)*

**கனி :** *(காவலர்களிடம்)* வீரர்களே! ஐயாவைக் கவன மாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நன்றாகத் தூங்கட்டும்.

**வீரன் :** ஆகட்டுங்க, தாயே...!

*(கனிமொழி போகிறாள். வீரர்கள் பணிகிறார்கள்)*

*(சர்வாதிகாரி பழிவாங்கும் பார்வையுடன் மணி வண்ணனது மரணதண்டனையை நிறைவேற்றி*

*ஓடிவிடலாமென்ற எண்ணத்துடன் வருகிறான். வீரர்கள் அவனைத் தடுத்து நிறுத்துகிறார்கள்)*

**சர்வா** : வீரர்களே! நான் உள்ளே போக வேண்டும்.

**நரசி** : முடியாது.

**வீரன் ஆறுமுகம்** : குற்றவாளிகளை மாத்திரந்தான் உள்ளே அனுமதிக்கும்படி உதவிச் சிறையதிகாரி கருணாலயப் பிரபு உத்தரவிட்டிருக்கிறார்.

**சர்வா** : அடே! நான் உங்களைப் சபிப்பேன்.

**வீரன் ஆறுமுகம்** : செய்யுங்க. சாமி... உங்க சாபத்துக்கு வாலிபம் குறைஞ்சு போச்சு.

**சர்வா** : *(விழித்து)* அடே! இதோ அரசரின் முத்திரை மோதிரம். எனக்குச் சகல அதிகாரத்தையும் அரசர் கொடுத்திருக்கிறார்.

**வீரன் நர** : அடேடே! மகாராசாவின் மோதிரத்தை நீங்க ஏன் எடுத்து வந்தீங்க...?

*(இதற்குள் மற்ற இரு வீரருடன் கார்மேகம் பிரவேசித்து)*

**கார்** : எசமானனே, வணக்கம், என்னா உங்க முகத்திலே சோக ரசம், வீர ரசம் - எல்லா ரசமும் சேர்ந்து வீசுதே! என்ன சங்கதி? உங்களை ரொம்ப சீக்கிரமா, அவசரமா, விரைவா, ஓட்டமா அரசர் அழைச்சுகிட்டு வரச்சொன்னார். சீக்கிரம் கிளம்புங்க.

**சர்வா** : அடே, வேலைக்கார நாயே!

**கார்** : அடேடே! பயலே, பார்த்தியா...! அடே, பிச்சைக் காரப் பரதேசிப்பயலே! அவ்வளவு திமிரா? போடா வெளியே! மரியாதை தெரியாத மரநாயே.

**சர்வா** : அவமானம். *(கட்டாரியை எடுக்கிறான்)*

**கார்** : *யாருக்கு அவமானம்? நீ ஐந்தாம் படையோடே போனது எங்களுக்கு அவமானம்.*

**வீரன் நர** : *(வாளையெடுத்து)* எச்சரிக்கை பெருச்சாளியே! போய்விடு - உம்.

*(சர்வாதிகாரி வெட்கித் தலைகுனிந்து போய் விடுகிறான்)*

**கார்** : நரசிம்மா! எங்கடா கருணாலயப் பிரபு?

**நரசி** : இப்பத்தான் வெளியே போனார். வந்துடுவார்.

**கார்** : சரி, கவனமாயிரு. நான் போயிட்டு வர்ரேன்.

**நரசி** : அடே ஆறுமுகம்! என்னடா! தினம் தினம் புதுமையாவே நடககுதுடா...

**ஆறு** : ஆமா, இந்த நாடகக்கார அய்யாவை எதுக்குடா சிறையிலே போட்டாங்க?

**நரசி** : அதெல்லாம் பெரிய எடத்து விஷயம்டா. இளவரசி ஏற்கெனவே ஒரு மாதிரியாம். அதை மறைக்கத்தாண்டா இவரைப் பேருக்கு மாலை போடச் சொன்னது. விஷயம் தெரிஞ்சதும் கோவிச்சுக்கிட்டாரு. உடனே கொலைக்குற்றம் சாட்டி உள்ளே தள்ளிப்புட்டாங்க.

**ஆறு** : அடே, இவருக்கு ஒரு தங்கச்சிகூட உண்டுடா, பேருகூட... என்னமோதானே...

**நரசி** : சாந்தியம்மா!

**ஆறு** : ஆமாண்டா!

*(இவர்கள் பேச்சை உற்றுக் கேட்ட கவி ஆனந்தரின் உள்ளத்தில், கடந்தகால நிகழ்ச்சியின் நிழல் படுகிறது. உடனே கவி, "சாந்தி! நல்ல பேரு" என்று சிரித்துப் பாடி ஆடி விளையாடு கிறார். இச்சமயத்தில் மகா கவி ஆனந்தர் வழக்கமான தமது பாட்டைப் பாடிக்கொண்டு*

*உலாவி வருகிறார். இவர்கள் பேசுவதைக் கவனிக்கிறார்)*

**நரசி** : அடே, ஆறுமுகம்! இதோ உன் நண்பர்.

**கவி** : *(ஆறுமுகத்தைப் பார்த்து நெருங்கி)* ஆ! ஆறு முகமாக! இவரா ஆறுமுகம்! ஆகா! முந்து தமிழ் மாலையணிந்த பெருமாளே! வரவேணும், வர வேணும். ஒரு முகந்தானா உமக்கு? மீதி ஐந்து முகங்களை எங்கே கழற்றி வைத்தீர்கள்? சொல்லுங்கள். வைத்த இடத்தை. ஓ! சரவணப் பொய்கையிலிருந்து சுமந்து வரக் கஷ்டமா யிருந்ததோ! ஏறுமயில் எங்கே? கூவிய கோழி எங்கே? பத்தினி வள்ளி எங்கே? பிரேமையின் தேவயானை எங்கே? பொன்வடிவேலுமெங்கே?

*(நெருங்கிப் பாதத்தை வணங்குகிறார்)*

**ஆறு** : அடே நரசிம்மா, என்னடா இது? பயமா யிருக்குடா! புடிடா இவரை!

**கவி** : வீரன் *(நரசிம்மனிடம் திரும்பி)* ஆ! நரசிம்ம மூர்த்தியா! ஆகா! இரணியனைப் பிளந்த கோளரியே வணக்கம். நரமிருக அவதாரமே! அன்று உமது சிங்க முகத்தில் தோன்றிய கோபம் இன்றும் இருக்கிறதே! *(ஈட்டியைப் பார்த்து)* இதேது? ஓ! பரசுராம அவதாரத்தில் ஏந்திய கலப்பையா இது! - ஆ... ஆனந்தம்! ஆனந்தம்! இது யார்? இதிகாச இராவணனோ? நான் யார்? குறட்டையில் கும்பகர்ணனோ? ஆம். நெடிய உறக்கம்! இன்னும் சீதையைச் சிறை மீட்க வில்லையா? நல்லவர் சிரிக்கவில்லையா? ஆனதோ வெஞ்சமர்; அலகில் கற்புடைய சானகி துயர் இன்னும் தவிர்ந்ததிலையே; போனதோ அரக்கர் தம் புகழும் ஆண்மையும். நானிதோ போகிறேன். விடையும் கொள்கிறேன். வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும், ஆரண

*முனிவர்க்கேற்ப அருமறை பயின்ற நாவும், தாரணி மௌலி பத்தும், சங்கரன் தந்த வாளும், வீரமும் களத்தில் போட்டு, வெறுங் கையோ டிலங்கை போனான்.*

**நரசி** : *அடே! புடிச்சிக் கட்டுடா... கத்தக் கூடாதுன்னு கனிமொழியம்மா சொல்லியிருக்காங்க.*

*(கட்டப்போக, கவியின் உள்ளம் உணர்ச்சியோடு கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கொந்தளிப்போடு உச்சரித்து தேம்புகிறது)*

**கவி** : *சாந்தி! சாந்தி!! வெள்ளை மயில் ஆடும். நீலமயில் அசையும். குயில் பாடும். கருடன், கழுகு முதலியன சந்தோஷம் தாங்காது 'கை' என்று சத்தமிடும். சாந்தி! சாந்தி! வாணி! வாணி!*

*(அலறிக் குமுற)*

*(மணிவண்ணன் இந்த அவலமான கலகத்தைப் பார்த்தவண்ணம் வந்து)*

**மணி** : *வீரர்களே! இவர் வாயை ஏன் கட்டுகிறீர்கள்?*

**நரசி** : *அடிக்கடி கத்தகூடாதுன்னு அம்மா சொல்லி யிருக்காங்க, எசமான்.*

**மணி** : *இவர் ஏன் அடிக்கடி 'சாந்தி' 'வாணி!' என்று கதறுகிறார்?*

**நரசி** : *இவர் செத்தாத்தான் எசமான் சாந்தி கிடைக்கும்.*

**மணி** : *அப்படிச் சொல்லாதீர்கள். இவர் யார்? எத்தனை காலமாக இங்கு அடைபட்டிருக்கிறார்? இவரைப் பற்றி உனக்குத் தெரியுமா?*

**நரசி** : *தெரியுமுங்க, எசமான். எனக்குத் தெரிஞ்சு இவர் இந்தச் சிறையிலேயே 16 வருஷமா அடை பட்டிருக்காருங்க. இவர் சாந்தி ஆசிரமத்திலே*

இருந்தாருங்க. இவர் ஒரு வரகவி. கலைமகள் அருள் பெற்றவராம். பிறகு...

*(இச்சமயம் கனிமொழி வருகிறாள்)*

**கனி** : என்ன அது...?

**மணி** : கணிமொழி! இப்பெரியவரைப் பற்றி முழு விவரமும் இவ்வீரனுக்குத் தெரியுமாம்.

**கனி** : அப்படியா? வீரனே, உனக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் ஒளிக்காமல் கூறு.

**மணி** : *(வீரனிடம் ஆவலாக)* உம்... பிறகு?

**நர** : பிறகு என்னங்க! இவர் வசந்தபுரியிலே குருகுலப் பள்ளிக்கூடத்து வாத்தியாராக்கூட இருந்தாருங்க. இவர் மகாகவின்னு கேள்விப்பட்ட சர்வாதிகாரி, தன் மேலே ஒரு காவியம் பாடணும்னு உத்தரவு போட்டானுங்க. இவர் முடியாதுன்னு கார சாரமா பதில் அனுப்பிச்சுட்டாரு. அந்தக் கோபத்திலே, சர்வாதிகாரி இவரை விலங்கு போட்டு இழுத்து வரும்படி கட்டளை போட்டுட்டானுங்க. இவரைக் கைது பண்ணும் போது, இவரோடு இரண்டு அழகான குழந்தை களிருந்த துங்க, அடாடாடா! என்ன அழகு! ராசாப் பிள்ளைகள் கூடத் தோத்துப் போயிடுமுங்க...

**கனி** : அப்படியா!

**மணி** : வீரனே! இவருடன் அன்று நீ பார்த்த குழந்தை கள் ஆணா, பெண்ணா? என்ன வயதுள்ளவை? யோசித்துச் சொல்.

**நர** : ஒன்று ஆணுங்க - இன்னொன்னு பெண்ணுங்க... வயது என்னாங்க... சுமார் அஞ்சு, ஆறு வயசிருக் குங்க அந்தக் குழந்தைகளை, ஒரே ஒரு தடவை முத்தமிட்டுட்டு வரணும்னு துடியாத் துடிச் சாருங்க. ஆனால் பாவி சர்வாதிகாரி அதுக்குக்குக்

*கூட நேரங்கொடுக்காம விலங்கு பூட்டி இழுத்து வரும்படி எங்களைச் சவுக்காலே அடிச்சானுங்க. அந்தக் குழந்தைகளைப் பிரிஞ்ச போது மண்டையிலே அடிபட்டுப் புடிச்ச பைத்தியந்தானுங்க இது. இன்னும் விடல்லே. என்னாங்க செய்யறது, எசமான்! நாங்க கூலிக்காரனுங்க.*

**கனி** : *அப்பா! நீ வருந்தாதே.*

**மணி** : *கனிமொழி ஒருவேளை... இவர்...*

**கனி** : *இவர்தான்.... உங்கள் தந்தையாயிருக்கலாமோ?*

**மணி** : *ஏனிருக்கக்கூடாது? கனிமொழி! இவுரது பைத்தியத்தைத் தெளியச் செய்வதற்கு ஒரு மார்க்கமும் தோன்றவில்லையா உனக்கு?*

**கனி** : *(யோசித்து) இவரோ ஒரு கவி. மேலும், சிறந்த ரசிகராயிருந்திருக்கிறார். ஏதாவது நல்ல பாடல் களைப் பாடிப் பார்ப்போமா?*

**நர** : *பாடிப் பாருங்க, அம்மா. இப்படிப் பைத்தியம் புடிச்சவங்க, பேய் புடிச்சவங்க எல்லாத்தையும் பாட்டுப் பாடியும், உடுக்கை அடிச்சியும் திருத் தறதை நானும் பார்த்திருக்கேன். ஏதோ பாடிப் பாருங்க. கடவுள் செயலிருந்தால் நல்லபடியா எல்லாம் முடியுமம்மா.*

**மணி** : *பாடு, கனிமொழி!*

**கனி** : *நாடகத்தில் உங்களுக்குப் பிரியமான பாட்டையே பாடட்டுமா?*

**மணி** : *ஏதாவது பாடு, கனிமொழி!*

**கனி** : *நீங்களும் பாடுங்கள். உங்கள் 'கனவு' நாடகத்தின் பாட்டு!*

*(சோகத்தால் வெதும்பி அயர்ந்து நடைப் பிணமென மயங்கிக் கிடந்தக் கவியின் அருகிற் சென்று இருவரும் அழகாகப் பாடுகின்றனர்)*

விதியை வெல்வோம் நாம்...
வீண்துரயம் ஏனோ? வீண்துயரம் ஏனோ?
*(விதி)*

வானமதி இரவியைப் போலே
ஞான ஒளியே பெறுவோமே!
வீணையொலி குழலிசையாலே
கீதமது எழுவது போலே
மோனமா மனதால் நாதமறிவோமே! *(விதி)*

*(மேற்படி பாட்டைத் திரும்பத் திரும்பிப் பாடும் போது ஏதோ ஒரு புதையலைக் கண்டு மிரள் வதைப் போல் பழங்கனவுகளையெல்லாம் எண்ணிப் பார்க்க முயற்சி செய்கின்றார்; சிந்திக் கின்றார்; ஏதோ முணுமுணுக்கிறார்)*

**கனி** : இதோ ஏதோ, சொல்லப் பார்க்கிறார். சரி தொடர்ந்து பாடுவோம்.

*(பாட்டின் தொடர்ச்சி)*

*(கடைசி அடியும் பாடுகிறார்கள். கவி அரை குறையாகப் பாட முயல்கிறார்)*

தாயெனவே நமைப்பா விக்கும்
தாயகமே தாரக மென்போம்
வாழி நேச தேசம் வாழி நலம்சூழ.
மாயை எனும் இருளதனாலே
மானிடனே மதி மயங்காதே
வாழ்க நேச தேசம்
வாழி நலம் சூழ

*(இந்த வரிகளை மட்டும் கவிஞர் ஒரு எழுத்து விடாமல் பன்முறையும் பாடித் திகைத்து ஆடித் தெளிந்து படிப்படியாகப் பைத்தியம் நீங்கிப் பின் நல்ல நிலை ஏற்படத் திடீரென உரத்த குரலில் அந்தச் சிறையெல்லாம் எதிரொலி செய்யக் கதறுகிறார்)*

**கவி** : ஆ எனது பாடல்! என் கனவு! நாடகங்கள்! எங்கே? காவியங்கள்! என் சாந்தி குருகுலம்...! என் சாந்தி குருகுலம்! சாந்தி! மணிவண்ணன்! ஆ! குழந்தைகளே! மழலைத்தேன் பொழியும் அழகு மணிச்செல்வங்களே! என் அன்பிதய விளக்கு களே! நீங்கள் எங்கே சென்றீர்கள்? வறுமைப் புயல் உங்களை விழுங்கி விட்டதா? அனாதை களாய் அலறி மடிந்தீர்களா? மணிவண்ணா! சாந்தி...! சாந்தி...! வாணி...! வாணி...! *(மயக்க முறுகிறார். அலறிய அதிர்ச்சியால்)*

**கனி** : *(பயந்து)* ஆண்டவா...! வீரனே...! ஓடு... கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா! - ஒருவர் போய் கருணா லயரை எங்கிருப்பினும் அழைத்து வாருங்கள்...?

*(தண்ணீர் தெளித்து மயக்கத்தைத் தெளிவித்துக் கொண்டிருக்கையில் சுகதேவன், கார்மேகன் இருவரும் வந்து)*

**சுகதே** : ஆ! கனிமொழி, கடுஞ்சிறையிலா உன்னை நான் காண வேண்டும்? ஆ... மணிவண்ணரா!

**மணி** : ஆம்!

**கனி** : அண்ணா, எங்களிருவரையும் தாங்கள் கண்டது ஒரு வியப்பல்ல. இதோ, உங்கள் நண்பரின் தகப்பனாரையும் கண்டுவிட்டீர்கள்.

**சுகதே** : *(கவிஞரை அணுகி)* யார் இவரா? மணி வண்ணரே! இவரா உங்கள் தந்தையா? பித்தம் தெளிந்து விட்டதா?

**கனி** : ஆம், அண்ணா! பலவிதமான முறைகளால் கொஞ்சம் தெளிவுற்றிருக்கிறார். ஆனால், முதலில் 'சாந்தி, சாந்தி' என்றுதான் அழைக்கிறார். சாந்தி இல்லாவிட்டால் இவர் தெளிவுற்றும் பயனின்றிப் போகும் போலிருக்கிறது.

**சுகதே** : சாந்தியை இறைவன் காப்பாற்றி விட்டான்.

**கனி** : *உண்மையாகவா?*

**மணி** : *எங்கே? தாங்கள் பார்த்தீர்களா?*

**சுகதே** : *ஆம். என் மாளிகையில்தானிருக்கிறாள். இனி அஞ்சாதீர்கள். விரைவில் சந்திக்கலாம். கருணாலயர் அங்குதான் இருக்கிறார். (கவிஞரிடம்) ஐயா...*

**கவி** : *சாந்தி....! சாந்தி...! ஆ! என் வாணி, தெய்வமாக நின்று தன் குழந்தையைக் காப்பாற்றி விட்டாள், வாணி! நீ என் துணைவியல்லம்மா! என் குலத்தின் தெய்வம்! உனக்கு நான் கொடுத்த வாக்கை நான் உயிரோடு இருந்தும் காப்பாற்ற முடியவில்லை. ஆனால், நீ வானுலகிலிருந்து உன் குழந்தையைக் காப்பாற்றி விட்டாய்! ஆம், மணிவண்ணன்...?*

**சுகதே** : *எல்லோரையும் காணலாம். அருகிலேயே இருக்கிறார்கள்.*

**கவி** : *ஆ! அருகிலா! என் மணிவண்ணன்... எனது அரசகுமாரர் இருக்கிறாரா...!*

**சுகதே** : *(பேராச்சரியத்துடன்) ஆம். இதோ, உமது மணிவண்ணன்.*

**மணி** : *ஆம், அப்பா நான்தானப்பா மணிவண்ணன்.*

**கவி** : *நீயா... என் மணிவண்ணன்? நீயா என் அரசகுமாரன்? (கையில் பச்சை பொறித்திருந்த பெயரைப் பார்த்து) சாந்தி...! ஆம்...! என் மணிவண்ணன்! என் மணிவண்ணன்! ஆ! மணிவண்ணா! கண்ணே!*

**மணி** : *ஆ! அப்பா...! அப்பா...!*

*(அலறி அழுது இதயம் விம்மித் துடிக்கிறான். ஆனந்தக் கண்ணீர் பொழிகிறான்)*

**கவி** : மணிவண்ணா! *(இறுகத் தழுவி அணைத்துக் கொண்டு கண்ணீர் நிறைய)* எங்கே உன் தங்கை சாந்தி...?

*(அவர் பெரிதும் எதிர்பார்த்து சாந்தியைத் தேடுவதால், திடீரென இல்லையென்று சொல்லக் கூடாதென எண்ணிக் கனிமொழி அருகில் வந்து)*

**கனி** : அப்பா! நான்தானப்பா தங்கள் சாந்தி...!

**கவி** : ஆ! என் சாந்தியா! எங்கே, கை எங்கே? *(நன்றாகப் பார்த்து)* என்னை ஏமாற்றாதீர்கள். என் உறக்கம் தெளிந்துவிட்டது. ஆ! எவ்வளவு பெரிய உறக்கம்! ஆ! சாந்தி...!

**சுகதே** : ஐயா! சாந்தி என் மாளிகையில்தான் இருக்கிறாள். முதலில், ஆண்டுக்கணக்காக ஓய்ந்து போன தங்கள் மனத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். பிறகு அனைவரையும் காணலாம், தங்கள் கனவும் நனவாகும். விதியின் சோதனையையும் வெல்லலாம். விதி, விதியை வெல்வோம்.

**கனி** : ஆம்! கனவு! எனது நாடகம், அதிலிருந்த பாட்டுத்தான் நீங்கள் பாடியது. நான் ஆவலோடு எழுதிய அற்புத நாடகம்! விதியை வெல்வோம் அதன் பாட்டு.

**சுகதே** : அதிருக்கட்டும். தங்கள் அரசகுமாரன் என்றீர்களே! அதென்ன? தயவு செய்து சொல்ல முடியுமா?

**கவி** : ஆ..! அது உயிர் போன்ற இரகசியம்.

*(சந்தேகத்துடன் பார்க்கிறார் சுற்றிலும்)*

**கனி** : பயப்படாதீர்கள்! பொய்யெல்லாம் மறையும் காலம் வந்துவிட்டது. இங்கு சூழ்ந்திருப்பவர்கள் அனைவரும் நமது நண்பர்கள் - நம்பத் தகுந்தவர்கள்.

சுகதே : ஆம். பயப்படாமல் தெரிவியுங்கள்.

கவி : இங்கு... பகைவன் ஆட்கள் யாருமில்லையே?

சுகதே : சந்தேகமே வேண்டாம். நாங்கள் காலஞ் சென்ற இந்நாட்டின் சேனாதிபதி சத்யதேவரின் குழந்தைகள்.

கவி : சத்யதேவர்... *(மிகவும் சிரமப்பட்டுச் சிந்தித்து)* அவர் என் அரிய நண்பர். அப்படியானால் உம் பெயர்...?

சுகதே : என் பெயர் சுகதேவன். இவள் என் தங்கை கனிமொழி. தயவு செய்து தங்கள் மனத்தில் உள்ளதைச் சொல்லுங்கள்.

மணி : ஆம், அப்பா... சொல்லுங்கள்.

கவி : *(நினைவுபடுத்தி)* உம். சுமார் பல பல ஆண்டுகளிருக்கும்; அழகு வெறி பிடித்த ஊர்வசியின் சதியால் எனது உயிர்க்குயிரான வாணி கொல்லப் பட்டாள் - தெய்வமாகி விட்டாள். அந்தத் தெய்வம் உடலால் மறைந்தாலும் என் உயிரின் உயிராக இருக்கிறாள். என் குழந்தைகளைக் காப்பாற்றிவிட்டாள். என் வாணி பிரிந்தபின் குழந்தைகளையும், குருகுலத்தையும் அதன் வாயிலாக நாட்டுப்பணியையும் பாட்டுப் பணியையும் செய்து வந்தேன். ஒருநாள் குருகுலத்திற்கு வந்து சர்வாதிகாரி என்னைக் கைது செய்தான். அதற்கு அரண்மனை வேலைக்காரனாகிய மணிவண்ணன் என்பவன், தன் குழந்தையைப் பலியிட்டு ஆத்மநாத சக்கரவர்த்தியின் குழந்தை அமரநாதராகிய இவரை என்னிடம் ஒப்புவித்து மாண்டு போனான். அவன் ஞாபகமாகவே இவருக்கு மணிவண்ணன் என்று பெயர் வைத்தேன். என் குழந்தை சாந்தி யோடு சொந்த மகனாகக் கருதி வளர்த்து வந்தேன். நான் கைதியானதும் இவர்கள் அனாதைகள் ஆனார்கள்.

சுகதே : என்ன ஆச்சரியம்! சரித்திரத்திலேயே, மன்னர் ஆத்மநாதர், மகாராணி, மன்னரின் மைந்தன், என் தந்தை சத்யதேவர், எல்லோருமே எதிரிகளால் கொலை செய்யப்பட்டதாக அல்லவா எழுதப் பட்டிருக்கிறது!

கவி : அனைத்தும் ராஜகுருவின் சூழ்ச்சிகள். அவன் பகைவனின் கையாள் - திருத்த முடியாத தேசத் துரோகி. இந்த நாட்டின் வரலாற்றையே தலை கீழாக மாற்றிவிட்டான். சர்வாதிகாரிகள். சரித்திரத்தையே சாப்பிட்டு விடுவார்கள். ராணி ஊர்வசி, எதிர் நாட்டு அரசகுமாரி! நம் மன்னரை வீணே வலைபோட்டுப் பிடித்தாள், காதகி.

கனி : ஆகா! இவ்வளவு அநியாயங்களையும் நாட்டு மக்கள் எப்படிப் பொறுத்துக்கொண்டிருந் தார்கள்.

கவி : அறியாமை நிறைந்த ஏழை மக்கள், உண்மை யறி யும் உணர்ச்சியற்றவர்கள் *(கசப்பும் வெறுப்பும் தோன்ற)* உண்மை உணரும் உணர்ச்சியற்ற வர்கள்.

சுகதே : என்ன விந்தை! எல்லாம் கனவு போலல்லவா இருக்கின்றன? விதியை வென்றுவிட்டோம்.

கவி : கனவு! ஆம், விதியை வெல்வோம். அதுதான் நான் எழுதிய நாடகம். அதிலிருந்து கடைசிப் பாட்டுத்தான் நீங்கள் பாடியது.

மணி : ஆம் அப்பா...!

கவி : அந்நாடகத்தில் கற்பித்த சம்பவங்கள்தான் நம்நாட்டுச் சரித்திரம்.

மணி : அப்பா! அந்த அமரகாவியம் புத்துயிர் பெற்றது.

கவி : எங்கே இருந்தது?

மணி : ஒரு பெரியவரால் கிடைத்ததப்பா...

**சுகதே** : அந்த நாடகந்தான் நம்மனைவரையும் இப்போது ஒன்று கூட்டியுள்ளது.

**கவி** : வாழ்க நாடகம்! இளவரசே, நான் உம்மைப் பிரிகையில் நீரும், சாந்தியும் சிறு குழந்தைகள்! இப்போது சாந்திகூட பெரிய பெண்ணகி யிருப்பாள், இல்லையா...?

**கனி** : ஆம், அப்பா...!

**கவி** : எங்கே என் சாந்தி? சாந்தி எங்கே அய்யா சாந்தி?

**சுகதே** : கனிமொழி, அழைத்துப்போ... இதோ நான் வருகிறேன். *(கவிஞர் கனிமொழி, மணிவண்ணரு டன் போக)* கார்மேகா! இதோ ஒரு கடிதம் தருகிறேன், அரசரிடம் கொடுத்து உடனே பதில் வாங்கி வா... நம் நாட்டுக்குப் புதிய உயிர் வந்து விட்டது.

**(காட்சி 22 முடிவு)**

# காட்சி - 23

இடம் : சர்வாதிகாரியின் அந்தரங்கச் சுரங்கம்.

காலம் : இரவு (ஐந்தாம் படை)

**ஐந்தாம் படை :** *காங்சி - யாங்ச்சி - சாமி! பயப் படாதிங்க, இதோ தங்கம் முப்பது கோடி - உம். தாமதம் வேண்டாம். தீ வையுங்க. வெடிக்கட்டும் - யுகப் புரட்சி! முடியட்டும் மக்கள் ஆட்சி - வெல்லட்டும் நமது சூழ்ச்சி! தீ பரவட்டும். உங்க ராமாயணத்தில் அனுமார், இலங்கையை எரிச்சமாதிரி செவப்பா எரியட்டும்! நாச வேலை நடக்கட்டும்! நாம் வாழா விட்டால் நாடும் வாழக் கூடாது.*

**சர்வா :** *புரட்சியாவது தீயாவது! வைத்த வெடி ஈரமாகி விட்டது! தலை தப்பினா போதும். அதுதான் இப்போதைய நிலைமை.*

**ஐ.படை:** *பயம் வேணாம், தலைவர்! பத்துக் கப்பல் இருக்கு. தப்பிப் போயிடலாம்.*

**சர்வா :** எனக்குப் பயம் இல்லை... மக்கள்...

**ஐ.படை:** *மக்கள் எங்கே இருக்காங்க? தங்கம் தந்தா... நாம் சொல்ற மாதிரி எல்லாம் தலையாட்டு வானுக.*

**சர்வா :** *சரி. நாம் இனி நமது நாச வேலையைக் கொஞ்ச காலத்துக்கு மரகதத் தீவிலிருந்துதான் நடத்த வேண்டும்.*

**ஐ.படை:** *தங்கி கப்ச்சி - அப்படியே செய்வோம். இங்கே யுள்ள நமது படைகளுக்கு நிறைய கோயில்*

கட்டிக் குடுத்திருக்கோம். தீவுலே நாம வெடி வச்சா இங்கே கோயில்... கூடாரமாகும்...

**சர்வா :** வாரும், போகலாம்.

*(அப்போது மேனகா வருகிறாள்)*

**மேன :** நானும் உங்களோடு வர்றேங்க, சாமி. எனக்கு வேறு யாரும் கதி இல்லையே!

**சர்வா :** சீ, மாயையான மடப்பெண்ணே! நிற்காதே! அன்று விளையாடிய காதலன் வேறு. இன்று உலகத்தையே எரிக்கக் கொதித்து நிற்கும் சர்வாதி காரி வேறு. உம், போய்விடு!

**மேன :** என்ன, இப்படிச் சொல்றீங்க...! நாமிருவரும்...

**சர்வா :** இருவராவது ஒருவராவது... போ! போ!

**மேன :** அன்பே என்றீர்கள் அன்று!

**சர்வா :** அன்பாவது! ஆட்டுக்குட்டியாவது! அடைந்த வரை வெற்றி! அனுபவித்தவரை சுகம்!

**மேன :** சரி. நான் போகிறேன். ஆனால், உன் இரகசியங் களை எல்லாம் அம்பலமாக்கி விடுகிறேன்.

*(போகிறாள். அப்போது சர்வாதிகாரி வெகுண்டு கொலைசெய்ய முயல)*

**கண்டா :** *(ஓடிவந்து)* சுவாமி! ராணி ஊர்வசிதேவி....

**சர்வா :** அப்படியா...! மூட்டைகளைக் கொண்டு போய் கப்பலில் போடு... சீக்கிரமாக நமது கப்பல் புறப்பட வேண்டும். சுகதேவன் வருவதற்குள் வெளியேற ஏற்பாடு செய்.

*(ஊர்வசி வருதல்)*

**ஊர்வ :** *(தனக்கு வேண்டிய பெருங்குடி மக்களுடன்)* சுவாமி...! இதோ, பெருங்குடி மக்கள் நம் பக்கம்!

*சர்வா* : *மகாகாளி! பெருங்குடி மக்களே! நம்புங்கள். நீங்கள் இங்கு வந்து பயனில்லை. நீங்கள் சென்று போர்க்களத்தில் எப்படியும் சுகதேவன் வீரர் களைப் பின் வாங்கும்படி செய்யுங்கள். உம்... போங்கள்! சரியான நேரம்...! காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுங்கள். நாட்டில் இதுபோன்ற யுத்த காலத்தில்தான் பணத்தை ஏராளமாகச் சேர்க்க முடியும். உங்களுக்கு வேண்டிய தங்கம் நான் தருகிறேன். போங்கள்!*

*(அனைவரும் கும்பிட்டுப் போக)*

**(காட்சி 23 முடிவு)**

## காட்சி – 24

இடம் : வேந்தன் பள்ளியறை.

காலம் : இரவு.

*(அங்கொரு கடிதம் கிடக்கிறது. எடுத்துப் பார்க்கிறான்)*

**வீரசி** : *(கடிதத்தைப் படித்தல்)* 'அப்பா! நான் அநியாய மாகச் சர்வாதிகாரியால் அழிக்கப்பட்டேன். அவன் என் வாழ்வை நாசமாக்கியவன். மணி வண்ணரை மணக்குமுன்னரே சர்வாதிகாரி என்னை அடிமையாக்கினான். இனி இவ்வுலகி லிருந்து என்ன பயன்? இனி என்னைத் தாங்கள் காண முடியாது. தற்கொலை செய்துகொண்டு விட்டாள் உங்கள் மகள். *(துடிக்கிறான். பேய் களின் ஒலி அவன் மனத்திலிருந்து கேட்கிறது)* ஆ! சர்வாதிகாரி அட மிருகமே! மகளே... உன் கதி இவ்வாறா முடியவேண்டும்! ஆ! எங்கும் ஒரே குழப்ப மயம்! எக்கமும் பயங்கரமும் என்னைச் சூழ்ந்து வாட்டுகின்றன! ஆண்டவா!

**ஊர்வ** : அரசே எதற்குக் கவலைப்படுகிறீர்கள்? இந் தாருங்கள் திராட்சை ரசம். இதை உண்ணுங்கள். மனமிறந்தால் இங்குத் துயரமில்லை. சகலத்தை யும் மறந்து நிம்மதியாகத் தூங்கலாம். காதல்தர நான்களிப்புத் தர கோப்பை! கலக்கமேன், அய்யனே!

**வீரசி** : சீ! பெண் பூதமே...! பேசாமலிரு! (பேயின் குரல் கேட்டுக் கலக்கமடைகிறான்)

**ஊர்வ** : ஆ! இத்தனை ஆண்டுகளாக என் அழகை அமுத மென அனுபவித்துவிட்டு, இப்போது வெறுத்தா பேசுகிறீர்!

**வீரசி** : *சீ. சிற்றின்பப் பேயே! உன்னிடம் நான் அனுபவித்தற்கு இன்பமென்றா பெயர்! சீச்சீ...! ஆ! உன் கூட்டுறவால் நான் செய்த கொலைகள் அனந்தம். ஒரு நாளாவது நான் ஆறுதலோடு இருந்ததுண்டா? எங்கும் சர்வநாசம்! எல்லையற்ற மோசம்!*

**ஊர்வ** : *நாதா! நமது பெயரும் புகழுங்கூடச் சரித்திரத்தில் இடம் பெறும். இராவணனும் துரியோதனனும் இந்திரனும் இல்லாவிட்டால் இதிகாசங்கள் சுவையுள்ள காவியங்களாயிருக்குமா? தீமை யில்லா விட்டால் நன்மைக்கு மதிப்பேது? நம் போன்ற கயவர்களை சிருஷ்டிக்காவிட்டால் கவிஞர்களுக்குத்தான் புகழேது? வீணில் வருந்தா மல் இதை அருந்துங்கள்.*

*(இரவு - நடு இரவு சமயம் பார்த்துப் பேய் வேடத்துடன் கார்மேகம் குதித்து)*

**கார்** : *வீரசிம்மா! இதோ, சுகதேவின் கடிதம். உண்மையை ஒப்புக்கொள். எங்குச் சென்றாலும் தொடருவேன். உன் நாட்டுக்குத் துரோகம் செய்யாதே ஊர்வசியை நம்பாதே!*

*(கடிதத்தை எறிந்துவிட்டு மறைகிறான்)*

**வீரசி** : *(பயந்து பதறி, நடுங்கி அதைப் படிக்கிறான்) "வேந்தே! அநீதி நிலைக்காது. சத்தியம் வென்றது. தாங்கள் என்னிடம் உண்மையை ஒப்புக்கொண்டு அரசியலை விட்டுவிடவேண்டும். இன்றேல், உம தண்ணன் மகன் அமரநாதனுடன் அரண்மனை முற்றுகையிடப்படும்"*

*இப்படிக்கு,*
**சுகதேவன்.**

*ஆம்! நான் எண்ணியது முற்றிலும் சரி. எனது அண்ணன் மகன் இருபது ஆண்டுகளாகவா பிழைத்திருந்தான்!*

**ஊர்வ** : பொய்! பொய்! பத்தினியாகிய என் வார்த்தையை நம்புங்கள். இதெல்லாம் சோம்பேறி சுகதேவின் சூழ்ச்சி. இதே கரங்களால், உம் மதனியையும் ஒரு வயதுள்ள இளவரசனையும் கொன்றேன் அன்று.

**வீரசி** : சீச்சீ! இருக்கும். அன்று நாடகத்தில் அப்படித் தான் நடித்தார்கள். மயக்கத்தில் உளறாதே!

**ஊர்வ** : வாருங்கள். நாம் குருதேவரிடம் செல்வோம்.

**வீரசி** : சீ! பேசாதிரு! உண்மையை நாடும் என் உள்ளத்தைக் கலைக்காதே.

*(சர்வாதிகாரி வர)*

**சர்வா** : வீரசிம்மா! எங்கே உன் துணிபு! சுகதேவன் சிருஷ்டித்தனுப்பிய புரட்சி என்னும் குட்டிச் சாத்தான் உன் மூளையை நன்றாகக் குழப்பி யிருக்கிறது. இந்தா இதை உண்டால் சகலமும் தீரும்...

*(மருந்து தருகிறான்)*

**வீரசி** : *(தடுத்து)* அடே! பாதக நாயே! எல்லாம் அறிந்தேன். என் மகள் உன் கொடுமைகளைக் கூறித் தற்கொலை புரிந்துகொண்டாளடா, சண்டாளா! ஐயோ! குற்றமற்ற என்னை இவள் காமுகனாக்கினாள். நீயோ கொடுங்கோலனாக் கினாய்! நான் குற்றமற்றவன். உங்கள் சூழ்ச்சிக்கு என்னைக் கருவியாக்கினீர்கள். ஆ...!

**ஊர்வ** : வாருங்கள், ஓடிவிடுவோம்.

**வீரசி** : சீ! நான் ஏன் ஓடவேண்டும்? என் அண்ணன் மகன் அமரநாதனைப் பார்த்த பின்னர் ஆறுத லோடு உயிர் விடுவேன்.

**சர்வா** : வேந்தே! என்ன? நரி தின்ற கோழியின் கறி யுண்ணப் பார்க்கிறாய்.

**வீரசி** : அடே, பாதகா! ஓடிவிடு.

**கார்** : *(ஓடிவந்து)* மகாராசா! சுகதேவ மகாப்பிரபு வந்துக்கிட்டிருக்காங்க! அவர் கடிதத்துக்குப் பதில் வர்லேன்னு காளியாயி மாதிரி வர்ராருங்க.

**வீரசி** : கார்மேகா! குற்றத்தை ஒப்புக்கொள்ள வேந்தன் தயாராயிருப்பதாகக் கூறி அழைத்துவா!

**கார்** : *(மகிழ்ச்சியோடு)* மகாதேவி...! சச்சிதானந்தம்...! *(போக)*

**சர்வா** : வீரசிம்மா! உளறுகிறாயென்று எண்ணினேன்.

**வீரசி** : உளறவில்லையடா உன்மத்தா! விழித்துக் கொண்ட மனச்சான்று பேசுகின்றது. இப்போது எனக்கு வேறொன்றும் வேண்டாம். யாராவது என்னருகில் இருந்து என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், ஆறுதலோடு உயிர் விடுவேன். அதற்குரியவன் சுகதேவன் ஒருவனே! அவன் வரட்டும்.

**ஊர்வ** : அப்படியானால் எங்களை அச்சுகதேவிடமா காட்டிக் கொடுக்கப் போகிறாய்?

**வீரசி** : *(கட்டாரி யெடுத்து)* சுகதேவிடமல்ல. கால தேவனிடமே காட்டிக் கொடுக்கிறேன்.

*(சர்வாதிகாரியைக் குத்தப் போகிறான்)*

*(ஊர்வசி குறுக்கே வந்து தடுக்க முற்பட்டுக் கட்டாரிக் குத்தை அவள் ஏற்றுச் சாய்கிறாள்; சாகவில்லை)*

**சர்வா** : அடே பாவி! என் காதலியைக் கொன்று விட்டாயே!

**வீரசி** : ஆ...! உன் காதலியா, நரகத்திலும் இணை பிரியாமலிருங்கள்!

*(அவனையும் குத்தப் போகக் கடைசியில் சர்வாதிகாரி கட்டாரியைப் பிடுங்கி அரசனைக்*

*குத்திடும் சமயம் சுகதேவும், மகாகவியும் மணி வண்ணனும் (அமரநாதன்) வீரருடன் வர சர்வாதிகாரி தப்பி ஓட முயல்கிறான். பலரும் அவனைத் துரத்திச் செல்கின்றனர். ஓடுகிறான். முக்கியமானவர்கள் அரசனிடம் தங்கி விடு கின்றனர்)*

**சுகதே** : ஆ... வேந்தே!

**வீரசி** : சுகதேவா! நான் குற்றவாளி. எனக்குத் தக்க தண்டனைதான் கிடைத்தது! எங்கே என் அண்ணன் மகன்?

**சுகதே** : *(மணிவண்ணனைக் காட்டி)* இதோ இவர்தான்! *(கவிஞரைக் காட்டி)* கவிஞரது பித்தந் தெளிந்த தால் தான் நாம் மன்னர் மைந்தரைக் காண முடிந்தது.

**வீரசி** : ஆ! என்ன! மணிவண்ணனா என் அமரநாதன்!

**சுகதே** : ஆம் அரசே! இவர்தான் மகா கவி ஆனந்தர். இவர் பித்தம் தெளிந்ததும் அமரநாதனை இன்னார் என்று சொன்னார்.

**கவி** : வேந்தே! இருபது ஆண்டுகளுக்கு முன் இந்த ஊர்வசியம்மையின் பொருட்டு, தாங்கள் தமது தமையனாரான ஆத்மநாத சக்கரவர்த்தியைக் கொன்றது உண்மைதானே.

**வீரசி** : ஆமாம்.

**கவி** : ஊர்வசியம்மையே! தாம் ராணியையும் ஒரு சிறு குழந்தையையும் சூழ்ச்சியாகக் கொன்றீர் களல்லவா?

**ஊர்வ** : ஆம்.

**கவி** : உம்... கொல்லப்பட்டது வேலைக்கார மணி வண்ணனின் குழந்தை. இவர்தான் அமரநாதர். வேலைக்காரன் சாகுந்தறுவாயில் இவரைச் சிறு

குழந்தையாக என்னிடம் ஒப்படைத்து இறந்து போனான். அவன் நினைவாகவே இவருக்கும் அப்பெயர் வைத்தேன் வேந்தே! இவர்தான் உமது அண்ணன் மகன்.

**வீரசி** : ஆ! மைந்தா! உன் தந்தையைக் கொன்ற பாதகன் நான் - மன்னித்துவிடு - சுகதேவ் மகுடத்தை எடுத்து வா! *(சுகதேவன் எடுத்து வர)* மைந்தா அமரநாதா இதைப் பெற்றுக்கொள்! எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள்.

**கவி** : செய்த குற்றத்தை உணர்ந்து வருந்தும் உங்களை ஆண்டவன் மன்னிப்பாராக. மனிதன் செய்யும் மாபாவங்களையெல்லாம் கழுவிப் புது மலர்ச்சி தரும் ஞான கங்கை கண்ணீர்! ஆண்டவா! என்னே உன் கருணை! மனிதன் கண்ணீரில் பாவங்கள் கரையட்டும்.

**வீரசி** : வணக்கம்! கவியரசே! சுகதேவ்!

**ஊர்வ** : கவியரசே! கடைசியாக என் முகத்தை ஒருமுறை கனிவுடன் பாருங்கள்! அடுத்த பிறவி ஒன்றிருந்தால் அவசியம் உங்களையே என் உயிராகக் கொள்வேன்!

**கவி** : இளமையின் வைராக்கியம்? இறப்பிலே அமைதியடையட்டும்; ஆண்டவா!

*(ஊர்வசியும் வீரசிம்மனும் இறந்து விடுகின்றனர்)*

**(காட்சி 24 முடிவு)**

## காட்சி - 25

இடம் : விசாரணை மண்டபம்

காலம் : பகல்

*(மகாகவி, இளவரசன் அமரநாதன், சுகதேவன், கார்மேகன் மற்றும் பலர் கூடி நிற்கிறார்கள். வீரர்கள் சர்வாதிகாரியை விலங்கிட்டு, அழைத்து வருகின்றனர். ஏற்கெனவே வீரருடன் போரிட்டதால் அவனது கொழுத்த மண்டையின் பல இடங்களிலிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கிறது. மாமிசப் பசிகொண்டு தன் முகத்தைத் தானே கிழித்து, தன் இரத்தத்தைத் தானே சுவைத்துப் பருகும் ஒருவெறிப் புலி போல் காட்சி யளிக்கின்றான். அவனது அலங்காரங்களெல்லாம், நீக்கப் படுகின்றன. அவனைக் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்க வேண்டுமென மக்கள் கொதித்துக் கூறுகின்றனர்.)*

**பெருங்குடி1 :** இம் மாபாதகனை உடனே கழுவிலேற்றிக் கொல்ல வேண்டும், அரசே!

**பெருங்குடி2 :** இவனது குள்ள நரி வஞ்சகத்தையும் ஓநாய் இதயத்தையும் எடுத்துக் காட்சிச் சாலையில் வைக்க வேண்டும் தளபதி!

**சுகவே :** பாதகத்தின் பிறப்பிடமே! கொடுமையின் இருப்பிடமே! சென்ற மகா யுத்தத்தில் நீ பனி நாட்டுப் பகைவருடன் கூடி ஒரு அந்நியனாகவே மாறி, இந்நாட்டின் சக்கரவர்த்தியான ஆத்மநாதப் பிரபுவையும், தளபதி சத்யதேவரையும் கொன்று, கடந்த இருபது ஆண்டுகளாக, நம் நாட்டையும் பண்பாட்டையும் நாசமாக்கின குற்றத்தை உன்மீது சாட்டுகின்றோம்.

**கவி :** மனிதா! நீ செய்த குற்றத்தையெல்லாம் ஒளிக்கா மல் நீதியின் முன்னிலையில் ஒப்புக்கொண்டு, உண்மையைக் காண வழி தேடுவதே தர்மம்.

*சர்வா* : சீ! வேதாந்தப் பித்தர்களே! யார் செய்தது குற்றம்? என்ன பிதற்றுகிறீர்கள்? எது தர்மம்? எது குற்றம்? பிறந்த நாட்டின் மீது பற்றின்றி, மத வெறி பிடித்து, எண்ணற்ற ஜாதிகளாய், கணக்கற்ற பிரிவுகளாய்ப் பேதம் பேசி, உலகத்தோடு ஒட்டி வாழத் தெரியாத வெட்டிகளாக வளர்ந்து, வீண் வம்பைப் பேசி, சொந்தச் சகோதரர்களையே நிந்தித்து அழிந்து போய்க்கொண்டிருந்த உங்களைச் சேர்க்கவே நாங்கள் இந் நாட்டைப் பிடித்தாள முயன்றோம். அது குற்றமா? வாழத் தெரியாத வீணர்கள் நீங்கள். நாங்களோ சிங்கம் போன்ற சூரர்கள். பொன் விளையும் இப் பூமியைத் தாய்நாடாகக் கொண்டும், தொழில் வளமற்ற தொழும்பர்களாய்த் தின்று கொழுத்துத் தூங்கும் திண்ணைச் சோம்பேறிகளாய், வந்தவர் போனவர்கட்கெல்லாம் உங்கள் வளநாட்டில் இடங்கொடுத்து, காலத்தைக் கொன்று, கள்ளுண்டு மயங்கிக் கிடந்த உங்களை நல்வழிப் படுத்தி நாகரிகத்தைப் புகட்டவே இந்நாட்டைப் பிடித்து ஆளத் திட்டம் போட்டோம். அது குற்றமா? அரசியல் வெற்றி பெற அயல்நாட்டு உதவியைத் தேடினோம். அது குற்றமா? பிற நாடுகள் விஞ்ஞானத்தில் நகரின்றி விளங்கு கின்றன. அதைப் போலவே இந்நாட்டையும் முன்னேற்ற உணர்ச்சியில் புதுப்பிக்க எண்ணியே என் வழியில் மாற்ற முயன்றேன். அது குற்றமா? எதுவும் குற்றமில்லை, அறிவற்றவனை ஆற்ற லுள்ளவன் அடிமை கொண்டு ஆள்வதே தர்மம். கோழைகளை வீரர்கள் கட்டியாள்வதே அரசியல் நியதி! கட்டுப்பாடற்ற உங்களை ஒன்றுபட்ட நாங்கள் ஒடுக்கி ஆள்வதே ஆட்சிமுறை. இதை அநீதியென்றோ குற்றமென்றோ எவரும் கூற முடியாது. பெற்ற தாய் நாட்டையே பிறர்க்கு விற்கும் பேடியர்கள் நீங்கள்! தன்னல மந்தைகள்...!

பேசிக்கொண்டே இருக்கும் ஒரு பொதுக் கூட்டம் உங்களை ஆட்டிப் படைக்கவே எங்கள் அறிவுப் படை உங்களை அடிமைப்படுத்தியது. எளியாரை வலியார் ஆள்வதே உலக சரித்திரத்தின் ஆரம்பப் பாடம்!

**கவி** : மனித உருக்கொண்ட பேய் நீ! சர்வாதிகார விஷம் உனக்குச் சரியாய் ஏறிவிட்டது. மண் வெறி பிடித்த உன்மண்டை மிகவும் பெருத்து விட்டது. அடே! நீதிமான் போல் பேசுகிறாயே. ஏதோ கால வித்தியாசத்தால் ஒரு நாடு வீழ்ச்சியுற்றால், அதை மேலும் சுரண்டி நசுக்கிப் பிழிவதுதான் நாகரிகத்தின் அழகா? உண்ட வீட்டிற்கு இரண்டகம் எண்ணிய துரோகி நீ. இதுதான் அரசியல் நாகரிகத்தை நிலைநாட்டுவோர்க்கு அழகா? கேவலம், நீ பதவி பெறுவதற்காக நாட்டையே அயலாருக்கு அடகு வைக்கத் துணிந்த துரோகி நீ. உன் கனவில் நீ கட்டிய கோட்டை தகர்ந்துவிட்டது. போரில் உன் சூழ்ச்சிப் படைகள் சிதறடிக்கப்பட்டன. முடிவில் வெற்றி எனதரும் நாட்டின் தேசபக்திப் படைக்குத் தான். நீதியும் நேர்மையும் எமக்கு உதவுகின்றன. அநீதியும் அக்கிரமமும் உங்களை அழிக்கின்றன. அயலான் அடிவருடும் நீ அறிவைப் பற்றிப் பேசுகிறாய்! கோட்டான் குயிலுக்கு இசை கற்றுக் கொடுப்பது இயற்கைக்கு மாறுபட்டது, உண்மைக்கே விரோதமானது. உலகம் பொறுக் காது அப்பனே!

**மணி** : அப்பா! இக்கயவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?

**கவி** : மக்களின் மனத்தில் என்னென்ன உதிக்கிறதோ, அவர்கள் ஆறுதலுக்கே இவன் தண்டிக்கப் படட்டும் இவன் மனத்தை மாற்றிக்கொண்டால்

மன்னித்துவிடலாம். பாவம்! அவனும் இந்த மண்ணில் பிறந்தவன்!

**மணி** : மக்களே! இந்தத் தேசத் துரோகியை என்ன செய்யலாம்?

**பெ.கு. 1:** கணக்கற்ற பெண்டிரைக் கற்பழித்த இக்கயவனின் கண்களைப் பிடுங்க வேண்டும், அரசே! அரசியலின் பேரால் நாட்டை ஏமாற்றினான். அக்கிரமத்தின் பேரால் அறிவைச் சூனியமாக் கினான். இவன் ஒரு இரட்டைத் தலைப்பாம்பு! பத்துத் தலைப்புலி! பொய்மையே கூறின புழுத்த இவன் நாக்கினை வெட்டித் தீயிட வேண்டும், நூறு கூறுகளாக.

**பெ.கு.2 :** ஏதேதோ கூறி, எங்கள் செல்வங்களைக் கொள்ளை யடித்த இவனை எண்ணாயிரம் ஊசிகளால் குத்தி, எண்ணெய் கொப்பறையில் தள்ள வேண்டும்.

**பெ.கு.3 :** மந்திர மாந்திரிகமென்றும், சீர்திருத்தமென்றும் நாட்டையே வதை செய்த இந்த அதிசய மனிதனை, நடத்தையற்ற அநாகரிகப் பிறவியைக் கொன்று இவன் இதயத்தையும் மூளையையும் காட்சிச் சாலையில் வைக்க வேண்டும், அரசே.

*(சர்வாதிகாரி சிறிதும் பொருட்படுத்தாது சிரிக்கின்றான்)*

**சுகதே** : இந்நிலையிலும் என்னடா சிரிப்பு? அடே! நீ கொள்ளையடித்த பொது மக்களின் செல்வங் களை யெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருக் கிறாய்?

**சர்வா** : அதைப்பற்றிய ஒரு வார்த்தையும் என் வாயி லிருந்து வராது.

**சுகதே** : அப்படியா! வீரர்களே, இவனைச் சித்திரவதை செய்து உண்மையை வரவழையுங்கள்.

*(சவுக்கடிகளால் மேலெல்லாம் இரத்தம் கசிய)*

**சர்வா** : *சுகதேவ்! என்னை அவமானப்படுத்தியதாக எண்ணமா? மக்களே! சுகதேவ்தான் சூழ்ச்சிக் காரன். எல்லைப் போரிலே கோட்டை விட்ட வன். எதிரியை நண்பன் என்றவன். எதிரி எல்லையைப் பிடித்த போது இராணுவம் இவன் கையில்தானே இருந்தது. தோல்வி வரக்காரணம் என்ன? எதிரியிடம் கையூட்டு வாங்கி, நாட்டிலே எரியூட்டி விட்டான்.*

**மக்கள்** : பேசாதே. அவரைப்பற்றி நாங்கள் அறிவோம். ஏமாற்றாதே. பொய்யை நம்பமாட்டோம்.

**சர்வா** : *நம்பமாட்டீர்கள்! என்னை நம்பவும் புரிந்து கொள்ளவும் உங்களுக்கு அறிவு கிடையாது. நீங்கள் பழமையின் பாண்டங்கள்! பகுத்தறிவற்ற வர்கள்! இந்தக் கவிஞன் யார் தெரியுமா? இவன் ஒரு கள்வர் தலைவன். காலஞ்சென்ற இந் நாட்டுச் சக்கரவர்த்தி இந்நாட்டின் இரகசியப் பொக்கி ஷத்தை இவனிடத்தில்தான் ஒப்படைத் தான். இது இருக்குமிடம் இவன் ஒருவனுக்கு மட்டும் தெரியும். அதை அறிந்து கொள்ள வேண்டும் என்றுதான் இவனை இத்தனை ஆண்டு உயிருடன் காப்பாற்றி வைக்கச் சொன்னேன்.*

**கவி** : *(சிரிப்பு)* விதியின் கடைசி விளையாட்டு இது! மக்களே, இவர் கூறுவது பாதி உண்மைதான்! காலஞ்சென்ற மன்னர் வெறும் நவரத்தினப் பொக்கிஷத்தை மட்டுமல்ல, இந்த நாட்டை அருள் வழிப்படி ஆளவேண்டுமென்ற சமதர்மச் செல்வமான புதிய ஆட்சி முறையையும் என்னிடம் ஒப்படைத்துள்ளார். அதையும் உங்கள் முன்னிலை யில் படைக்கச் சித்தமா யிருக்கிறேன். எங்கள் மக்களுக்கு நாங்கள் பதில் சொல்லிக் கொள் வோம். இப்போது நீ எங்களுக்குப் பதில் சொல்லா மல் தப்ப முடியாது! சத்தியத்தை விழுங்க முடியாது அப்பனே!

**சுகதே** : உன் பேச்சு வன்மைக்கு மக்கள் மயங்கும் காலம் மலையேறி விட்டது. உண்மையைக் கூறிவிடு. உன்னுடன் அழிவு வேலை செய்து உழைத்த மற்ற ஐந்தாம் படைகளை எல்லாம் எங்கே அனுப்பினாய்? உண்மையைக் கூறிவிடு.

**சர்வா** : *(சிரிப்பு)* அவர்கள் தப்பிச் சென்ற கப்பல் இந்நேரம் பனிக்கடலைக் கடந்திருக்கும்.

**சுகதே** : கனவு காணாதே! அத்தனை பேரும் கைதிகளாகி விட்டனர்.

**சர்வா** : *(சிரிப்பு)* வருந்தவில்லை. ஒருசிலர் போனால் என்ன? எங்கள் திட்டம் மறுப்டியும் எரிமலை யூற்றாய்ப் பெருகும். எத்தனை கோடி உயிர் கொடுத்தேனும் இந்த நாட்டை என்றேனும் ஒருநாள் அடிமை கொண்டே தீருவோம். நான் ஒருவன் போகலாம். ஓராயிரம் சர்வாதிகாரிகள் உங்களை ஒழிக்கக் கங்கணம் கட்டிவிட்டார்கள். என்றேனும் ஒருநாள் உங்கள் கோட்டையில் எமது கொடியை ஏற்றியே தீருவார்கள். அவர்கள் எங்கும் இருக்கிறார்கள். ஏன்? இங்கே கூடச் சிலர் இருக்கிறார்கள். என்னை என்ன செய்ய வேண்டுமென்று எண்ணுகிறீர்களோ அதை விரைவில் செய்து கொள்ளுங்கள்! எங்களுக்கு உயிர் பெரிதல்ல, உள்ளத்தின் இலட்சியமே பெரிது.

**சுகதே** : என் பொறுமை எல்லை மீறுமுன் சொல்லிவிடு, உன் இரகசியத்தை எங்கே உன் முன்னணி ஒற்றர் படை?

**சர்வா** : என் ஒருவனை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என் தோழர்களைக் காட்டிக் கொடுக்கும் எண்ணத்தின் ஒரு சிறு அணுவைக்கூட எங்கள் இரத்தத்தில் காண முடியாது, ம்....

**சுகதே** : மக்களே! உணர்ந்துகொள்ளுங்கள். எதிரி ஒரு பேயன்தான் என்றாலும், அவனது கட்டுப் பாட்டையும் கூட்டுப்பற்றையும் கட்டுவிடா உறுதியையும் நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

**சர்வா** : உங்களுக்கு அது ஏது? நெல்லிக்காய் மூட்டை களே!

**சுகதே** : உண்மையைக் கூறிவிடு... இல்லையேல் அதே பார். பழுத்துச் சிவந்து கொதித்துக்கொண்டிருக் கின்றன இரும்பு ஈட்டிகள்! அவைகளின் கொடூரம் உனக்குத் தெரியுமா?

**சர்வா** : எனது இருதயத்தைவிடவா?

**சுகதே** : *(வாளை உருவி)* அவ்வளவு கொடுமையானதா உன் இதயம்!

*(கொல்லப் போகும் போது கவிஞர் தடுக்கிறார். பக்கத்திலிருந்த வீரனது, கத்தியைப் பிடுங்கித் தற்கொலை செய்துகொள்கிறான் சர்வாதிகாரி)*

**கவி** : ஆண்டவனே! இவனையும் மன்னித்துவிடு! வாருங்கள் செல்வோம்!

**(காட்சி 25 முடிவு)**

## காட்சி – 26

இடம் : அரண்மனை

**சுகதே :** பெரியோர்களே! காரிருள் அகன்றது. கதிரொளி வந்தது! இன்று முதல் நமது நாட்டில் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும். தாயின் மணிக்கொடியின் கீழ் முதல் தலைவராக வீற்றிருக்கும் பெருமை, நமது மகாகவி ஒருவருக்கே உரியது. அவரே நமது நாட்டின் தந்தை. விடுதலை வீரவிழாவின் தலைவர். வாழ்க மகாகவி! வாழ்க நம் தலைவர்!

**கவி :** என் அருமை மக்களே! பெரியோர்களே அரசன் என்றொரு தனிப் பதவி தேவையில்லை. நாட்டின் நம்! ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு குடியரசாக விளங்கும் அளவுக்கு, மக்கள் பொறுப்புள்ளவர்களாக வாழ்ந்து நாட்டைக் காப்பது நம் கடமை. சுதந்திரம் பெற்றது பெரிதல்ல - அதைக் கட்டிக் காப்பது கடினமான காரியம். சுதந்திரம்! நம் வாழ்வின் ஜீவன்! நாகரிகத்தின் சின்னம்! சுயமரியாதையின் ஆத்மா! வீரத்தியாகிகளின் வெற்றிப் பரிசு! இதைக் கண்ணும் கருத்துமாகக் காப்பது நம் கடமை! இந்தக் கடமையிலிருந்து நாம் தவறினால், நாளை நம்மைச் சரித்திரம் கேலி செய்யும்! தர்மம் தண்டிக்கும்! நீதி தூக்கிலேற்றும்! மனச்சாட்சி சபிக்கும்! மனித இனமே நம்மைச் சீ என ஒதுக்கித் தள்ளிவிடும்! எச்சரிக்கை! சுதந்திரம் நம் உயிரின் உயிர்! உணர்வின் உணர்வு! அந்த உணர்வுதான் நம்மையும் நம் சந்ததிகளையும் காக்கும் ஜீவசக்தி! வாழ்க சுதந்திரம்! வளர்க நம் நாடு! வாழ்க நல் உலகம்!

**( உள்திரை விலகுகிறது )**

## காட்சி - 27

இடம் : ஆசிரமம்

*(மகாகவி ஆனந்தர் ஒளிப்பிழம்பையும் 'ஓம்' என்ற மந்திரத்தையும் பணிந்து நிற்கின்றார். மக்கள் சூழ்ந்து மணமலர்களை அவர் பாதங்களில் சூட்டுகின்றார்கள். அதைப் பணிவோடு தடுக்கின்றார்)*

*('குடியரசின் தலைவர் கவியரசர் வாழ்க!' என்ற வாழ்த்தொலி கள் வானைப் பிளக்கின்றன)*

*(இளந்தம்பதிகள் இருவரும் (கனிமொழி - மணிவண்ணன், சுகதேவன் - சாந்தி) நாட்டுச் சரித்திரத்தின் மாற்றத்திற்கே காரணமாக 'கனவு' என்ற அந்நாடகச் சுவடியை ஒளிப்பிழம்பின் முன் வைத்து வணங்கிப் பின் வரும் பாட்டைப் பாடுகின்றனர்)*

**பாடல்**

விதியை வெல்வோம் நாம்
வீண்துயரம் ஏனோ? வீண்துயரம் ஏனோ?
***(விதியை)***

வான மதி இரவியைப் போலே
ஞானஒளியே பெறுவோமே!
வீணை ஒலிகுழலிசை யாலே
கீதமது எழுவது போலே
மோனமா மனதால் நாதமறிவோமே
*(விதியை)*

**கவிஞர் :** விதியை வென்றோம் நாம்
வீண் துயரம் வேண்டாம்
வீண் துயரம் வேண்டாம்

**அனைவரும் :**

தாயெனவே நமைப் பாலிக்கும்
தாயகமே தாரகமென்போம்
வாழி நேச தேசம்! வாழி நலம் சூழ!

*கவிஞர் மீது மலர்மாரி பொழிகின்றார்கள். கனிமெ தீபவொளியைத் தூண்டுகின்றான். சுடர்விட்டு ஒளிவீ பிழம்பை வணங்கி அனைவரும் வழிபடக் காட்சி நாடகமும் நலமே நிறைவு பெறுகின்றன.*

வாழி நலம் சூழ! வாழ்க நல்வையகம்

முற்றும்